விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
email: valampurii@yahoo.com

ங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 புரட்டாதி 14 வியாழக்கிழமை (01.10.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 286

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144.
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# விசாரணைகளை நடத்தக் கூடிய கட்டமைப்பு இலங்கையில் இல்லை

## மனித உரிமை ஆணையாளர் சுட்டிக்காட்டு



(ஜெனிவா)

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தக் கூடிய நீதிமன்றக் கட்டமைப்பு இலங்கையிடம் கிடையாது என ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் சயிட் அல் ஹுசெய்ன் தெரிவித்துள்ளார். இலங்கையில் உள்ள நீதிமன்றக் கட்டமைப்பு யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பிலான விசாரணை நடத்தக்கூடிய அளவுக்கு பொருத்தமானதல்ல எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## மோட்டார் குண்டு நேற்று மீட்பு

(மீசாலை)

மீசாலைப் பகுதியில் வளவொன்றிலிருந்து மோட்டார் குண்டொன்று, நேற்று புதன்கிழமை மீட்கப்பட்டுள்ளதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர். வளவை துப்புரவு செய்தவர்கள் குண்டை கண்டு பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்தமையையடுத்து, குண்டு செயலிழக்கும் பிரிவினருடன் சென்று குண்டை மீட்டதாக பொலிஸார் கூறினர். (எ-11)

## மனித உரிமையை பாதுகாக்க புதிய வேலைத் திட்டம் ஆரம்பம்

### ஐ.நாவில் ஜனாதிபதி உரை

(ஜெனிவா)

மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு புதிய வேலைத்திட்டம் ஒன்றை ஏற்படுத்துவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று இரவு இலங்கை நேரப்படி 7.30 மணியளவில் ஐ.நாவின் 70-வது பொதுச்சபைக் கூட்டத் தொடரில் தனது பிரதான 23ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கை மீதான விவாதம் ஜெனிவாவில் தொடங்கியது

(ஜெனிவா)

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் மனித உரிமைகள் நிலை குறித்த விவாதம் நேற்று ஆரம்பமாகியது.

ஜெனிவாவில் உள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை நேரப்படி, மாலை 6 மணியளவில் இந்த விவாதம் ஆரம்பமாகியது.

இந்த விவாதத்தின் தொடக்கத்தில், ஐ.நா மனித உரிமை ஆணையாளர் செயிட் ராட் அல் ஹூசேனின் அறிக்கை, காணொலி மூலம் திரையிடப்பட்டது.

ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து அதற்குப் பதிலளிக்க இலங்கைக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது.

ஜெனிவாவுக்கான இலங்கைப் பிரதிநிதி ரவிநாத ஆரியசிங்க, ஐ.நா மனித 23ஆம் பக்கம் பார்க்க....

## பேருந்துகள் மோதி விபத்து 35 பேர்வரை படுகாயம்





(மல்லாவி)

மல்லாவியில் இரு பேருந்துகள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் 35க்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்று இரவு 6.45 மணியளவில் ஒட்டுஅறுத்தகுளத்துக்கு அண் 24ஆம் பக்கம் பார்க்க....

## சர்வதேச விசாரணையே தமிழர்களின் நம்பிக்கை

### கஜேந்திரகுமார் ஐ.நாவில் உரை



(ஜெனிவா )

நியாயமான பொறுப்புக் கூறலும் நீதியும் முழுமையான சர்வதேச விசாரணை ஒன்றின் மூலமாக பெற்றுக் கொள்ளப்படும் என தமிழ் மக்களின் திடமான நம்பிக்கை என தமிழ்த் தேசிய மக்கள் முன்ன 23ஆம் பக்கம் பார்க்க....

## சந்திரிகா மீது தாக்குதல் இருவருக்கு 300 வருடசிறை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை கொலைசெய்ய முயற்சித்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவருக்கு நீண்டகால கடூழிய சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

வேலாயுதன் வரதராஜா மற்றும் ரகுபதி சர்மா ஆகிய இருவருக்கும் தலா 290 மற்றும் 300 வருடங்கள கடூழிய சிறை தண்டனை விதித்து கொழும்பு மேல்நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்தது.

இந்த சிறை தண்டனைகள் முப்பது ஆண்டுகளில் கழிக்கப்படும் எனவும் நீதிபதி அறிவித்தார்.

போதிய ஆதாரங்கள் இல்லாத காரணத்தால் இதே வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த ரகுபதி சர்மாவின் மனைவி வசந்தி விடுவிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை தண்டனை விதிக்கப்பட்டுள்ளவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாக தீர்ப்பை அளித்த நீதிபதி பத்மினி ரணவக்க அறிவித்தார். 24ஆம் பக்கம் பார்க்க....

## தந்தையரை விடுவிக்க கோரி பிள்ளைகள் ஆர்ப்பாட்டம்

### முதலமைச்சரிடம் மகஜரும் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

சிறைச்சாலைகளில் தடுத்து நீண்டகாலமாக எவ்வித விசாரணையும் இன்றியும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது தந்தையரை விடுவிக்க கோரி நேற்றைய தினம் காலை பத்து மணியளவில் யாழ். மாவட்ட செயலகம் முன்பாக அரசியல் கைதிகளின் பிள்ளைகள் ஆர்ப்பாட்டம் ஒன்றினை மேற்கொண்டனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம முன்பாக நேற்று இடம்பெற்ற இந்த கவனயீர்ப்பு நடவடிக்கையில் கலந்து கொண்ட சிறுவர்கள் அங்கிருந்து முதல 24ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கைக்கு உதவுவதற்கு அமெரிக்கா முன்வருகை

### ஜனாதிபதியிடம் தெரிவித்தார் ஒபாமா

(கொழும்பு)

இலங்கைக்கு தனது அரசாங்கம் முழுமையான உதவிகளை வழங்கும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா உறுதியளித்துள்ளார்.

ஐ.நாவின் 70-வது பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா வை சந்தத்து பேச்சு நடத்திய போதே, அவர இவ்வாறு உறுதி வழங் கியுள்ளார்.

அத்துடன், இலங்கையில் நல்லாட்சி மற்றும் 24ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சட்டவிரோதக் கும்பல் அடாவடி முறைப்பாட்டை ஏற்க பொலிஸ் மறுப்பு

## சுன்னாகம் மக்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

வாள்வெட்டு கும்பல் குறித்து சுன்னாகம் பொலிஸாரிடம் முறையிடப்பட்ட போதிலும் அவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும், முறைப்பாட்டினையும் பதிவு செய்யாமல் சமாதானமாக போகுமாறும் கூறி அனுப்பியதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கந்தரோடை மடத்தடியில் நேற்று முன்தினம் காலை பணம் கொடுக்கல் வாங்கலில் இருபகுதியினரிடையே வாக்குவாதம் இடம்பெற்று பின்னர் அது கைகலப்பிலும் முடிந்தது. இதன் தொடர்ச்சியாக அன்று இரவு 7.30 மணியளவில் பதினைந்து பேர்கொண்ட சமூக விரோத கும்பல் ஒன்று மடத்தடியில் உள்ள வீடொன்றுக்குள் வாள்கள் மற்றும் பொல்லுகளுடன் அத்துமீறி உள்நுழைந்துள்ளது.

இவ்வாறு உட்செல்லும் போது தாம் கொண்டுவந்த வாள், கோடரி மற்றும் பொல்லுகளினால் வீட்டின் முன்வாயில் கதவினை அடித்து சேதமாக்கி பின்பு வீடினை சுற்றி அடைக்கப்பட்டுள்ள தகர வேலிகளையும் உடைத்து நாசம் விளைவித்துள்ளனர். இதனால் அச்சமடைந்த வீட்டார் வீட்டை விட்டு தப்பியோடியுள்ளனர்.

பின்பு ஊர்ப்பகுதி மக்கள் ஒன்று கூடி எதிர்ப்பு தெரிவிக்க தாக்குதல் நடத்திய சமூக விரோத கும்பல் அங்கிருந்து தப்பி சென்றுள்ளது. சம்பவம் தொடர்பில் உடனடியாகவே பொலிஸாரின் அவசர தொலைபேசி இலக்கமான 119 இலக்கத்துக்கு முறையிடப்பட்டது. அதனை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு சுன்னாகம் பொலிசார் வந்துள்ளனர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு விட்டு நாளை காலை ஐநேற்று காலைஸ சுன்னாகம் பொலிஸ்நிலையத்திற்கு வருகை தருமாறு கூறியுள்ளனர். அதன்படி நேற்று காலை பொலிஸ் எட்டு மணியளவில் வீட்டார் பொலிஸ் நிலையம் சென்றனர்.

அப்போது முறைப்பாடு பதிவு செய்வதற்கு இங்கு யாரும் இல்லை. ஆகையால் ஒரு மணித்தியாலம் கழித்து வருமாறு அந் நேரம் கடமையில் இருந்த பொலிஸார் கூறியுள்ளனர். பின்பு ஒரு மணித்தியாலம் கழித்து ஒன்பது மணியளவில் பொலிஸ் நிலையம் சென்ற போது அப்போதும் முறைப்பாட்டை பதிவு செய்யாமல் சாக்கு போக்கு காரணங்களை கூறி திரும்ப அனுப்பியுள்ளனர்.

எனினும் பின்பு பத்து மணிக்கும் சம்பவம் தொடர்பில் முறைப்பாட்டை பதிவு செய்வதற்கு வீட்டார் மூன்றாவது தடவையாகவும் பொலிஸ் நிலையம் சென்றுள்ளனர். அப்போது இது பெரிய சம்பவம் இல்லை எனவும் சமாதானமாக செல்லுமாறும் அறிவுறுத்தியுள்ளனர். சமாதானமாக போவதற்கு பாதிக்கப்பட்ட வீட்டார் எதிர்ப்பு தெரிவித்த நிலையில், அவர்களின் தொலைபேசி இலக்கங்களை வாங்கி விட்டு தாம் கூப்பிடும் போது வருமாறு கூறி அவர்களை திரும்பவும் அனுப்பியுள்ளனர்.

எனினும் நேற்று மாலை வரை பொலிஸாரிடமிருந்து எவ்வித அழைப்பும் வரவில்லை என வீட்டார் தெரிவித்தனர்.

மேலும் அண்மை காலங்களாக யாழ். குடாநாட்டில் வாள்வெட்டு சம்பவங்களும், வன்முறை சம்பவங்களும் இடம்பெற்று அவற்றால் கொலைகூட நிகழ்ந்துள்ள நிலையில் பொலி ஸாரின் இவ் அசமந்த போக்கு பொது மக்கள் மத்தியில் நம்பிக்கையீனத்தையும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது. (எ-4)

# ஹெரோயின் மூலம் 100 கோடி டுபாய்க்கு அனுப்பினார் சித்திக்

## இலங்கையிலிருந்து

பாரிய ஹெரோயின் போதைப் பொருள் வியாபாரியான மொஹமட் சித்திக் என்பவர், போதைப் பொருள் விற்பனை மூலம் சம்பாதித்த சுமார் 100 கோடி ரூபாயை டுபாய் நாட்டுக்கு அனுப்பி வைத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மொஹமட் சித்திக் சம்பந்தப்பட்ட வழக்கு விசாரணை கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற்ற போதே இது தெரியவந்துள்ளது.

மொஹமட் சித்திக் பாகிஸ்தான் மற்றும் டுபாய் நாடுகளில் இருந்து இலங்கைக்கு கடத்தி வந்த ஹெரோயின் போதைப் பொருள், வெலே சுதா மூலமாக நாட்டுக்குள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் சம்பாதித்த சுமார் 100 கோடி ரூபாய் கொலன்னாவ பிரதேசத்தில் உள்ள இடமொன்றில் இருந்து டுபாய் நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டு ள்ளது.

நாடுகளுக்கு இடையில் பணம் பரிமாறிக் கொள்ளும் முறையின் கீழ் இந்த பணம் அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றத்தில் தெரியவந்தது.

டுபாய் நாட்டுக்கு பணத்தை அனுப்பி வைத்த சம்பவத்துடன் தொடர்புடைய நபரை குற்றப் புல்னாய்வு திணைக்களத்தினர் அடையாளம் கண்டுள்ளனர். பாவா என்ற இந்த நபர் தற்போது நாட்டில் இருந்து தப்பிச் சென்றுள்ளதாக குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

மேலும் மொஹமட் சித்திக்கை நாளை 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் கிஹான் பிலப்பிட்டிய உத்தரவிட்டார். (எ-11)

# மகிந்த-சந்திரிகா நேருக்கு நேர் சந்திப்பு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆகிய இருவரும் இந் நாட்டில் கடந்த காலங்களில் அதிகமாக பேசப்பட்ட கதாபாத்திரங்களாகும்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் பின்னர் நாடாளுமன்ற தேர்தல் வரையிலான காலப்பகுதி வரையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் சந்திரிக குமாரதுங்க ஆகிய இருவரும் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்ளவில்லை.

எனினும் ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் முதன் முதலாக நேற்று முன்தினம் சந்திரிகாவும், மகிந்தவும் ஒருவரை ஒருவர் சந்தித்துள்ளனர்.

நிகழ்வொன்றில் கலந்து கொள்வதற்கு சென்ற சந்தர்ப்பத்திலே இவ்வாறான சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

எனினும் குறித்த இடத்தில் இருவரும் ஒருவ ருடன் ஒருவர் பேசிக் கொள்ளவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. (எ-11)


**போட்டிப் பரீட்சைக்கான விசேட கருத்தரங்குகள்**

**இம் மாதம் நடைபெறவுள்ள பரீட்சைகளான வடமாகாண சாரதி தெரிவு, புகையிரத நிலைய அதிபர் தெரிவு, கல்வி Diploma தெரிவு, அதிபர் சேவை தரம் 3 தெரிவு, பதிவாளர் தெரிவு போன்ற பரீட்சைகளுக்கான கருத்தரங்குகள் நடைபெறுகின்றன.**

**தொடர்புகளுக்கு**
**0766883394**
**யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு**
**(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)** (C-2351)

**ஏல விற்பனை**

யா/புத்தூர் மெதடிஸ் மிசன் தமிழ் கலவன் பாடசாலையில் 07.10.2015 புதன்கிழமை பி.ப 1:30 க்கு 2014 ஆண்டுக் கணக்கெடுப்பில் விற்கப்படவேண்டிய பொருட்கள் ஏல விற்பனை செய்யப்படவுள்ளது. பொருட்கள் தொடர்பான விபரங்களை கோப்பாய் கோட்டக்கல்வி அலுவலகத்தில் பார்வையிடலாம்.

அதிபர் (1932)
யா/புத்தூர் மெதடிஸ் மிசன் தமிழ் கலவன் பாடசாலை


# புனர்வாழ்வு பெற்றுவந்த 20 பேர் நேற்று விடுதலை

விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புகளை கொண்டிருந்ததாக குற்றம் சாட்டப்பட்டு புனர்வாழ்வளிக்கப்பட்டு வந்த 11 கிராம அலுவலர்கள் உட்பட 20 பேர் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற இந் நிகழ்வில், புனர்வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் ஜனக ரத்நாயக்க, மீள்குடியேற்ற புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் வி.சிவஞானசோதி மற்றும் இராணுவ அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புகளை பேணியதாக கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 11 கிராம அலுவலர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் அவர்களை புனர்வாழ்வு பெறுமாறும் அதன்பின் தமது வேலைகளை மீண்டும் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அரசாங்க அதிபர் ஊடாக அறிவுறுத்தப்பட்டிருந்தது. இதனடிப்படையில் பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் புனர்வாழ்வு பெற்ற 11 கிராம அலுவலர்களும் தமது 3 மாத புனர்வாழ்வினை முடித்த நிலையில் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இதேவேளை, புலிகளுடன் தொடர்புகளை பேணியதாக குற்றம் சாட்டப்பட்டு புனர்வாழ்வு பெற்ற வேறு 9 இளைஞர், யுவதிகளும் புனர்வாழ்வு காலம் நிறைவடைந்த நிலையில் இவர்களுடன் விடுதலை செய்யப்பட்டனர். (எ-11)


**யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்**

**பதவி வெற்றிடம்**

01.10.2015

பதவி : அங்கத்தவர் பொதுசன தொடர்பு உத்தியோகத்தர்
குறியீட்டு இல : 201/13
சம்பளகுறியீட்டு இல : 201/13
சம்பளத்திட்டம் : 9950*85* 10 - 90*10 - 11700
வயது : 18-45

**கல்வித்தகைமை**
(அ) கூட்டுறவு ஊழியர் 14 வது சம்பளத்திட்ட பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்

பதவி : **கிளை மேற்பார்வையாளர் குறியீட்டு இல : 207/13**
சம்பளகுறியீட்டு இல : 207/13
சம்பளத்திட்டம் : 9950 - 85* 10 - 90*10 - 11700
வயது : 18-45
பால் : ஆண்

**கல்வித்தகைமை**
(அ) கூட்டுறவு ஊழியர் 14 வது சம்பளத்திட்ட பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 15வது சம்பள திட்ட பதவியில் ஆகக் குறைந்தது 04 ஆண்டுகளுக்கு குறையாத அனுபவம்

அல்லது

(இ கூட்டுறவு ஊழியர் சாதாரணம் சான்றிதழ் / க.பொ.த சாதாரணம் கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச்சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியும் தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 வருட சேவையாற்றிய அனுபவம்.

**விண்ணப்ப முடிவுத்திகதி :** 10-10-2015
குறிப்பு : மேற்குறிப்பிட்ட பதவிக்கு கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு சுற்று நிருபங்களுக்கு அமைவாக படிகள் வழங்கப்படும்.
(சுற்று நிருபம் : 02/2012, 02/2015)
வயதெல்லை கூட்டுறவுச் சங்கப் பணியாளருக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது.
கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை தங்கள் சங்கங்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் சுயமாகத் தயாரித்து பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

**அனுப்ப வேண்டிய முகவரி**
**தலைவர்**
**யாழ்ப்பாணம் ப.தெ.வ.அ.கூ.சங்கம்**
**இல.330, கே.கே.எஸ் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தலைவர்**
(C-2349)

**யாழ்ப்பாணம் மாநகர சபை**

**ஆதனவரி அறிவித்தல் - 2015**

2015 ஆம் ஆண்டு நான்காம் கந்தாயத்திற்கான ஆதன வரியினை 2015.12.31 வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு முன்னராக எவ்வித தண்டமுமின்றி இவ் அலுவலகத்தில் செலுத்தலாம் எனவும், குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் செலுத்தப்படும் வரிப்பணங்களுக்கு மேலதிகமாகக் கீழ்க்குறிப்பிடப்படும் விபரப்படி விறாந்துச் செலவு அறவிடப்படும் எனவும் இத்தால் அறியத்தருகின்றேன்.

வெற்றுக்காணிகள் மற்றும் குடியிருப்பு காணிகள் - 15%
ஏனைய காணிகள் - 20%

நிலுவை உட்பட 2015ஆம் ஆண்டுக்கான வரியினைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். குறித்த நிலுவை தொகையினைச் செலுத்தாத பட்சத்தில் மாநகர சபைக் கட்டளைச்சட்டம் அத்தியாயம் 252 பிரிவு 252 (1) இன் படி நடுக்கட்டல் மூலம் அசைவுள்ள பொருட்கள் கைப்பற்றப்பட்டு அறவிடப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

காசோலையாக செலுத்துவோர் மாநகரசபை ஆணையாளர் யாழ்ப்பாணம் என அனுப்பி செலுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**ஆணையாளர்,** (C-2348) **மாநகரசபை அலுவலகம் யாழ்ப்பாணம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக சிறுவர் தின விழா இன்று யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)

சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சின் ஏற்பாட்டில் உலக சிறுவர் தின விழா யாழ்.வீர சிங்கம் மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10மணிக்கு நடைபெறவுள்ளது.

சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி.விஜயகலா மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சந்திராணி பண்டார நாயக்க கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

மேலும்இந்நிகழ்வில் மாகாண மற்றும் மாவட்ட பிரமுகர்களும் பங்குபற்றவுள்ளனர் குறிப்பிடத்தக்கது. (இ-5)

## நாகதம்பிரானின் சமுத்திர திருவிழா

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய சமுத்திரத் திருவிழா இன்று வியாழக்கிழமை அதிகாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

சிவஸ்ரீ சிவ சண்முகக் குருக்கள் தலைமையில் சமுத்திரத் திருவிழாவின் பூசைகள் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5-60)

## தாக்கப்படுவதனை தாங்கிக்கொண்டு நல்லாட்சி உள்ளதென நினைக்கின்றனர்

### அமைச்சர் ராஜித தெரிவிப்பு

தாக்குதல் மற்றும் தாக்கப்படுவதனை தாங்கிக்கொண்டு "நல்லாட்சி" உள்ளதென சிலர் நினைப்பதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கட்டுகாஹேன வைத்தியசாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சிலர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மிகவும் அப்பாவியாக தெரிவதாகவும் அரசாங்கத்தை சிலரது விரல்களால் சுறறி மூடிக் கொள்ள முடியும் என்று நினைக்கின்றார்கள்.

சிலர் அவர் மீசை இல்லாதவர் எனவும் அவர் கடுமையான பாத்திரம் அல்ல எனவும் கூறுகின்றார்கள்.

எனினும், அவரது வெற்றியின் வழி கடுமையானதாக உள்ளது. அவர் ஒரு இளைய ஜே.ஆர் போல் செயற்படுகின்றார். அவர் அப்பாவி போல் தெரிகின்றார்.

அவர் அனைத்திற்கும் உடன்பட விரும்புகின்றார். எனினும், அவர் உறுதியாக செயற்படுகின்றார் என சுகாதார அமைச்சர் ராஜித சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

## காணாமற்போன சிறுமி குகையிலிருந்து மீட்பு

புத்தளம், தப்போவ பிரதேசத்தில் காணாமற்போன சிறுமியொருத்தி நேற்று அதிகாலை தப்போவை அருகிலுள்ள அடர்ந்த வனப்பகுதியில் இருக்கும் பாழுங்குகையொன்றுக்குள் இருந்து மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை நான்கு மணியளவில் தப்போவ, கருவலகஸ்வெவ பிரதேசத்தில் வசிக்கும் தினிதி அசன்ஸா என்ற மூன்றரை வயதுச் சிறுமி காணாமற் போயிருந்தாள். இதனையடுத்து உறவினர்களும் பொலிஸாரும் இணைந்து சிறுமியைத் தேடுவதற்கான கடுமையான முயற்சிகளை முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில் குறித்த சிறுமியைத் தேடிச் சென்றவர்கள் தப்போவ அருகிலுள்ள அடர்ந்த வனப்பகுதியொன்றின் மத்தியில் இருக்கும் பாழுங்குகையொன்றுக்குள்ளிருந்து நேற்று அதிகாலை மூன்றரை மணியளவில் சிறுமியைக் கண்டுபிடித்துள்ளனர்.

பொலிஸாரும், பிரதேசவாசிகளும் இணைந்து குகை மற்றும் அதன் அயல்பகுதிகளை சல்லடை போட்டுத் தேடியபோதும் வேறு யாரும் அங்கிருந்ததற்கான தடயங்கள் எதுவும் கிடைக்கவில்லை. குறித்த சிறுமிக்கும் தான் எவ்வாறு அங்கு கொண்டுவரப்பட்டார் என்பது குறித்து எந்தத் தகவலையும் தெரிவிக்க முடியவில்லை என்று கூறப்படுகி ன்றது.

இதனையடுத்து விசேட பொலிஸ் குழுவொன்று இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்கும் அதே நேரம், காணாமற் போயிருந்த சிறுமி நேற்றுக் காலை புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றாள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)


கலை ஆர்வலர்களுக்காக

மீண்டும்

அளப்பருங்கருணை

கொக்குவில் கலாபவனம் வழங்கும்
தாகூரின் சன்னியாசி நாடகத்தையும்,
கவிதைகளையும் கொண்டதொரு

நடன நாடகம்

02, 04 ஒக்ரோபர் 2015
மாலை 6.00 மணி

கூவர் அரங்கம்,
யாழ். மருத்துவபீடம்.

(1901)

நுழைவுக்கட்டணம் ரூ.500/-


யாழ். மருத்துவபீட பழைய மாணவர் சங்கம்.


# அரசியல் காரணங்களுக்காக குற்றவாளிகளாக தமிழர்கள்

## தமிழ் அரசியல் கைதிகள் குறித்து வடக்கு முதல்வர் கடும் விசனம்

(யாழ்ப்பாணம்)

அரசியல் காரணங்களுக்காகவே செய்யாத குற்றங்களுக்குள் தமிழ் அரசியல் கைதிகள் மாட்டி விடப்பட்டுள்ளனர் என தெரிவித்துள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், நாட்டின் சட்ட திட்டங்களுக்கு அமைய அவர்கள் குற்றங்கள் புரிந்தவர்கள் எனவும் தெரிவித்துள்ளார். (13 ஆம் பக்கம் பார்க்க...)



## இலங். பதிவு செய்யப்பட்ட 6இலட்சம் குற்றவாளிகள்

(கொழும்பு)

பல்வேறு குற்றச்சாட்டுக்கள் காரணமாக பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யப்பட்டு நாடு பூராகவும் 6 இலட்சம் குற்றவாளிகள்உள்ளார்கள்என பொலிஸ ஊடக பேச்சாளர் பிரிசாந்த ஜயகொடி தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் இடம பெற்ற பல குற்றங்களுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் அந்நபர்கள் என உறுதியாகியுள்ளதென அவர தெரிவித்தார். சேயா என்ற சிறுமி கொலை செய்யப்பட்டமை, உட்பட அதற்கு முன்னர் இடம்பெற்ற பல குற்றங்களுக்கும் பொறுப்புக் கூற வேண்டியவர்களும் அக் குற்றவாளிகள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடு முழுவதும் தற்காலிகமாக தங்கும் வசதியை கொண்டுள்ள குற்றவாளிகள் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்வதற்கு பொலிஸ்துறை விடுத்துள்ள உத்தரவு தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இத் தகவல்களை வெளியிட்டுள்ளார். (இ-7)

## புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள் ஒக்டோபர் 12 இற்கு முன் வெளியாகும்

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் ஒக்டோபா மாதம் 12 ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ. என். ஜே.புஸ்பகுமார தெரிவித்தார்.

இந்த முறை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு 340,928 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வாகன விபத்தில் 5 பேருக்கு காயம்

(கொழும்பு)

திருக்கோவில் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தம்பட்டை சின்னமுகத்துவாரம் பகுதியில் நேற்று புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் 5 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்தும் பாரஊர்தியும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் பேருந்தில் பயணித்த 5 பேர் படுகாயமடைந்த நிலையில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## உள்நாட்டு விசாரணையை நடத்துவதற்கு சந்தர்ப்பம்

### அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க

முழுமையான உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை ஊடாக ஐ.நா மனித உரிமை ஆணையாளர் சுமத்தியுள்ள சில குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்துவதற்கான சந்தர்ப்பத்தை நாம் பெற்றுக்கொண்டுள்ளோம் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் யோசனை குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர் மலிக் சமரவிக்ரமவுடன் விரிவாக கலந்துரையாடியதாகவும் கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அமெரிக்காவின் யோசனை தொடர்பில் இந்த கலந்துரையாடலின் போது ஒவ்வொன்றாக விரிவாக ஆராயப்பட்டது. இந்த கலந்துரையாடலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் சம்பந்தப்படுத்திக்கொண்டோம்.

வெளிநாட்டு நீதிபதிகள், சட்டத்தரணிகள், சட்ட வல்லுநர்கள் கண்காணிப்பாளர்களாக கலந்து கொள்ள சந்தர்ப்பம் வழங்க முடியும். இலங்கை நாடாளுமன்றத்தின் ஊடாக, நாட்டின் சட்டத்திற்கு அமைய உள்நாட்டு விசாரணையை நடத்த சந்தர்ப்பம் கிடைத்துள்ளது எனவும் எஸ்.பி. திஸாநாயக்க மேலும் தெரிவித்தார். (இ-7)

## மழை காரணமாக 18 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதிப்பு

(கொழும்பு)

கடும் மழையால் 18 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களைச் சேர்ந்த மக்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

சிலபகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதுடன் வீதிகள் சிலவும் நீரில் மூழ்கியுள்ளதாக நிலையம் குறிப்பிட்டுளளது.

மழை குறைவடைந்துள்ள நிலையில் தாழ் நிலப் பகுதிகளில் நிரம்பியிருந்த நீர் வடிந்துவருவதாக இடர் முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியன் சுப்பர் லீக் கால்பந்தில் ஐஸ்வர்யா ராயின் நடனம்



இந்தியன் சுப்பர் லீக் (ஐ.எஸ்.எல்) கால்பந்து போட்டித் தொடரின் தொடக்க விழாவில், பாலிவுட் நட்சத்திரம் ஐஸ்வர்யா ராய் நடன நிகழ்ச்சி இடம் பெறுகிறது.

கால்பந்து ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் ஐஎஸ்எல் 2வது சீசன், சென்னை நேரு ஸ்டேடியத்தில் நாளை மறுதினம் 3ஆம் திகதி கோலாகலமாகத் தொடங்குகிறது. மொத்தம் 8 அணிகள் களமிறங்குகின்றன. டிசம்பர் 20ஆம் திகதி இறுதிப் போட்டி நடக்க உள்ளது.

சென்னையில் அக். 3-ல் நடக்கும் முதல் லீக் ஆட்டத்தில் சென்னையின் எப்.சி. - அத்லெடிகோ டி கொல்கத்தா அணிகள் மோதவுள்ளன. இந்த போட்டிக்கு முன்பாக, பிரம்மாண்டமான தொடக்க விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இதில் நடிகை ஐஸ்வர்யா ராய் மற்றும் குழுவினரின் நடன நிகழ்ச்சி இடம் பெறுகிறது. (க)

# இலங்கைக்கு எதிரான தொடரில் சுனில் நரைன் சேர்ப்பு



இலங்கை தொடருக்கான ஒருநாள் மற்றும் இருபது-20 போட்டிகளுக்கான மேற்கிந்திய தீவுகள் அணி அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கிந்திய தீவுகள் அணி இம் மாதம் இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து 2 டெஸ்ட், 3 ஒருநாள் மற்றும் 2 இருபது-20 போட்டிகளில் விளையாடுகிறது.

இந்நிலையில் ஒருநாள் மற்றும் இருபது-20 தொடருக்கான வீரர்களை மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இதில் பந்துவீச்சு சர்ச்சையால் உலகக் கிண்ணப் போட்டியில் இடம்பெறாத சுனில் நரைன் அணிக்கு மீண்டும் திரும்பியுள்ளார். அதேபோல காயத்தால் விலகி இருந்த டரன் பிராவோவும் அணியில் இடம்பெற்றுள்ளார்.

காயம் காரணமாக அதிரடி ஆட்டக்காரரான கிறிஸ் கெய்ல் இடம்பெறவில்லை. வெய்ன் சுமித், டரன் சமி, லெண்டில் சிம்மன்ஸ், சுலைமான் பென், கோட்ரெல், நிகிடா மில்லர், கேமர் ரோச் ஆகியோர் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளனர்.

முன்னணி சகலதுறை வீரர்களான டுவெய்ன் பிராவோ, பொல்லார்ட் ஆகியோர் ஒருநாள் போட்டியில் தொடர்ந்து ஓரங்கட்டப்பட்டனர்.

இவர்களுக்கு ஆதரவாக பேசியதாலும், தெரிவு செய்யப்பட்ட ஒருநாள் மேற்கிந்திய தீவுகள் அணியை விமர்சனப்படுத்தியதாலும் பயிற்சியாளர் சிம்மன்ஸ் சஸ்பெண்ட் செய்யப்பட்டார்.

இருபது-20 அணியில் டுவெய்ன் பிராவோ, பொல்லார்ட் இடம் பெற்று இருக்கிறார்கள். ஒருநாள் போட்டிக்கான அணியில் இடம் பெறாத டரன் சமி இருபது-20 போட்டி தலைவராக இருக்கிறார்.

**ஒருநாள் அணி விவரம்:-**


ஜேசன் ஹோல்டர் (அணித்தலைவர்), டரன் பிராவோ, அன்ரோ ரஸல், சாமுவேல்ஸ், ஜெரோம் டெய்லர், பிளட்சர், ஜேசன் முகமது, சுனில் நரைன், தேவேந்திர பிஷூ, பிளாக்வுட், பிராத்வெயிட், கார்ட்டர், சார்ல்ஸ், ராம்தின், ராம்பால்.

**இருபது-20 அணி விவரம்:-**

டரன் சமி (அணித்தலைவர்), சாமுவேல பத்ரி, டரன் பிராவோ, டுவைன் பிராவோ, ஜோனதன் கார்ட்டர், ஜோன்சன் சார்ல்ஸ், பிளட்சர், ஜேசன் ஹோல்டர், சுனில் நரைன், பொல்லார்ட், தினேஷ் ராம்தின், ரவி ராம் பால், அன்ரோ ரஸல், மார்லன் சாமு வேல்ஸ், ஜெரோம் டெய்லர். (க)

## இந்தியன் சுப்பர் லீக் கால்பந்து

# சென்னை அணியின் தூதராக நடிகர் தனுஷ் நியமனம்



இந்தியன் சுப்பர் லீக் கால்பந்து போட்டியில் சென்னை அணியின் தூதராக முன்னணி தமிழ் திரைப்பட நடிகர் தனுஷ் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவில் பல்வேறு நகரங்களில் 2 ஆவது இந்தியன் சுப்பர் லீக் (ஐ.எஸ்.எல்) காலபந்து போட்டிகள் எதிர்வரும் 3ஆம் திகதி முதல் டிசம்பர் 20ஆம் திகதி வரை நடக்கிறது. இந்த தொடரில் 8 அணிகள் பங்கேற்கிறது.

இதில் சென்னையின் எப்.சி அணிக்கு இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் தோனி, பாலிவுட் நடிகர் அபிஷேக் பச்சன் ஆகியோர் உரிமையாளராக உள்ளனர்.

இந்நிலையில் இந்த சீசனுக்கான ஐ.எஸ்.எல். போட்டியின் விளம்பர தூதராக தமிழ் திரைப்பட நடிகர் தனுஷ் நியமிக்கப்பட்டுள்ளார்.


இது தொடர்பாக சென்னையில் நேற்று முன்தினம் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில நடிகர் தனுஷ் கூறுகையில், இந்த சீசனுக்கான இந்தியன் சுப்பர் லீக் கால்பந்து போட்டியின தூதராக நியமிக்கப்பட்டு இருப்பது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது.

90 நிமிடங்கள் விறுவிறுப்பாக அரங்கேறும் கால்பந்து ஆட்டம் எல்லோருக்கும் பிடித்தமானதாகும். இந்த ஆண்டில் நிறைய திறமையான புதிய வீரர்கள் அணியில் இடம் பிடித்துள்ளனர்.

இந்த போட்டி அதிகமான அளவு ரசிகர்களை கவரும் என்று நினைக்கிறேன். சினிமாவில் கால்பந்து வீரராக நடிக்க வாய்ப்பு கிடைத்தால் நடிப்பேன். அந்த பாத்திரத்துக்கு நான் பொருத்தமானவன் என்று நினைக்கிறேன் என்று தெரிவித்துள்ளார். (க)

# எனது அணித் தலைவர் சாதனையை ஹோலியால்தான் முறியடிக்கமுடியும்

## கங்குலி நம்பிக்கை



எனது அணித்தலைவர் பதவியின் சாதனைகளை ஹோலியால்தான் முறியடிக்க முடியும் என்று முன்னாள் இந்திய அணித் தலைவர் கங்குலி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் ஹோலி தலைமையிலான இந்திய அணி இலங்கை மண்ணில் டெஸ்ட் தொடரை 2-1 என்ற கணக்கில் வென்று சாதனை புரிந்தது.

இதைத் தொடர்ந்து ஹோலி மீதான எதிர்பார்ப்பு அதிகரிக்க தொடங்கி உள்ளது. இவர் தென்னாபிரிக்க தொடரிலும் தொடர்ந்து அசத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் தான் ஹோலியின் ரசிகன் என்றும், அவரால் மட்டுமே என்னுடைய தலைவர் பதவி சாதனைகளை முடியடிக்க முடியும் எனவும் முன்னாள் இந்திய தலைவர் கங்குலி தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் கூறுகையில், தலைவர் பதவியில் ஹோலி அசத்துகிறார். அவர் என்னை விட சிறந்த தலைவராக உருவாக வேண்டும் என்று விரும்புகிறேன்.

அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா போன்ற அணிகளுக்கு எதிரான போது தான் அவரது தலைவர் பதவி முக்கிய சவாலாக இருக்கும். அவர் எப்போதுமே வெற்றி பெற வேண் டும் என்ற வேட்கையில் இருக்கிறார். அவரது இந்த ஆக்ரோஷத்தை நான் விரும்புகிறேன். தென்னாபிரிக்க தொடரில் சிறப்பாக விளையாட அவரை வாழ்த்துகிறேன் என்று கூறியுள்ளார். (க)

# தென்.-இந்தியா தொடரில் மதுபானத்துக்கு அதிரடி தடை




தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இரு அணிகள் இடையே 3 இருபது-20, 5 ஒரு நாள், 4 டெஸ்ட் போட்டிகள் நடக்கிறது. இதில், முதலில் நடக்கும் இருபது-20 தொடரின் முதல் போட்டி, இமாச்சல பிரதேச மாநிலம் தர்மசாலாவில் உள்ள இமாச்சல பிரதேச கிரிக்கெட் சங்க மைதானத்தில் நாளை 2 ஆம திகதி நடக்கிறது. இந்த போட்டியின் போது, விஐபிக்கள் மற்றும் விருந்தினர்களுக்கு மதுபானம் விநியோகிக்கப்படாது என அதிரடியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மகாத்மா காந்தியின் பிறந்த தினம் என்பதால், மதுபானம் தடை செய்யப்பட்டுள்ளது. இத்தகவலை கங்கரா துணை கமிஷனர் ரித்தேஷ் சவுகான் தெரிவித்துள்ளார்.

அவர் கூறுகையில்,

காந்தி ஜெயந்தி என்பதால், மதுபானம் தடை செய்யப்பட்டுள்ளது என்றார். (க)

# மினி உலகக் கிண்ணம் கரீபியன் அணி வெளியேற்றம்

மினி உலகக்கிண்ணம் என்று அழைக்கப்படும் சம்பியன்ஸ் டிராபி போட்டியில் விளையாடும் அணிகளின் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளியிடப்பட்டுள்ள தரவரிசை பட்டியலில் மேற்கிந்திய தீவுகள் முதல் 8 இடங்களில் இல்லை. இதனால் சம்பியன்ஸ் டிராபியில் விளையாடும் தகுதியை இழந்துள்ளது. இந்த அணி 9-வது இடத்தில் உள்ளது.

அதே சமயம் சமீபத்தில் சிறப்பாக ஆடி வரும வங்கதேச அணி 7-வது இடத்தை பிடித்து சமபியன்ஸ் டிராபி போட்டியில் விளையாட தகுதி பெற்றுள்ளது. இதன்மூலம் 2006-க்கு பிறகு முதன் முறையாக சம்பியன்ஸ் டிராபி போட்டியில் விளையாட தகுதி பெற்று சாதனை படைத்துள்ளது பங்களாதேஷ் மேலும், பாகிஸ்தான் அணி 8ஆவது மற்றும் கடைசி இடத்தை பிடித்து தகுதி பெற்றது. (க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 15 ஆயிரம் துண்டுப்பிரசுரங்களும் 7,500 ஸ்ரிக்கர்களும் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

சிறுவர்களை எமது உயிர் போல் காப்போம் எனும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் நேற்றையதினம் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான 15 ஆயிரம் விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்களும் 7 ஆயிரத்து 500 ஸ்ரிக்கர்களும் விநியோகிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்ற உதவி இயக்குநர் ஐ.தபேந்திரன் தெரிவித்துள்ளார்.






பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் இயங்கும் கொள்கை திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பணிப்பில் தேசிய இளைஞர்சேவைகள்மன்றமும் இளைஞர் கழக சம்மேளனமும் இணைந்து இத் தேசிய வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதற்கமைய யாழ். மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் மேற்படி வேலைத்திட்டம் மு.ப.10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை நடைபெற்றது.

அந்தவகையில் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவு சிறைச்சாலை முன்பாகவும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவு கொக்குவில் சந்தியிலும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு புத்தூர் சந்தியிலும் சங்கானை பிரதேச செயலர் பிரிவு சங்கானை சந்தியிலும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவு சண்டிலிப்பாய் சந்தியிலும் உடுவில் பிரதேச செயலர் பிரிவு இணுவில் சந்தியிலும் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவு மல்லாகம் சந்தியிலும் வேலணைப் பிரதேச செயலர் பிரிவு வேலணை பிரதேச செயலகம் முன்பாகவும் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவு ஊர்காவற்றுறை நகரத்திலும் நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவு நெடுந்தீவு பிரதேச செயலகம் முன்பாகவும் காரைநகர் பிரதேச செயலர் பிரிவு சுந்தரமூர்த்தி பாட சாலை முன்பாகவும் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவு இமையாணன் சந்தியிலும் பருத்தித்துறை செயலர் பிரிவு பருத்தித்துறை பிரதேச செயலகம் முன்பாகவும் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவு மருதங்கேணி பிரதேச செயலகம் முன்பாகவும் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவு சாவகச்சேரி பேருந்து நிலையத்திலும் அத்துடன் யாழ். மத்திய பேருந்து நிலையத்திலும் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது என அவர் மேலும்தெரிவித்தார். (இ-9-60)

# காந்தி ஜெயந்தியும் அஹிம்சை தினமும்

அகில இலங்கை காந்தி சேவா சங்கமும் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு D உம் மெய்யியற் கழகமும் இணைந்து நடத்தும்காந்தி ஜெயந்தியும் உலக அஹிம்சை தினமும் நாளை வெள்ளிக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் உப தலைவரும் யாழ்.பல்கலைக்கழக மெய்யியல்துறை விரிவுரையாளருமான ந.சிவகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.இந்திய துணைத் தூதுவர் ஆ.நடராஜன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக சமூகவியல் துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி என்.சண்முகலிங்கன் கலந்து கொள்ளவுள் ளார்.

கௌரவ விருந்தினர்களாக அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் தலைவர் தி.இராசநாயகம், கல்வியியல் துறைப் பேராசிரியர் மா.சின்னத்தம்பி, மெய்யியல்துறைத்தலைவர் கலாநிதி க.கஜவிந்தன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நிகழ்வில் அகவணக்கம், சுடரேற்ற மலர்மாலை அணிவித்தல், காந்தி கீதம் என்பவற்றைத் தொடர்ந்து மெய்யியல் துறை இறுதி வருட மாணவன் வி.மதிசங்கர் வரவேற்புரை நிகழ்த்துவார். அஹிம்சை தொடர்பான குறும்படக் காட்சியும் இடம்பெறவுள்ளது. (இ)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா:12 சூரிசெவ் 3 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: BSC/அரச தொழில்<br>தொ.இ:B/5020 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 52செவ் 8 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/5018 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 22செவ் 1 இல்<br>உயரம்: 175cm<br>தகைமை/தொழில்:A/L/பெல்ஜியம் PR<br>தொ.இ:B/5021 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 11செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/5024 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 47செவ் 4 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ:B/5022 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 31 உயரம்: 165cm<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>தொ.இ: G/5025 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 49செவ் 4 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர<br>தொ.இ:B/5023 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 32செவ் 8 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:bsc/அரசதொழில்<br>தொ.இ: G/5027 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)


# இரு நூல்களின் அறிமுக விழா

யாழ்.இலக்கியக்குவியத்தின் ஏற்பாட்டில் எழுத்தாளர் ராஜாஜி ராஜகோபாலனின் "குதிரை இல்லாத ராஜகுமாரன்" எனும் சிறுகதைத் தொகுதி மற்றும் "ஒரு வழிப்போக்கனின் வாக்குமூலம்" எனும் கவிதை ஆகிய இருநூல்களுக்கான அறிமுக விழா எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.திருமறைக்கலா மன்ற அழகியற் கல்லூரியில் புலோலியூர் வேல்நந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன்போது அறிமுகவுரையினை ச.சத்தியதேவன் வழங்குவதுடன் விமர்சன உரைகளை வேலாயுதம் - சிவராஜா, திருமதி ரஜீவன் தர்மினி, நா.நவராஜ், நெடுந்தீவு யோகேஸ் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

பதிலுரையினை நூலாசிரியர் ராஜாஜி ராஜகோபாலன் வழங்கவுள்ளார். (இ-5)

# ராசி பலன்

01.10.2015
(புரட்டாதி 14, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
சதுர்த்தி பின்னிரவு 12.25 மணிவரை
பரணி பிற்பகல் 3.41 மணிவரை
இராகுகாலம் 1.32-3.02 மணிவரை
சுபநேரம் 7.32-9.02 மணிவரை
மகாபரணி, கார்த்திகை விரதம்,
சங்கடகர சதுர்த்தி விரதம்
வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | சந் | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அத்தம், சித்திரை<br>இரவு 9.22 இற்கு<br>இடபம்-சந்<br>கீழ் நோக்கு நாள் | | குரு,புத<br>செவ்<br>சுக் |
| | சனி | | ராகு<br>சூரி |

**மேடம்:** வெகுமானங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சயனசுகமுண்டு, எடுத்த கருமங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, மாதர் நட்புண்டு.

**இடபம்:** சோம்பலை விலக்குவது நல்லது, பிறருக்கு உதவுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்களில் ஒரு சில தாமதங்கள் ஏற்படலாம், சுப செலவுகள் அதிகரிக்கும்.

**மிதுனம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும், உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், சயன சுகமுண்டு.

**கடகம்:** பெரியோரால் மதிக்கப்படுவீர்கள், இஷ்ட சித்தியுண்டு, செய்தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், ஆரோக்கியமான நாள், போசன நன்மையுண்டு.

**சிம்மம்:** தொழிலில் சீரப்பிரயாசை காட்டுவீர்கள், எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம், தேவையற்ற பயத்தை விலக்குவது நல்லது, ஆதாயம் தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கன்னி:** அஜீரணம் சம்பந்தப்பட்ட ரோகங்கள் ஏற்படலாம், குடும்பத்தினரிடையே சிறு சிறு விவாதங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், பொருள் விரயமுண்டு.

**துலாம்:** மனோ தைரியம் கூடும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்:** ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட [illegible] இருந்து [illegible] பங்கள் [illegible] தொழில் மேன்மையுண்டு, கௌரவமான நாள்.

**தனுசு:** தாழ்ந்த சுபாவமுண்டு, எடுத்த காரியங்களை முடிப்பதில் சில தாமதங்கள் ஏற்படலாம், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் கவனம் எடுக்க வேண்டிய நாள்.

**மகரம்:** ரோக பயமுண்டு, சுப காரியச் செலவுகள் அதிகரிக்கும், பயணங்களால் பலனுண்டு, நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், முயற்சிகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கும்பம்:** மனோ தைரியம் கூடும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், பயணங்களால் பலனுண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**மீனம்:** மனோ சங்கடங்கள் கூடும், எடுத்த காரியங்களில் சில தாமதங்கள் ஏற்படலாம், போசன சுகக் குறைவுண்டு, செலவுகள் அதிகரிக்கும் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களை பாதுகாப்போம்

இன்றைய அசுரவேக உலகில் எத்தனையோ பல சாதனைகளும் வேதனைகளும் நடந்து கொண்டு இருக்கின்றன. முக்கியத்துவமும் முன்னுரிமையும் கொடுக்கப்பட வேண்டிய காரணிகளிற்கு என தினங்கள் அனுஷ்டிக்கப்பட்டு வருவதுடன் அந்நாளில் அக்காரணி தொடர்பான சிறப்புக்கள் பிரச்சினைகள் பற்றி பேசப்படுவதும் எழுதப்படுவதும் வழக்கமாகி விட்டது. அந்த வகையில் சிறுவர்களிற்கென ஒதுக்கப்பட்டநாள் ஒக்டோபர்-1 ஆகும். இன்று சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுள் அரசனாக இருப்பவை சிறுவர்களிற்கு எதிரான வன்முறை, துஷ்பிரயோகம் போன்றன.

வன்முறைகளும், துஷ்பிரயோகங்களும் எமது கலாசாரம், சமயம் போன்றவற்றில் நீண்டகாலமாக நிலை கொண்டுள்ளது. போர் முடிவுற்ற பின்பு சிறுவர்களிற்கு எதிரான துஷ்பிரயோகம் அதிகரித்து வருகின்றது. தினமும் பத்திரிகை, தொலைக்காட்சி, இணையத்தளம் போன்றவற்றில் சிறுவர்களிற்கு எதிரான வன்முறைகளை காண்கின்றோம்.

போர்க்காலங்களில் ஏற்பட்ட வன்முறைகளை விட அது முடிவடைந்த பின்பும் அதனால் ஏற்படும் பார தூரமான விளைவுகளை பல வருடங்களிற்கு காணலாம். போரின் போது ஏற்படும் பயங்கரமான அனுபவம் அதுமுடிந்த பின்பு ஏற்படும் விளைவுகள் முக்கியமாக சமூக கட்டுப்பாடு மற்றும் விழுமியங்கள் அற்றுப்போதல், மன அழுத்தம், தீய பழக்கங்களில் ஈடுபாடு என்பன கூடுதலாக ஏற்படுகின்றன. இதனால் சிறுவர்களிற்கு எதிரான துஷ்பிர யோகாங்களும் அதிகரிக்கச்செய்கின்றன.

கடந்த ஐந்து வருட காலத்தில் சுமார் ஐயாயிரம் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் யாழ்.மாவட்டத்தில் மட்டும் பதிவாகியுள்ளன. இதில் அறுபத்தெட்டு வீத மானவர்கள் 14- 16 வயதுக்குட்பட்ட பெண்களிற்கு ஏற் பட்டுள்ளது.

யாழ் போதனா வைத்திய சாலைக்கு மட்டும் கடந்த ஐந்து வருடங்களில் சுமார் ஆயிரம் நிகழ்வுகள் பதிவாகியுள்ளன. இவற்றில் பெண்களிற்கு எதிரான பாலியல் வன்முறைகள் கூடுதலாக காணப்படுகின்றன. இதைவிட 16 வயதிற்கு உட்பட்ட திருமணம் மற்றும் அதனால் ஏற்படும் கர்ப்பம் ஒரு வகையான சிறுவர் துஷ்பிரயோகம் என்றே கூறப்படுகின்றது.

> **இன்று சர்வதேச சிறுவர் தினமாகும். இதனை முன்னிட்டு இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.**

பாலியல் வன்முறையை எடுத்தால் வன்முறையை இழைத்தவர்களுள் எழுபது வீதமானவர்கள் ஒரு குடும்ப அங்கத்தவராக அல்லது குடும்பத்திற்கு நெருங்கியவராக இருப்பார். மிகச் சிறுபான்மையோரே கடத் தப்பட்ட பின் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டவராக இருப்பர்.

அறிந்தவர்களினால் இழைக்கப்படும் இந்த பாரதூரமான விளைவினால் சில நிகழ்வுகள் வெளிச்சத்திற்கு வருவதில்லை. இதனால் சிறுவர்களை பாதுகாப்பது எமது தலையாய கடமையாகும். இதற்காக பெற்றோர், ஆசிரியர்கள் ,சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரும் இவ்வாறான நிகழ்வுகள் பற்றி விழிப்பாக இருப்பதுடன் மட்டுமல்லாது அதை தடுப்பதற்கும் வழிமுறை செய்ய வேண்டும். இவ்வாறான நிகழ்வுகளை எதிர்நோக்கினால் அதை உரிய அதிகாரிகளிடம் தெரியப்படுத்த வேண்டும்.

**தெரியப்படுத்தக் கூடிய அதிகாரிகள்:-** தலைமை ஆசிரியர்கள், பொலிஸ், வைத்தியர்கள், உங்கள் பிரதேச செயலகங்களில் உள்ள சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், உங்கள் பிரதேசத்தில் உள்ள தேசிய சிறுவர் பாது காப்பு அதிகாரிகள் மற்றும் 1929 என்ற தொலைபேசி இலக்கம்

**உங்கள் பிள்ளைகளை பாதுகாப்பதற்கு நீங்கள் செய்யக் கூடியவை:-**

1.பிள்ளைகளிற்கு வலிமை, அறிவை வழங்குதல் மட்டுமல்லாது அவர்கள் பாதுகாப்பாக இருப்பது அவர்களின் உரிமை என்பதையும் அறிவுறுத்த வேண்டும்.

2.பிள்ளைகளின் பெயர், முகவரி, பெற்றோரின் தொலைபேசி இலக்கங்கள், தொலைபேசியை எவ்வாறு பாவிப்பது என்பது பற்றிய அறிவுகளை புகட்டவேண்டும்.

3.பிள்ளைகள் எங்கு சென்றாலும் பெற்றோரிற்கு அல்லது பாதுகாவலரிற்கு சொல்லிவிட்டு செல்லும் பழக்கத்தை உருவாக்குவதுடன் அவ்வாறு செய்தால் தமக்கு ஆபத்து ஏற்படும் போது இவர்கள் உதவுவார்கள் என்னும் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்.

4.தெரியாத நபர்கள் தரும இனிப்பு அல்லது பரிசுப் பொருட்கள் எதையும் வாங்காமல் இருப்பதுடன் தெரிந்தவர்கள் கூட கொடுக்கும் பொருட்களை பெற்றோர்களின் அனுமதியுடன் வாங்கப்பழக்கவேண்டும்.

5.பாடசாலைவளாகத்திற்கு, விளையாட்டு மைதா னத்திற்கு, சிறுவர் பூங்காவிற்கு பிள்ளைகளை தனியே செல்ல அனுமதிக்காததோடு எங்கு சென்றாலும் நண்பர் ஒருவருடன் செல்ல அனுமதி யுங்கள்.

6.ஆள் நடமாட்டம் இல்லாத பாதையால் செல்வதை தவிர்த்து ஆள்நடமாட்டம்உள்ள பாதையால் செல்வதற்கு பிள்ளைகளை பழக்கப்படுத்துங்கள்.

7.வாகனங்களில் செல்லும் யாராவதுஅழைக்கும் போதுஅவர்களிற்குஅருகில் செலவதையோ அல்லது பதில் கூறுவதையோ உடனடியாக நிறுத்தச் சொல்லுங்கள்.

8.யாரேனும் ஒருவர் பிள்ளைகளிடம் உதவி அல்லது வழி கேட்கும் போது அவர்களுடன் எதுவும் பேச வேண்டாம் என்று சொல்லிக் கொடுங்கள்.

9.பெற்றோர் அல்லது பாதுகாவலர் தவிர்ந்த வேறு யாராவது ஒருவர்பிள்ளையை அழைத்துச்செல்ல முயற்சிக்கும் போதோ அல்லது பின் தொடர்ந்தாலோ உடனடியாக கூக்குரல் இடச் சொல்லுங்கள்.

10.நல்ல தொடுகைகள் மற்றும் கெட்டதொடுகைகள் பற்றிபிள்ளைகளிற்கு நன்கு விளக்கம் கொடுங்கள்.

11.உங்கள் பிள்ளைகளை யாராவது அச்சமூட்டும் வகையில் அல்லது அசௌகரியத்திற்கு உட்படுத்தும் வகையில் தொடமுயற்சித்தால் "வேண்டாம்" எனக்கூறி தடுக்கச் சொல்லுங்கள்.




12.உங்கள் பிள்ளைகளிடம் யாராவது அச்சமூட்டும் வகையில் அல்லது அசௌகரியத்திற்கு உட்படுத்தும் வகையில் நடந்து கொண்டால் அதை உங்களிடம் பிள்ளை சொல்லக் கூடிய வகையில் பிள்ளைகளின் மன நிலையை ஏற்படுத்துங்கள்.

13.பிள்ளை தனது அன்றாட நிலைகள், அனுபவங்கள், உணர்வுகளை உங்களுடன பகிர்ந்து கொள்ளக் கூடிய சூழலை ஏற்படுத்து ங்கள்.

14.வீடு, பாடசாலை, மைதானம் போன்ற அயல் சூழலில் நடமாடுபவர்கள், கடைக்காரரர்கள், ஐஸ்கிறீம் விற்பவர்கள், பாடசாலைக் காவலாளி போன்றோர் தெரிந்தவர்களாக இருந்தாலும் அவர்களாலும் ஆபத்து ஏற்படலாம் என்பதை பிள்ளைக்கு தெரியப்படுத்துங்கள்.

15. பிள்ளைகள் பாடசாலை அல்லதுமைதானம் அல்லது பிரத்தியேக வகுப்புக்களில் இருக்கும் போது தெரியாத ஒருவர் பிள் ளைகளின் பெயரையோ அல் லது பெற்றோரின் பெய ரையோ கூறி தன்னுடன் வருமாறு அழைக்கும் போது அவர்களுடன் செல்ல வேண்டாம் என்று கூறுங்கள்.

16.பிள்ளை தனியாக வீட்டில் இருக்கும் போது தெரியாத யாராவது வந்தால் எக்காரணம் கொண்டும் கதவை திறக்க வேண்டாம் என்றும் தெரிந்தவர்களாயினும் பெற்றோர்களின அனுமதி இன்றி கதவை திறக்கவேண்டாம் என்றும் சொல்லிக் கொடுங்கள்.

17.உங்கள் பிள்ளைகளின் சிநேகிதர் யாராவது துஷ்பிரயோகத்துக்கு உட்படும் போது அதுபற்றி தெரிந்தால் பெற்றோர்களிற்கு தெரியப்படுத்தச் சொல் லுங்கள்.

18.சிறுவர்களிடம் 1929 என்ற தொலைபேசி இலக்கத்தை அறிமுகப்படுத்தி அதன் பயன்பாடு பற்றி கூறுங்கள்.

வேலியே பயிரை மேயும் இக்கட்டான இக்கால கட்டத்தில் தன் கையே தனக்குதவி என்னும் கோட்பாட்டின் கருத்தை ஏற்று நாளைய விருட்சங்களான சிறார்கள் வான் ஓங்கி கிளைபரப்பி வளர நற்பசளை இடுவதுடன் வழி, ஒளி செல்ல தகுந்த இடத்தை வழங்குவீர்....

**Dr. கீதாஞ்சலி சத்தியதாஸ்**
குழந்தை வைத்திய நிபுணர்
யாழ்.போதனா வைத்தியசாலை.


**அமெரிக்க Green Card Lottery -2017**

அமெரிக்க **Green card Lottery** விண்ணப்பத்தில் 13 வருட அனுபவமிக்க எமது நிறுவனத்தில் 2017 ஆம் ஆண்டுக்கான விண்ணப்பப்படிவம் மற்றும் விபரங்களை ரூபா 15/- முத்திரையொட்டப்பட்டு சுய முகவரியிட்ட தபாலுறையை **Bristol Cyber cafe. No. 8/3/4, Bristol Street, Colombo -01** எனும் முகவரிக்கு அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

**Tel : 0112393919, 0774276579**

(C-2243)

W/A 44843 **www.bristolcc.biz**


## சிறுவர் தின விழாவும் சிறுவர் பூங்கா திறப்பும்

ஆவரங்கால் மேற்கு மத்திய முன்பள்ளி சிறார்களின் சிறுவர்தின விழாவும்புனரமைக்கப்பட்ட கலையரங்கு மற்றும் சிறுவர் பூங்கா திறப்பு விழாவும் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மத்திய முன்பள்ளி முன்றிலில் முன்பள்ளியின் தலைவர் க.சிவசோதி தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக முன்பள்ளி வலயக்கல்வி அலுவலகப் பணிப்பாளர் க.விமலநாதன், யாழ்.ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அதிபர் எஸ். சத்தியவரதன், ஆவரங்கால் மேற்கு கிராம முன்னேற்ற சங்கீத தலைவர் க.கமலநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)


**கால்நடை கொள்வனவு**

கால் நடைகளை விற்பனை செய்யவுள்ளோர் தங்கள் பூரணமான விபரத்துடன் சமாச முகவரிக்கோ அன்றி 024 324 8603 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர்
முல்லைத்தீவு மாவட்ட சிக்கன கடனுதவி,
கூட்டுறவு சங்கங்களின் சமாசம் வ.து.

(C2341)



**பிறந்தநாள் வாழ்த்து**

**திருமதி. கதிர்காமத்தம்பி ஆரோக்கியநாயகி**



எமது குடும்ப குல விளக்கான
தாயார் தனது 75வது
பிறந்தநாளை 01/10/2015
இன்று தமது இல்லத்தில்
வெகுவிமர்சையாக
கொண்டாடுகின்றார்.
இவர் குழந்தை ஜேசுவின்
அருளால் இன்னும்
பல்லாண்டு காலம்
வாழ வாழ்த்துகின்றோம்.

நவாலி தெற்கு,
நவாலி.

வாழ்த்துவோர்;
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்

(1896)



**10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

பிறப்பு 06 - 04 - 1931



இறப்பு 21 - 09 - 2005

**அமரர் பொன்னுத்துரை நாகேந்திரம்(ஓவசியர்)**
**திதி: அபரபக்க சதுர்த்தி (01/10/2015)**

அன்பான தெய்வமே! பாசத்தின் திருவுருவே!
ஆண்டுகள் பத்து ஓடி மறைந்திட்டாலும்
உம் பிரிவின் துயரமது ஆறாது ஒரு போதும்
பாசமாய் வளர்த்தெடுத்தெம்மைத் தாங்கி நின்றீர்
இனி எப்போ காண்போமென ஏங்குகின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தி பெற அருள் வேண்டி
என்றென்றும் இறைவன் பாதம் துதிக்கிறோம்.

சுதுமலை தெற்கு.
மானிப்பாய்.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

(C2342)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும்

வட இலங்கைசுதேச வைத்தியசாலையின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் அண்மையில் மேற்படி சபையின் தலைவரும் யாழ். பிரதேச முன்னாள் மருத்துவ பதிவாளரானடாக்டர்எஸ்.ஸ்ரீவிக்னேஸ்வரா தலைமையில் யாழ். சிவன்பண்ணை வீதியில் இடம் பெற்ற போது புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது தலைவராக வைத்தியரும்மரணவிசாரணை அதிகாரியுமான க.திரு லோகமூர்த்தி தெரிவு செய்யப்பட்டதுடன் உப தலைவராக வைத்தியரும் ஸ்ரீலங்கா பாரம்பரிய வைத்தியர்களின் இணைய தலைவருமான எஸ். செல்வ மகேந்திரனும் செயலாளராக இ.சற்குருநாதனும் உப செயலாளராக வைத்தியர் ஜெயக்குமாரும் பொருளாளராக வைத்தியர் எஸ்.செல்வலிங்கமும் தெரிவு செய்யப்பட் டுள்ளனர்.

மேலும் நிதி ஆலோசகராக கணக்காளர் வேல்நிதியும் சட்ட ஆலோசகரான சட்டத்தரணி றெமிபியஸ்சும் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் நிறைவேற்றுப் பணிப்பாளர்களாக தாய்மைப் பேற்று சிறப்பு சித்த மருத்துவர் ஜெ.ஜெயலன், யாழ்.தொழில்நுட்பக் கல் லூரி அதிபர் கலாநிதி என்.யோகராஜன் வைத்தியர், எஸ் ஸ்ரீ விக்னேஸ்வரா ஆகியோர்தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் இயக்குநர் சபை உறுப்பினர்களாக வைத்தியர்கள் எஸ்.பரம்சோதிநாதர் கே.ஜெயச் சந்திரமூர்த்தி, சிறீதரன் , தியாகராசா, திருமதி விஜயகுமாரி, திருமதியசிந்தா, கலாநிதிதனேந்திரன், செ.யோகநாதன், தங்கராசசிங்கம் ஆகியோர்தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவற்றுடன்இணைப்பாளராக டாக்டர் ஜெ.ஜெயபாலன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (இ-5)


## அகில இலங்கை ரீதியில் சிறந்த பெண் சாரணியாக வேம்படி மாணவி தெரிவு



"அகில இலங்கை மிகச் சிறந்த பெண்சாரணி' விருதை யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவியாழினி இராஜேந்திரன் பெற்றுள்ளார்.

இலங்கை பெண் சாரணிய மன்றத்தில் இவ்வாண்டு முதன் முறையாக அறிமுகப்படுத்தப் பட்ட இந்த விருதை, முதல் தடவையே வேம்படி மகளிர் கல்லூரி மாணவி சுவீகரித்திருக்கின்றமை சிறப்பானதாகும். இவர் 2013 ஆம் ஆண்டில் ஜனாதிபதி சாரணிய விருதைப் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஒன்பது மாகாண பெண் சாரணிய அமைப்புகள் இடையே இந்தப் போட்டி நடைபெற்றது. அதில் சிறந்த சாரணியாக யாழினி இராஜேந்திரன் தெரிவு செய்யப்பட்டார். இவர் பெண் சாரணிய மன்றத்தின் யாழ். மாவட்ட ஆணையாளர் திருமதி நீலா தர்மகுலசிங்கத்தினால்வழிநடத்தப்பட்டவர்என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ)



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் இயங்கும் கொள்கை திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு பணிப்பில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் இளைஞர்கழக சம்மேளனமும் இணைந்து **சிறுவர்களை எமது உயிர் போல காப்போம்** எனும் தொனிப்பொருளில் தேசிய வேலைத்திட்டம் யாழ்.மாவட்டத்தில் அனைத்து பிரதேச செயலர் பிரிவுகளிலும் நேற்றையதினம் நடைபெற்றது.

(படங்கள்:-பொ.சோபிகா)

# அடிப்படை வசதிகள் இன்றி 1,150 சிறுவர்கள் முகாமில்

## வலி.வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வு சங்கத்தலைவர் கவலை

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்தில் உள்ள நலன்புரி முகாம்களில் ஆயிரத்து 150 சிறுவர்கள் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி இன்றுவரை தமது கல்வியை தொடர்ந்து வருவதாக வலி.வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வு சங்கத் தலைவர் அ.குணபாலசிங்கம் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வலி.வடக்கிலிருந்து இடம் பெயர்ந்து 26 வருடங்களாக நலன்புரி முகாம்களில் அடிப்படை வசதிகள் ஏதுவும் இன்றி தமிழ்க் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இங்கு வாழ் பவர்கள் அதிகமாக கூலித் தொழில் செய்தே தமது வாழ் வாதாரத்தை கொண்டு செல் கின்றார்கள்.

அவர்களுடைய ஊதியம் அன்றாட உணவு தேவைக்கே போதுமானதாக இருக்கின்றதனால் தமது பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளில் கூடிய கவனம்செலுத்தமுடிவதில்லை.

இதனால் நலன்புரி முகாம்களில் உள்ள மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியான தாகவே இருக்கிறது.

தற்போது யாழ்.மாவட்டத்தில் உள்ள 26 நலன்புரிமுகாம்களில் ஆயிரத்து 26 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். அவர்களில்507 ஆண்களும் 519 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இவர்களை தவிர நலன்புரி முகாம்களை விட்டு வெளியே 124 மாணவர் கள் கல்விகற்று வருகின்றார்கள்.

அந்தவகையில் மல்லாகம் கோணப்புலம் நலன்புரி முகாமில் 62ஆண்களும் 66 பெண்களும் ஊறணி நலன்புரி நிலையத்தில் 13 ஆண்களும் 14 பெண்களும் மல்லாகம் நீதவான் முகாமில் 25 ஆண்களும் 33 பெண்களும் மல்லாகம் தும்பு தொழிற்சாலை முகா மில் 9 ஆண்களும் 11பெண்களும் தெல்லிப்பழை குட்டி யபுலம் நலன்புரி முகாமில் 23ஆண்களும் 23 பெண்களும் தெல்லிப்பழை நீதவான் வெளிமுகாமில் 6 ஆண்களும் 2 பெண்களும் உரும்பிராய்கிருஷ்ணன்கோவில் முகாமில் 41 ஆண்களும் 31 பெண்களும் உரும்பிராய் இலுப்பையடி முகாமில் 15 ஆண்களும் 21 பெண்களும் உரும்பிராய் சிவபுரம் முகாமில் 11 ஆண்களும் 17 பெண்களும் உரும் பிராய் யோகபுரம் நலன்புரி முகாமில் 34 ஆண்களும் 38 பெண்களும் உரும்பிராய் இந்துக்கல்லூரி சங்க முகாமில் 12 ஆண்களும் 12 பெண்களும் சுன்னாகம் பிள்ளையார் முகாமில் 19 ஆண்களும் 18 பெண்களும் உடுவில்நீதவான் முகாமில் 6 ஆண்களும் 7 பெண்களும் அளவெட்டி இலந்தையடி முகாமில் 18 ஆண்களும் 10 பெண்களும் சங்குவேலி இந்து நலன்புரி முகாமில் 6 ஆண்களும் 2 பெண்களும் சுன்னாகம் கண்ணகி நலன்புரி முகாமில் 77 ஆண்களும் 63 பெண்களும் உடுப்பிட்டி தெற்கு நலன்புரி முகாமில் 5 ஆண்களும் 5 பெண்களும் இணுவில் காரைக்கால் நலன்புரி முகாமில் 4 ஆண்களும் 4 பெண்ளும் காரைக் கால் நலன்புரி முகாம் வெளி முகாமில் 4ஆண்களும் 5 பெண்களும் பொலிகண்டி நிலவன் குடியிருப்பு முகாமில்22 ஆண்களும் 16 பெண்களும் பொலிகண் டி சின்னாவளை குடியிருப்பில் 26 ஆண்களும்ம் 24 பெண்களும்பொலிகண்டிபாலாவி முகா மில் 26 ஆண்களும் 41 பெண்களும் மயிலணி இந்து வித்தியாலயத்தில் 12 ஆண்களும் 13 பெண்களும் பருத்தித்துறை தெளியம்மன் முகாமில் 16 ஆண்களும் 17 பெண்க ளும் பருத்தித் துறை தெளியம்மன் முகாம் வெளியில் 12 ஆண்களும் 20 பெண்க ளும் காங்கே சன்துறை நலன்புரி முகாமில் 3 ஆண்களும் 6 பெண்களும் கல்விகற்று வருகின்றார்கள். எமது நீண்ட கால கோரிக் கைகளின் அடிப்படையில் சில சிலஉதவித்திட்டங்கள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால் மாணவர்களின் கல்வி செயற்பாட்டிற்கு எந்தவிதமான முன்னேற்றமான உதவித்திட்டங்களும் போதிய அளவில் கிடைக்கவில்லை.

எமது பிள்ளைகளின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு மாணவச் செல்வங்களை சரியான பாதையில்நடத்த வேண்டியது எமது ஒவ்வொருவரது கடமையாகும்.

அடிப்படை வசதிகள் சிறிதும்இன்றிகல்விநடவடிக்கையை தொடரும் மாணவர்களுக்கு அனைத்துதரப்பினரும்உதவி செய்து அவர்கள் எதிர்காலத்தை வளப்படுத்த வேண்டியது அவசியம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## திறந்த போட்டிப் பரீட்சை

வடக்கு மாகாண பொதுச் சேவையில் சாரதி சேவையின் தரம்III பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை-2015 நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளது என வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர்திருமதிரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சைக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களிடம் இருந்து தெரிவு செய்யப் பட்ட தகுதியான பரீட்சார்த்திகளுக்குபரீட்சைக்கானஅனுமதி அட்டைதபால்மூலம்ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

## சிறுவர் தின விழா

(இருபாலை)

யாழ்.நீர்வேலி சி.சி.தமிழ்க்கலவன் பாடசாலைகளின் சிறுவர் தின விழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அதிபர் தி.ரவீந்திரநாதன் தலைமையில்நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சிவசிறி.த.தியாகராஜக் குருக்கள் கலந்து கொள்ளவுள்ளார். இதன்போது மாணவர்களுக்கிடையில் கலை நிகழ்வுகளும் இடம்பெறவில்லை. (இ-5-136)




## ஞானச்சுடர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை பண்பாட்டுப் பேரவையின் வெளியீடான ஞானச்சுடர் இதழின் 212 ஆவது ஆவணிமாதமலர்வெளி வந்துள்ளது. (இ-5)

## காந்தி ஜெயந்தி தினம்

மகாத்மா காந்தியடிகளின் 146ஆவது காந்தி ஜெயந்தி தினத்தை முன்னிட்டு அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின்காந்தி ஜெயந்தி தினம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலை வீதியிலுள்ள மகாத்மா காந்தி அடிகளாரின்திருவுருவச்சிலையடியில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின்தலைவர்தி.இராசநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இந்தியத் துணைத்தூதர் ஆ.நடராஜன் கலந்து கொள்ளவுள்ளார்.

இதன்போது உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்தல், மலரஞ்சலி, நினைவுரை என்பன இடம்பெறும்.

இந்நிகழ்வில் காந்திய அபிமானிகள், காந்தி பக்தர்கள், பொதுமக்கள் என அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் பொதுச் செயலாளர் எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி அறிவித்துள்ளார்.

இதேவேளை இந்நிகழ்வு கிளிநொச்சி உருத்திரபுரத்தில் அமைந்துள்ள காந்தி நிலையம் சிறுவர் இல்லத்திலும் இல்லப் பொறுப்பாளர் எம்.மோகனதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு வறுமையில் முதலிடத்தில்

(மல்லாவி)

**நாட்டில் இடம்பெற்ற 30வருடகால யுத்தம் மற்றும் பல்வேறுபட்ட காரணங்களினால் மிக மோசமாக பாதிக்கப்பட்டு வறுமைக் கோட்டின் கீழ் மக்கள் வாழ்கின்ற மாவட்டங்களில் முதல் இடத்தில் முல்லைத்தீவு மாவட்டம் காணப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ள ஆண்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இது தொடர்பாக தெரியவருவதாவது, ஐக்கிய நாடுகள் சபையின் ஆண்டறிக்கையில் இலங்கை தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் படி இலங்கையில் உள்ள 25 மாவட்டங்களில் மிகமோசமான நிலையில் முல்லைத்தீவு மாவட்டம் காணப்படுவதாகவும் இங்கு 30 வீதமான மக்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்றனர்.

இதேவேளை கொழும்பு மாவட்டத்தில் வறுமைக்கோட்டின் கீழ் 1.4 வீதமான மக்களே வாழ்கின்றனர்.

இதேபோல் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு வறுமைக்கோட்டின் கீழ் மக்கள் வாழ்கின்ற மாவட்டமாக இரண்டாவது இடத்தில் கிளிநொச்சி மாவட்டம் காணப்படுகின்றது.

இங்கு 13 வீதமான மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றனர் என அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (2-15)




## மாகாண மட்ட போட்டியில் மூன்றாமிடம்

(குருமன்காடு)

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையில் சிரேஷ்ட பிரிவு மாணவர்களுக்கு மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட கணித. நாடகப்போட்டியில் பின்தங்கிய பாடசாலைகளில் ஒன்றான வவு/சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம் முதன் முதலாக மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது. இதேவேளை. குறித்த போட்டியில் யாழ்.சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி முதலாம் இடத்தையும். வெள்ளாங்குளம் அ.த.க பாடசாலை இரண்டாம் இடத்தையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

குறித்த போட்டி யாழ்.சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. (2-250)

## துணுக்காய் வலயமட்ட விஞ்ஞான விநாடி வினா போட்டி முடிவுகள்

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்தின் கீழுள்ள இடைநிலை பாடசாலை மாணவர்களுக்கு இடையில் வலயமட்ட ரீதியில் நடைபெற்று முடிந்த விஞ்ஞான விநாடி வினாப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்று மாகாண மட்டப்போட்டிக்கு தெரிவாகியுள்ள மாணவர்களின் விபரங்களை துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார். இதற்கமைய,

தமிழ் மொழி மூலம்

தரம்-6, ம.கௌதம் (மு/யோகபுரம் மகா வித்தி.), ஜெ.யூட் மரியன் (மு/மல்லாவி மத்திய கல்லூரி), பா.அபிசன் (மு/மல்லாவி மத்திய கல்லூரி). தரம்-7, க.லக்ஷிகா (மு/யோகபுரம் மகா வித்தியாலயம்), கா.விஜேந்தினி(மு/பாண்டியன் குளம் மகா வித்தி.), சி.தமிழழகன்(மு/யோகபுரம் மகா வித்தி.) தரம்-8, யோ.கபிலன்(மு/மல்லாவி மத்திய கல்லூரி), இ.நர்மதா (மு/பாலிநகர் மகா வித்தி.), ஞா.நிசாயினி (மு/திருமுறிகண்டி இந்து வித்தி.) தரம்-9, பா.அஜிர்தன்(மு/மல்லாவி மத்திய கல்லூரி), யோ.டிலானி (மு/பாலிநகர் மகா வித்தி.), பி.எடின்சியா(மு/யோகபுரம் மகா வித்தி.).


தரம்-10, வ.பிரியங்கன் (மு/யோகபுரம் மகா வித்தி.), வ.நிலாயினி (மு/மல்லாவி மத்திய கல்லூரி), க.அனுஷா(மு/யோகபுரம் மகா வித்தி.) தரம்-11, சி.வினோதன்(மு/மல்லாவி மத்திய கல்லூரி), யோ.நிரோஜா(மு/யோகபுரம் மகா வித்தி.), த.டினோஜா(மு/ஒட்டுசுட்டான் மகா வித்தி.) ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.

ஆங்கில மொழி மூலம்

தரம்-6 எஸ்.வினோஜா (மு/மல்லாவி மத்திய கல்லூரி), ரி.அஜேய் (மு/மல்லாவி மத்திய கல்லூரி), பி.பானுஜா(மு/மல்லாவி மத்திய கல்லூரி) தரம்-7, எஸ்.கவிதாஜினி (மு/மாங்குளம் மகா வித்தி.) தரம்-8, ப.மிதுசன் (மு/மல்லாவி மத்திய கல்லூரி) தரம்-10, ரி.லனோஜிகா (மு/ஒட்டுசுட்டான் மகா வித்தி.), இ.நிக்சனா (மு/ஒட்டுசுட்டான் மகா வித்தி.) ஆகியோர் தெரிவாகியுள்ளதாக அவர் அறிவித்துள்ளார். (2-15)

## தூக்குத்தண்டனையை வலியுறுத்தி வவு.வில் கையெழுத்துப் போராட்டம்

(குருமன்காடு)




பெண்கள். சிறுவர்கள் மீது இழைக்கப்படும் பாலியல் வன்புணர்வுக் குற்றவாளிகளுக்கு மரணதண்டனை வழங்கக்கோரி இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய தொழிற்சங்கத்தினால் கையெழுத்து போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வவுனியா பேருந்து தரிப்பிடத்தில் கடந்த இரு தினங்கள் நடைபெற்றது.

யுத்தத்திற்கு பின்னர் நாட்டில் சிறுவர், பெண்கள் மீதான வன்புனர்வுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. நாளாந்தம் இவை தொடர்பான செய்திகள் மனதை உருக்குவதுடன் மனித மிருகத்தனமான செயற்பாடுகளை எண்ணி தலைகுனிய வைக்கிறது. இதனால் இவ்வாறு குற்றச் செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனையாக தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும்.

அதன் மூலமே எமது சமூகத்தை பாதுகாக்க முடியும் என கையெழுத்துப் போராட்டத்தில் ஈடுபட்ட சங்க உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இக் கையெழுத்துப் போராட்டத்தில் பெருமளவான பொதுமக்கள் ஆர்வத்துடன் கையொப்பம் இட்டனர். (2-250)



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் இயங்கும் கொள்கைத்திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பணிப்பில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் இலங்கை இளைஞர்கழக சம்மேளனமும் இணைந்து நடத்திய சிறுவர்களை உயிர்போல் காப்போம எனும் தேசிய வேலைத்திட்டம் நேற்று முற்பகல் 10 மணியளவில் முறையே கரைதுறைப்பற்று, மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான், துணுக்காய் ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளினால் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டதைப் படங்களில் காணலாம். (படங்கள்: பனிக்கன்குளம் செய்தியாளர்)

## பாடசாலைகளுக்கு மனைப்பொருள் விஞ்ஞான ஆய்வுகூட உபகரணங்கள் அன்பளிப்பு

(மல்லாவி)

நாடு தழுவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 250 பாடசாலைகளுக்கு மனைப்பொருள் விஞ்ஞான ஆய்வுகூட உபகரணங்களை தனியாருக்கு சொந்தமான சிங்கர் நிறுவனம் அன்பளிப்பு செய்வதற்கு முன்வந்துள்ளதாக மத்திய கல்வியமைச்சின் செயலாளர் உபாலிமாரசிங்க அறிவித்துள்ளார்.

மத்திய கல்வி அமைச்சும் தனியார் சிங்கர் நிறுவனமும் இணைந்து நடத்திய மனைப் பொருள் விஞ்ஞான விடய அபிவிருத்திக்கான செயலமர்வில் வெளிப்படுத்தப்பட்ட ஆர்வத்தின் காரணமாகவே உபகரணங்கள் வழங்குவதற்கு குறித்த நிறுவனம் முன்வந்துள்ளது. இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

நாடு தழுவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 250 பாடசாலைகளுக்கான மனைப்பொருள் விஞ்ஞான ஆய்வுகூட உபகரணங்கள் அன்பளிப்பு செய்யப்படவுள்ளன.

இதன் முதல் கட்டமாக தெரிவு செய்யப்பட்ட 150 பாடசாலைகளுக்கான உபகரணங்களை கடந்த மாதம் 14 ஆம் திகதி மத்திய கல்வியமைச்சின் நான்காவது மாடியிலுள்ள ஒன்றுகூடல் மண்டபத்தில் கல்வி அமைச்சரின் தலைமையில் வைத்து வழங்கப்பட்டது.

அன்றையதினம் வடக்கு மாகாணத்தில் இருந்து முதல் கட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மன்/அல்ஹாசார் தேசிய பாடசாலை, கிளி / சென்.திரேசா மகளிர் கல்லூரி, யாழ் / வேலணை மத்திய கல்லூரி, யாழ் /இராமநாதன் மகளிர் கல்லூரி, வவு/பறக்கும் பாவ மகா வித்தியாலயம், மன்/முருங்கன் மகா வித்தியாலயம், யாழ்/நெடுந்தீவு மகா வித்தியாலயம், மு/புதுக்குடியிருப்புமத்திய கல்லூரி, வவு/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, மன்/முசலி மகா வித்தியாலயம், மு/மாங்குளம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

எனினும் மேற்குறிப்பிட்ட பாடசாலைகளில் ஏதாவது பாடசாலை நிகழ்வில் கலந்து கொண்டு உபகரணங்களைப் பெற்றுக் கொள்ள தவறி இருப்பின் திருமதி சுநேத்திரா, வலயக் கல்விப் பணிப்பாளர், மத்திய கல்வி அமைச்சு என்பவருடன் 071 166 0299 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அனுமதிக்கடிதத்தைப் பெற்று சிங்கர் நிறுவனத்தில் பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடியுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

## முதியோர் கௌரவிப்பும் வைத்திய ஆலோசனை முகாமும்

சர்வதேச முதியோர் தினத்தையொட்டி முதியோர் கௌரவிப்பு நிகழ்வும் வைத்திய ஆலோசனை முகாமும் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு கிளிநொச்சி தேசிய சேமிப்பு வங்கியில் வங்கி முகாமையாளர் கி.இன்பராஜ் தலைமையில் நடைபெறும். (2-254)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாலியல் குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை வேண்டும்

## வவுனியாவில் கவனயீர்ப்பு







(பனிக்கன்குளம்)

சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தி கொலை செய்த குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கப்பட வேண்டும், சிறுவர்கள் மீதான வன்முறைக்கு எதிராக கடுமையாக சட்டங்களைக் கொண்டுவர வேண்டும் என வலியுறுதி வவுனியா பேருந்து நிலையத்திற்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று காலை 9.30 மணியளவில் இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம், சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு, இலங்கை ஆசிரியர் சங்கம், வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்கம் ஆகியோர் ஒன்றிணைந்து போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இப்போராட்டத்தில் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், வைத்திய கலாநிதி சி.சிவமோகன், வடமாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், எம்.தியாகராசா, எம்.பி. நடராசா, சு.இந்திரராசா உட்பட அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

நாட்டில் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் பெண்கள் மீதான பாலியல் வன்முறை சின்னஞ்சிறு பெண்குழந்தைகளின் மீதும் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது.

புங்குடுதீவு வித்தியா வன்புணர்வு படுகொலை மீதான மக்களின் கண்டனப் பேரணிகள் நாடு பூராகவும் நடத்தப்பட்டு வந்தது.

இதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கக் கோரியும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

அதன் நடவடிக்கைகள் தணிய முன்னர் மீண்டும் இவ்வாறான கொடூரமான சம்பவம் கம்பஹாவில் சிறுமி சேயா மீதும் நடைபெற்றுள்ளது. இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்தும் நடைபெறாதபடி பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

இதனை கடுமையாகக் கண்டித்தும் சட்ட நடவடிக்கையை பாரபட்சமின்றி முன்னெடுக்குமாறும் வலியுறுத்தியும் போதைவஸ்து பழக்கத்தை கட்டுப்படுத்தக்கோரியும் குறித்த கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (2-28)




# ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் மன்னார் மாவட்டத்திற்கு வீட்டுத்திட்டம்

## இலங்கைக்கான ஒப்பந்தம், நிதி மற்றும் கணக்காய்வுக்கான தலைமை அதிகாரி தெரிவிப்பு



(பனிக்கன்குளம்)

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் வடக்கு மாகாணத்தில் அமைக்கப்படவுள்ள வீட்டுத் திட்டங்கள் மன்னார் மாவட்டத்திற்கும் வழங்கப்படும் என ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான ஒப்பந்தம், நிதி மற்றும் கணக்காய்வுக்கான தலைமை அதிகாரி டி.வில்லியம் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட பொது மக்கள் தொழில் சேவை மத்திய நிலையம் நேற்று காலை திறந்து வைக்கப்பட்டது.

இதனை அடுத்து மன்னார் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய தலைமையில் விசேட கூட்டம் நடைபெற்றது.

இதில் அதிகாரிகளுடன் கலந்துரையாடும் போதே மேற்கண்டவாறு அவர் கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

மன்னார் மாவட்டத்தில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள முடியாது உள்ளவர்கள், தமது தகைமைக்கு அமைவாக தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளும் வகையில் மாவட்ட பொது மக்கள் தொழில் சேவை மத்திய நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியுடன் வட மாகாணத்தில் அமைக்கப்படவுள்ள வீட்டுத் திட்டத்தில் மன்னார் மாவட்டம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

குறித்த செய்தியில் உண்மை இல்லை. ஏனைய மாவட்டங்களைப்போன்று மன்னார் மாவட்டத்திற்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியுடன் அமைக்கப்படும் வீட்டுத் திட்டங்கள் கிடைக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த நிலையத்தை ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான ஒப்பந்தம், நிதி மற்றும் கணக்காய்வுக்கான தலைமை அதிகாரி டி.வில்லியம், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய, உதவி அரசாங்க அதிபர் நந்தினி ஸ்ரான்லி டி மேல் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

இதன்போது பிரதேச செயலாளர்கள் திணைக்களத் தலைவர்கள் என பலர் கலந்துகொண்டிருந்தனர். (2-281-4)

# ஆலை அமைப்பதற்கான பணிகள் ஆரம்பம்

(பனிக்கன்குளம்)

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சினால் மடு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பாலம்பிட்டி மற்றும் அதனை அண்மித்த மூன்று கிராமத்திற்குமான அரைக்கும் ஆலையொன்றை அமைப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த பணியினை பார்வையிடுவதற்காக அண்மையில் வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் சென்றதுடன் கிராம மட்ட அமைப்புக்கள் மற்றும் கிராமங்களின் தலைவர்கள் ஆகியோருடன் விசேட கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

இவ் அரைக்கும் ஆலை மூலமாக தாமும் அயலிலுள்ள மூன்று கிராமங்களும் நன்மை அடையவுள்ளதாகவும் இதுவரை ஒரு அரைக்கும் ஆலை இல்லாமல் தாம் தமது அன்றாடத் தேவைகளுக்கு மிகவும் சிரமப்பட்டதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில் மடு பிரதேச செயலாளர் திரு. எப்.சி.சத்தியசோதி, வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் மன்னார், வவுனியா மாவட்ட பிரதம பொறியியலாளர் எஸ்.ரகுநாதன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (2-28)

# "பாரிசவாத நோயை தவிர்த்தல்" தேசியமட்டத்தில் சித்திரப்போட்டி

(மல்லாவி)

இலங்கை சுகாதார கல்விப்பணியகம், சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சு ஆகியவற்றின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிமனையின் ஒழுங்கமைப்பில், பாரிசவாத நோயைத் தவிர்த்தல் பற்றிய தேசிய மட்டத்திலான சித்திரப்போட்டி பாடசாலை மாணவர்கள் மட்டத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம்-9 இல் கல்வி பயிலும் மாணவர்கள் இப்போட்டியில் பங்கேற்க முடியும்.

ஆரோக்கிய வாழ்க்கை முறைகளின் மூலமாக பாரிசவாதத்தை தடுப்போம் எனும் தொனிப்பொருளில் ஏ3 அளவுள்ள தாளில் பென்சில் வர்ணம் தவிர்ந்த ஏனைய வர்ணங்களைப் பயன்படுத்தி சித்திரம் வரையப்பட வேண்டும்.

ஓவியத்தின் பின்புறம் மாவட்டம், மாணவர் பெயர், வகுப்பு, பாடசாலை ஆகியவற்றைக் குறிப்பிட்டு அதிபரின் சிபார்சுடன் மாணவர்கள் கல்வி பயின்று வருகின்ற பாடசாலைகளுக்கு அண்மையாக அமைந்துள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் (முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, மல்லாவி, ஒட்டுசுட்டான்) நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ எதிர்வரும் 5 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னராக கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்க வேண்டும் என அவர் கேட்டுள்ளார். (2-15)

# மகாத்மா காந்தி அடிகளின் பிறந்த தினத்தன்று மரநடுகை

(பூநகரி)

பூநகரி அறக்கட்டளை சரஸ்வதி பிருந்தாவனத்தின் ஏற்பாட்டில் மகாத்மா காந்தி அடிகளின் 146 ஆவது பிறந்த தினமாகிய நாளை வெள்ளிக்கிழமை கிராஞ்சிக் கிராமத்தில் மரங்கள் நடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இன்றைய சூழ்நிலையில் மரங்கள் நடுவது மிக அவசியத்தேவையாகும்.

ஒவ்வொருவரையும் வேம்பு, தென்னை, பனை, புளி, நாவல், இலுப்பை போன்ற மரங்களுள் ஏதாவது ஒன்றிற்கு மேற்பட்ட மரங்களை நட்டு கிராமத்தை வளமாக்குவதற்கு முன்வரவேண்டும்.

இத்திட்டம் மகாத்மா காந்தி அடிகளின் 150 ஆவது பிறந்த தினமான 2019 ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதிவரை நடைமுறைப்படுத்தப்படவுள்ள ஐந்தாண்டுத் திட்டமாகும்.

எனவே ஒவ்வொருவரும் மரங்களை நடுவதற்கு அன்றைய தினம் முன்வரவேண்டும் என கேட்கப்பட்டுள்ளது.

மரக்கன்றுகள் இல்லாதவர்கள் 07781 32314 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸாரின் ஆயுதங்களுடன் ஒப்பந்தக் கொலையாளிகள்!

வர்த்தகர் ஒருவரை கொலை செய்யும் நோக்குடன் பொலிஸார் மற்றும் கடற்படையினரின் ஆயுதங்களை பதுக்கி வைத்திருந்த இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது, களுத்துறையில் உள்ள முக்கிய வர்த்தகர் ஒருவரை கொலைசெய்வதற்கு திட்டமிட்ட வர்த்தகர் ஒருவர் தனது உதவிக்கு பாதாள உலகக்குழு உறுப்பினர் ஒருவரையும் சேர்த்துக் கொண்டுள்ளார்.

இதனையடுத்து இவர்கள் இருவரும் தங்களின் நண்பர்கள் மூலமாக பொலிஸாரிடமிருந்து ஒரு துப்பாக்கியும் கடற்படையினரிடமிருந்து ஒரு துப்பாக்கியையும் இரவலாக வாங்கிக் கொண்டுள்ளனர்.

அவற்றின் தொடர் இலக்கங்களை சுரண்டி அழித்துவிட்டு வர்த்தகரை கொலை செய்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்காக பாதாள உலகக்கும்பலின் உறுப்பினருக்கு ஆறு இலட்சம் ரூபா ஒப்பந்தம் பேசப்பட்டுள்ளது. எனினும் கொலை நடைபெறுவதற்கு முன்னதாக இருவரும் பொலிஸில் மாட்டிக்கொண்டுவிட்டனர்.

பொலிஸ் மற்றும் கடற்படையினருக்கு உரித்தான துப்பாக்கிகள் பாதாள உலகக் - கும் பலிடமிருந்து கைப்பற்றப்பட்டிருப்பது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.




# ஐ.நா. அறிக்கையை மகிந்த விமர்சிப்பது கவலை தருகின்றது

(கொழும்பு)

**இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பில் உள்நாட்டு விசாரணையை வலியுறுத்தும் ஐ.நா. அறிக்கையை முன்னாள் ஜனாதிபதி மகிந்த விமர்சிப்பது கவலைக்குரியது என்று அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக திவயின பத்திரிகைக்கு. வழங்கியுள்ள நேர்காணலில் பல்கலைக்கழக மற்றும் பெருந்தெருக்கள் அபிவிருத்தி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளதாவது,

இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பில் உள்நாட்டு விசாரணையை வலியுறுத்தும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அறிக்கையை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விமர்சிப்பதானது ஒருவகையில் நகைப்புக்கிடமானதாகும். இன்னொரு புறத்தில் கவலைக்குரிய விடயமாகும். இந்த விடயம் தொடர்பில் சர்வதேச விசாரணையொன்றை நடத்த அதிகாரம் பொருந்திய நாடுகளும் சர்வதேச அமைப்புகளும் ஒன்று திரண்டிருந்த வேளையில், அதனைத் தடுத்து உள்நாட்டு விசாரணைக்கு அனுமதி பெற்றுக்கொள்வதில் அரசாங்கம் வெற்றிகண்டுள்ளது.

இந்தப் பிரச்சினை இந்தளவு தீவிரமடையக் காரணமே மகிந்த ராஜபக்ஷதான். எனவே அவர் இனியும் குறுகிய அரசியல் இலாபங்களுக்காக அரசியல் செய்வதை விடுத்து, நாட்டையும் இராணுவத்தினரையும் பாதுகாப்பதற்கு அரசாங்கத்துடன் ஒத்துழைத்து, இந்த



விசாரணை விவகாரம் நல்லபடியாக முடிவடைய உதவ வேண்டும் என்றும் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# பல்கலைக்கழகங்கள் இனிமேல் சுயாதீனமாக செயற்பட முடியும்

## அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல உறுதி

(கொழும்பு)

புதிய அரசாங்கத்தின் கீழ் பல்கலைக்கழகங்களில் எதுவித அரசியல் தலையீடுகளும் இருக்காது என பல்கலைக்கழக கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல உறுதிமொழி வழங்கியுள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் நேற்றுமுன்தினம் பல்கலைக்கழக துணைவேந்தர்கள், பல்கலைக்கழக பதிவாளர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்களைச் சந்தித்த போதே அமைச்சர் இந்த உறுதிமொழியை வழங்கினார். பல்கலைக்கழகங்கள் இனிமேல் எதுவித அரசியல் தலையீடுகளின்றி சுயாதீனமாகத் தமது செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும்.

இருந்தாலும் பல்கலைக்கழக நிர்வாகங்களின் செயற்பாடானது பொறுப்புக்கூறும் வகையில் அமைந்திருப்பதுடன் வெளிப்படையாக இருப்பது அவசியம் என்றும் தெரிவித்தார்.

பல்கலைக்கழகங்களின் சுயாதீனமான செயற்பாட்டை உறுதிப்படுத்தும் நோக்கில் 19 ஆவது திருத்தச்சட்டத்தில் ஐ.தே.க. ஏனைய சுயாதீன ஆணைக்குழுக்களைப் போன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவொன்றை பிரேரித்திருந்தது.

எனினும் அப்போது எதிர்த்தரப்பில் இருந்தவர்களால் இறுதி நேரத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கான யோசனை நிராகரிக்கப்பட்டது. இருந்தபோதும் அடுத்த வருடம் முன்னெடுக்கப்படவிருக்கும் புதிய அரசியலமைப்பு தயாரிப்பின் போது இதனையும் உள்ளடக்க எதிர்பார்த்திருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

தொழிற்சந்தையின் கேள்விக்கு ஏற்றவகையில் பல்கலைக்கழகத்தின் கல்விச் செயற்பாடுகளை வடிவமைக்க வேண்டிய தேவை வலுவடைந்திருப்பதைச் சுட்டிக்காட்டிய அமைச்சர், தொழிற்சந்தைக்கு ஏற்றவகையில் பட்டதாரிகளை தயார்படுத்த வேண்டிய பொறுப்பை பல்கலைக்கழகங்கள் ஏற்கவேண்டும்.

அமைச்சர் அவ்வாறு கட்டளையிட்டிருக்கிறார் எனக்கூறி விடயங்களைத் தட்டிக்கழிக்க இனிமேல் பல்கலைக்கழக நிர்வாகங்களுக்கு இடமில்லை. வெளிநாடுகளில் ஒவ்வொரு பல்கலைக்கழகங்களுக்குமிடையில் போட்டி காணப்படுகின்றது. அவ்வாறானதொரு போட்டித்தன்மையை ஏற்படுத்தி தொழிற்சந்தையின் கேள்விக்கு ஏற்ப பட்டதாரிகளைத் தயார்படுத்துவதில் பல்கலைக்கழகங்கள் தமக்கிடையில் போட்டியைக் கொண்டிருக்க வேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். பல்கலைக்கழகம் வெறுமனே கல்வியுடன் தனிமைப்பட்டதாக இருக்க முடியாது என்றும் அமைச்சர் கிரியெல்ல மேலும் தெரிவித்தார். (இ-7)

# பத்து சுயாதீன ஆணைக்குழுக்களுக்குள் சகல இனத்தவர்களையும் இணைக்கவும்

(கொழும்பு)

19 ஆவது திருத்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்டுள்ள 10 சுயாதீனக் ஆணைக்குழுக்களுக்கும் சகல இனத்தவர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் உறுப்பினர்களை நியமிக்குமாறு நல்லாட்சிக்கான தேசிய முன்னணி சபாநாயகரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நல்லாட்சிக்கான தேசிய முன்னணி தனது கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

"இலங்கையின் 8 ஆவது பாராளுமன்றத்தின் சபாநாயகராக நீங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறித்து நல்லாட்சிக்கான தேசிய முன்னணி தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றது.

சபாநாயகர் பதவிக்கு உங்களைப் போன்ற ஒரு ஆளுமைமிக்க ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருப்பதானது சரியான தருணத்தில் செய்யப்பட்ட புத்திசாதுரியமான ஒரு செயலாகவே நாம் கருதுகிறோம்.

பக்கச்சார்பற்ற விடயங்களை பரந்த நோக்கில் பார்க்கின்ற நடுநிலையான ஒரு தலைமைத்துவத்தின் அவசியம் களத்தின் தேவையாக உள்ளது.

சுதந்திர இலங்கையில் நாம் வெற்றி பெற்ற ஒரு தேசமாக வருவதற்குரிய சகல வாய்ப்புக்களையும் இழந்து தோல்வியுற்றிருக்கின்ற நிலையில் எமது எதிர்காலம் குறித்து புதிய நம்பிக்கைகளும் எதிர்பார்ப்புகளும் புதிய அரசாங்கத்தின் கீழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளன.

100 நாட்கள் அரசாங்கத்தின் போது மேற்கொள்ளப்பட்ட 19 ஆவது திருத்தப்பிரேரணை அரசாங்கத்தின் பல நிறுவனங்களையும் ஜனநாயக மயப்படுத்தக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் நிர்வாகத்தின் பல முக்கிய பகுதிகளுக்கும் நிறுவனங்களுக்கும் சுயாதீன ஆணைக்குழுக்களை உருவாக்க வழிவகுத்துள்ளது.

துருவப்படுத்தப்பட்டுள்ள எமது தேசத்தின் மக்களான சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் மத்தியில் பரஸ்பரம் நம்பிக்கைகளைக் கட்டியெழுப்பக்கூடிய ஒரு அருமையான சந்தர்ப்பமாகவே நல்லாட்சிக்கான தேசிய முன்னணி இதனைக் கருதுகின்றது.

எனவே, அனைத்து ஆணைக்குழுக்களுக்கும் உறுப்பினர்களை நியமனம் செய்யும்போது மலையகத் தமிழர்கள் உட்பட சகல இன மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகைகளில் உறுப்பினர்களைத் தெரிவு செய்யுமாறு நல்லாட்சிக்கான தேசிய முன்னணி வேண்டிக் கொள்கின்றது.

நாம் இந்த வேண்டுகோளை விடுத்திருப்பது தேசிய ஐக்கியம் மற்றும் மீள் இணக்கம் குறித்து புதிய அரசாங்கம் உண்மையான அக்கறையோடு செயற்படுகின்றது என்பதனை வெளிப்படுத்தவும் எமது தேசத்தின் சகல தரப்பினரையும் அங்கீகரிப்பதாகவும் தேசிய விவகாரங்களில் அவர்களது பங்களிப்பினை வழங்கக்கூடிய வாய்ப்பினை அவர்களுக்கு வழங்குவதாகவும் அமையும்.

எனவே, அரசியலமைப்பு கவுன்சிலானது உங்களது தலைமையில் எமது இந்த ஆலோசனைகளைச் சாதகமாகப் பரிசீலித்து உரிய கவனத்தைச் செலுத்தி அமையப்போகும் ஒவ்வொரு குழுக்களுக்கும் சகல இனக் குழுக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் உறுப்பினர்களை நியமனம் செய்வதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# 47 மாணவர்கள் வைத்தியசாலையில்

லிந்துலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இராணிவத்தை தமிழ் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் 47 மாணவர்கள் லிந்துலை வைத்தியசாலையில் நேற்று முற்பகல் 10 மணியளவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மேற்படி பாடசாலை அண்மித்த பகுதியில் விவசாயம் செய்யும் விவசாயி ஒருவர் மரக்கறிகளுக்கு மருந்துகள் தெளித்துள்ளார்.

எனினும் மருந்தில் மூலம் வீசிய துர்நாற்றத்தை மாணவர்கள் சுவாசித்ததால் மூச்சு திணறல் ஏற்பட்டுள்ளதோடு வயிற்று வலியும் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை சில மாணவர்கள் மயங்கி விழுந்ததாகவும் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள், லிந்துலை பொலிஸ் உத்தியோகத்தர்களின் உதவியோடு லிந்துலை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 47 மாணவர்கள் வைத்திய சிகிச்சையின் பின் வீடு திரும்பியதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நேபாள இறையாண்மையில் இந்தியா தலையிடுகிறது

## நேபாளம் குற்றச்சாட்டு; 42 தொலைக்காட்சி சேவைகளுக்கு தடை விதிப்பு

(காத்மண்டு)

**நேபாளத்தின் இறையாண்மையில் இந்தியா தலையிடுகிறது என்று குற்றம்சாட்டி இந்திய தொலைக்காட்சி சேவைகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.**




நேபாள கேபிள் தொலைக்காட்சி இயக்குநர்கள் நேபாளத்தின் உள்நாட்டு அரசியலில் இந்தியா தலையிடுகிறது என குற்றம்சாட்டி, தமது எதிர்ப்பை பதிவுசெய்யும் வகையில் இந்தியாவை சேர்ந்த 42 தொலைக்காட்சி சனல்களுக்கு தடைவிதித்து உள்ளது. நேபாளத்தில் ஒளிபரப்பு செய்யப்பட்ட இந்தியாவின் செய்தி மற்றும் பொழுதுபோக்கு தொலைக்காட்சிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. நேபாளம் நாட்டிற்குள் பொருட்கள் வருவதை இந்தியஅரசு அதிகாரபூர்வமற்ற வகையில்தடைசெய்துள்ளதற்கு எதிர்ப்பை காட்டுவதற்கு இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேபாளத்தில் புதிய அரசியலமைப்பு சட்டம் கடந்த 20 ஆம் திகதி அதிகாரபூர்வமாக நடைமுறைக்கு வந்தது. புதிய அரசியலமைப்பிற்கு எதிர்ப்பு தெரிவித்து நேபாளத்தின் தென்பகுதியில் அதிகம் வசிக்கும் இந்திய வம்சாவளி பிரிவினர் எதிராக போராட்டம் நடத்தினர். இவ்விவகாரத்தில் கவலை தெரிவித்துள்ள இந்தியா, சில பரிந்துரைகளை வழங்கியது. ஆனால் இந்தியாவைவிட எங்களுடைய அரசியலமைப்பு சிறந்தது என்று நேபாளம் கூறிவிட்டது.

பொருட்கள்எடுத்து செல்வதற்கு இந்திய அரசு தடையை ஏற்படுத்தி யுள்ளது என்ற குற்றச்சாட்டுக்கு இந்தியா மறுப்பு தெரிவித்துள்ளது. எல்லையில் உணவுப் பொருட்கள் பாதுகாப்பு காரணமாக மறித்து வைக்கப்பட்டுள்ளது என்று இந்தியா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நேபாள கேபிள் தொலைக்காட்சி சங்கத்தின் தலைவர் பி.பி.சி. நேபாளிக்கு அளித்து உள்ள பேட்டியில், "தடை என்பதுமுடிவில்லாமல்தொடரும்" என்று குறிப்பிட்டுள்ளார். சுதிர்பிராஜுலி பேசுகையில், நேபாள இறையாண்மையில் இந்தியா தலையிடுவதன் காரணமாகவே இந்திய தொலைக் காட்சிகள்ஒளிபரப்பு செய்வ தற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார். காத்மண்டு திரையரங்குகளில் இந்திய திரைப்படங்களை திரையிட இரண்டு நாட்களுக்கு முன்னதாக தடை செய்யப்பட்டு விட்டது என்று அதன் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர். (3-7)

## பரஸ்பரம் கையசைத்த நவாஸ் – மோடி



ஐ.நா. பொது சபை கூட்டத்தில் பங்கேற்ற இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீபும் நியூயார்க்கில் ஒரே ஹோட்டலில் தங்கியிருந்தனர். ஆனால் இருவரும் சந்தித்துப் பேசவில்லை. ஐ.நா. அமைதிப் படை பணிகள் குறித்த கூட்டத்தில் மோடியும் நவாஸும் எதிரெதிர திசையில் அமர்ந்திருந்தனர்.

கூட்டம் தொடங்குவதற்கு முன்பு மோடியை நோக்கி நவாஸ் கையசைத்தார். அதை புன்முறுவலுடன் ஆமோதித்த மோடி பதிலுக்கு கையசைத்தார். சிறிது நேரத்துக்குப் பிறகு நவாஸை நோக்கி மோடி கையசைத்தார். பதிலுக்கு நவாஸ் தலையை ஆட்டி புன்னகைத்தார். ஆனால் இந்த கூட்டத்தில் இரு தலைவர்களும் கைகுலுக்கவோ, பேசவோ இல்லை.

கடந்த ஜூலையில் ரஷ்யாவின் உபா நகரில்நடைபெற்றஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டின்போது மோடியும் நவாஸும் சந்தித்துப் பேசினார். அப்போது இருநாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் நிலையில் பேச்சுவார்த்தை நடத்த முடிவு செய்யப் பட்டது. ஆனால் காஷ்மீர விவகாரத்தால் இந்த பேச்சுவார்த்தையை பாகிஸ்தான் ரத்து செய்துவிட்டது. இதன்பின் இருநாடுகளி டையே விரிசல் அதிகரித்துள்ளது. (3-7)

## ஐ.நா. அமைதிப் படையில் உரிய பிரதிநிதித்துவம் வேண்டும்

### பிரதமர் மோடி வலியுறுத்து

ஐ.நா. அமைதிப் படையில் இந்தியாவுக்கு உரிய பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத் தியுள்ளார்.

ஐ.நா. பொது சபை மாநாட்டின் ஒரு பகுதியாக அமைதிப் படை பணிகள் குறித்த சிறப்பு கூட்டம் நியூயோர்க்கில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கி மூன், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உட்பட 50-க்கும்மேற்பட்ட தலைவர்கள கலந்துகொண்டு உரையாற்றினர்.

ஐ.நா. அமைதிப் படையில் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் இந்திய வீரர்கள் பணியாற்றி வருகின்றனர். ஐ.நா. கேட்டுக் கொண்டபடி இப்போது கூடுதலாக 850 இந்திய வீரர்கள் அனுப்பப்படுகின்றனர். அவர்கள் தவிர மூன்று பொலிஸ் குழுக்களும் அமைதிப் படையில் இணைக்கப்பட உள்ளன. பல்வேறு நாடுகளில் அமைதிப் பணியின் போது 161 இந்திய வீரர்கள் உயிரிழந்துள்ளனர்.

அமைதிப் படைக்கு கூடுதல் வீரர்களை அளித்து வரும் இந்தியாவுக்கு உரிய பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை என்று நீண்டகாலமாக குற்றம் சாட்டப்பட்டு வருகிறது. இந்த விவகாரம் குறித்து பிரதமர் நரேந்திர மோடி கூட்டத்தில் பேசுகையில்,

அமைதிப் படைக்கு அதிக வீரர்களை அனுப்பும் நாடுகளுக்கு உரிய பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை. குறிப்பாக முடிவெடுக்கும் அதிகார குழுவில் இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு இடம் அளிக்கப்படவில்லை.

அமைதிப் படை வீரர்கள் பாதுகாப்பு பணியில் மட்டுமே ஈடுபட வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகின்றனர். ஆனால் அதை தாண்டி பல்வேறு சக்கலான சவால்கள் உள்ளன. அவை குறித்தும் ஆலோசிக்கப்பட வேண்டும். ஆயுதப் பலத்தால் அமைதிப் படை செயறபடவில்லை. அதில் பணியாற்றும் வீரர்கள்தான் அமைதிப் படைக்கு அடிப்படை ஆதாரம். அவர்களின் நலனுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். ஐ.நா. அமைதிப் படையில் உரிய சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என மோடி வலியுறுத்தினார்.

கூட்டத்தின் முடிவில் கூட்டறிக்கை வெளியிடப்பட்டது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, ஐ.நா. அமைதிப் படையை நவீனப்படுத்த வேண்டும். சில நாடுகளில் அமைதிப் படைவீரர்கள் பாலியல் துன்புறுத்தலில் ஈடுபடுவதாக புகார்கள் எழுந்துள்ளன. இந்த விவகாரத்தில் சகிப்புத்தன்மை கூடாது. ஐ.நா. உறுப்பு நாடுகள் அமைதிப் படையின் செயற்பாடுகளில் கூடுதல பொறுப்புகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். உலக நாடுகளில் அமைதியை நிலைநாட்ட தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று கூட்டறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (3-7)

## வங்கதேசத்தில் ஐ.எஸ். முதல் தாக்குதல்

வங்கதேசத்தில் இத்தாலியர் ஒருவரை ஐஎஸ் தீவிரவாதிகள் கொன்றுள்ளனர். இதன் மூலம் அந்நாட்டில் முதல் தாக்குதலை அந்த தீவிரவாத அமைப்பினர் நடத்தியுள்ளனர்.

சிசார் டவிலா (50) என்ற இத்தாலியர் நெதர்லாந்தை சேர்ந்த ஐசிசிஓ சர்வதேச அமைப்பின் மேலாளராக டாக்காவில் பணியாற்றி வந்தார். கிராமப்புற ஏழை மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த உதவுவது உள்ளிட்ட பணிகளை இந்த அமைப்பு மேற்கொண்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை சிசார் டவிலா நடைப் பயிற்சியில் இருந்தார். அப்போது அவரை சுற்றி வளைத்த தீவிரவாதிகள் சிலர் துப்பாக்கியால் சரமாரியாக சுட்டனர். இதில் 3 குண்டுகள் அவர் மீது பாய்ந்தன. அவரை சுட்டுவிட்டு தீவிரவாதிகள் தப்பியோடினர்.

வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு முன்பு சிசார் இறந்து விட்டார். இக்கொலைக்கு ஐ.எஸ. தீவிரவாத அமைப்பினர் பொறுப்பேற்றுள்ளனர். ஐஎஸ் தீவிரவாதிகள் வங்கதேசத்திற்கும் தாக்குதலை விஸ்தரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (3-7)

## ஆபிரிக்க சிறைக்கைதிகள் 500 பேர் தப்பியோட்டம்

மத்திய ஆபிரிக்க குடியரசு நாட்டின் தலைநகர் பான்குயி நகரில் உள்ள சிறையில் ஏற்பட்ட வன்முறையைப்பயன்படுத்தி 500 கைதிகள் கடந்த திங்கடகிழமை தப்பியோடியுள்ளனர்.

தலைநகர் பான்குயியில் பெரும்பான்மையாக உள்ள கிறிஸ்தவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையே அடிக்கடி மோதல் நிகழ்ந்து வருகிறது.

இதையடுத்து, ஐ.நா. அமைதிப் படையினர் அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

பான்குயிலில் நகரில் முஸ்லிம் ஒருவர் கொல்லப்பட்டார். இதனால் ஆத்திரமடைந்த முஸ்லிம் புரட்சிக் குழுவினர், கிறிஸ்தவர்களைத் தாக்கத் தொடங்கினர். கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக வன்முறை நீடிக்கிறது. இந்த வன்முறையில் இது வரை 42 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.


வன்முறையின் ஒரு பகுதியாக பான்குயி நகரில் உள்ள சிறையின் மீதும் திங்கட்கிழமை தாக்குதல் நடைபெற்றது. இதைப் பயன்படுத்தி அங்குள்ள கைதிகள் 500 பேர் தப்பியோடிவிட்டனர்.

மத்திய ஆபிரிக்க குடியரசு நாட்டில் 10 ஆண்டுகளாக ஜனாதிபதி பதவியில் இருந்த பிரான்கோயிஸ் பொலிஸ், கடந்த 2013 ஆம் ஆண்டு தொடக்கத்தில் பதவியை இழந்தார். அப்போதிருந்தே அங்கு உள்நாட்டுக் குழப்பம் நிலவுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச விசாரணை தொடர்பில் சரியான நிலைப்பாட்டினை த.தே.கூ.வெளிப்படுத்துமா?

## முன்னாள் எம்.பி. குகேந்திரன் கேள்வி



(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளரினால் இலங்கை தொடர்பில் வெளியிடப்பட்ட அறிக்கை அதன் பின்னர் அந்த அறிக்கை தொடர்பில் அமெரிக்க அரசினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை வரைவு என்பன தொடர்பில் சரியான நிலைப்பாடொன்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளிப்படுத்த வேண்டுமென அவர்களுக்கு வாக்களித்த மக்கள் எதிர்பார்க்கிறார்கள் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளருமான கா.வேலும்மயிலும் குகேந்திரன் (வி.கே.ஜெகன்) தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏற்கனவே இந்த தீர்மானங்கள் தொடர்பில் எமது செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள அறிவிப்பில் அனைத்து தமிழ் கட்சிகளும் இணைந்து இந்த விடயம் தொடர்பில் மக்கள் நலன்சார் முடிவொன்றை எடுக்க வேண்டுமென தெரிவித்திருந்தார்.

கடந்த காலங்களைப் போல் அல்லாது மனித உரிமைகள் ஆணையாளரினால் போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பில் வெளியிடப்பட்ட அறிக்கையினை இராஜதந்திர ரீதியில் எவ்வாறு அணுகுவது ,இதனூடாக விசாரணைகள் இன்றி சிறைகளில் இருக்கும் தமிழ் இளைஞர்களை எப்படி விடுவிப்பது, காணாமற் போனவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய அணுகுமுறைகள், இன்னும் விடுவிக்கப்படாத எமது மக்களின் காணிகளை எப்படி விடுவிப்பது, போரினால் பாதிக்கப்பட்டு இன்னமும் அவதியுடன் வாழும் மக்களுக்கு புனருத்தாரணங்களை எப்படி பெற்றுக் கொடுப்பது, அரசியல் தீர்வினை எப்படி பெற்றுக்கொள்வது என்பனவற்றை அனைத்து கட்சிகளும் இணைந்து தீர்மானிக்க வேண்டும் என்ற கருத்தினையே எமது தலைவரின் அறிக்கை வலியுறுத்தி இருந்தது.

இது தொடர்பில் எந்தவித சமிக்ஞைகளையும் வெளிப்படுத்தாதது மட்டுமல்ல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வட்டாரங்கள் சர்வதேச விசாரணைகள் தொடர்பில் முரண்பட்ட கருத்துக்களை வெளிப்படுத்தி வருவது வேதனை அளிக்கிறது. ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணைக்குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட பல பரிந்துரைகளை நீர்ப்படையச் செய்த, உள்ளக விசாரணையை கூடுதலாக வலியுறுத்திய அமெரிக்க பிரேரணை வரைவு வரவேற்கப்பட வேண்டியதெனவும், தமக்கு அது திருப்தி அளிப்பதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் ஒரு அறிக்கை வெளியிடப்பட்டு இருந்தது.

ஆனால் இந்த அறிக்கை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளினதும் ஒருமித்த முடிவின் அடிப்படையில் வெளியிடப்பட்டதா? என்கின்ற சந்தேகம் எழுப்பப்படுகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஆதரவாக வாக்களித்த மக்கள் மத்தியில் இது பெரும் குழப்ப நிலைமையையும் ஏற்படுத்தியுள்ளது.

ஜெனீவா தீர்மானம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறிதரன், சித்தார்த்தன் ஆகியோர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கை தொடர்பில் கேள்விகளை எழுப்பியுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## வாசகர் வட்டம் ஆலோசனை கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு புலோலி பொது நூலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வாசகர் வட்டம் ஆலோசனை சபை க்குழு கலந்துரையா டல் இன்று வியாழக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை புலோலி பிரதேச சபைச் செயலாளர் திருமதி தர்மராஜா தலைமையில் மேற்படி கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. (இ-5-60)

## பிரச்சினைக்கு தீர்வுகாணாவிடின் அனுமதிப் பத்திரம் நீடிக்கப்படாது

### அமைச்சர் தலதா தெரிவிப்பு



(கொழும்பு)

வெளிநாட்டுப் பணியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளாத, வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிறுவனங்களின் அனுமதிப் பத்திரம் நீடிக்கப்படாது என, வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் தலதா அத்து கோரள தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுப் பணியாளர்களின் உறவினர்களால் முன்வைக்கப்படுகின்ற முறைப்பாடுகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்காத சில வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனங்கள் பற்றி முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இவ்வாறான நிறுவனங்கள் தொடர்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அதிக அவதானம் செலுத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார். (இ-7)


## கேள்விக்கான கோருதல்
## சுவிஸ் லேபர் அசிஸ்ரன்ஸ் (SAH)- கிளிநொச்சி 021- 228 5626

1.வதிவிட பிரதிநிதி (Country Representative– SAH) பெறுகைக்குழு சார்பில் வத்திராயன், ஆழியவளை பகுதியில் அமைந்துள்ள தையல் கம்பனிகளுக்கு கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்காக தகுந்த தகைமையுடைய கேள்வியாளர்களிடமிருந்து குறியீடு செய்யப்பட்ட கேள்விகளை கோருகின்றனர்.

2.கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.

3.கேள்வியாளர்கள் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்டதும், கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.

4.தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் கேள்வி ஆவணத்தில் பகுதி IV (Section IV) இலும், மேலதிக தகவல்கள் பகுதி V (Section V) / கேள்வி தரவுகள் மற்றும் ஒப்பந்த தரவுகளிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

5.அக்கறை கொண்டுள்ள தகைமையுடைய கேள்வியாளர்கள் கீழ்வரும் விலாசத்தில் மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன் இம் முகவரியில் 9.00 மணியிலிருந்து 15.00 மணிவரை அலுவலக நாட்களில் கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம்.

இல : 232, சுவிஸ் லேபர் அசிஸ்ரன்ஸ் – SAH, திருநகர், கிளிநொச்சி / தொலைபேசி இல : 021- 228 5626/ 077-726 0672

6.அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை மேற்குறிப்பிட்ட முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 30.09.2015 முதல் 11.10.2015 வரை 9.00 மணியிலிருந்து 15.00 மணி வரையான காலப்பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.

7.கேள்விகள் 12.10.2015 ஆம் திகதியன்று 15.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் இல : 232, சுவிஸ் லேபர் அசிஸ்ரன்ஸ் SAH, திருநகர், கிளிநொச்சி எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். நேரடியாக கீழே உள்ள முகவரிக்கு வருகைதர விரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் கேள்வி கோரல் முடிவுற்ற உடனேயே கேள்விகள் திறக்கப்படும்.

8.கேள்வி தொடர்பான முதற் கூட்டம் இல : 232, சுவிஸ் லேபர் அசிஸ்ரன்ஸ் SAH, திருநகர், கிளிநொச்சி எனும் முகவரியில் 09.10.2015 அன்று 10.00 மணிக்கு நடைபெறும்

9.கேள்வி செல்லுபடியாகும் காலப்பகுதி விலைமனுவின் இறுதிநாளிலிருந்து மூன்று மாதங்களாகும்.

10.சகல கேள்விகளுக்கும் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

11.ஒவ்வொரு கேள்விகளுக்கும் தனித்தனியே பகுப்பாய்வு செய்யப்பட்டு ஏற்புத்தன்மையுடைய குறைந்த பகுப்பாய்வு செய்யப்பட்ட கேள்வியுடைய ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்படுவார்.

| கேள்வி அடையாள இல | வேலை விபரம் | இரண்டுக்குமான மொத்த மதிப்பீட்டு தொகை (மில்லியன் ரூபா) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்விப்பிணை விபரம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| SAH/KILI/236 | தையல் கம்பனிகளுக்கான இரு கட்டடங்கள் | 2 | 2 1/2 மாதங்கள் (75 நாட்கள்) | C 8 அல்லது அதற்கு மேல் | 20,000.00 | 12.01.2016 |

தொடர்புகளுக்கு : இல : 232, சுவிஸ் லேபர் அசிஸ்ரன்ஸ்- SAH, திருநகர், கிளிநொச்சி / 021- 228 5626 அல்லது 077-726 0672



Vocational Training Authority

giz Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) GmbH

# Vacancies for the Bakery Trainer

The **Vocational Training in the North and East of Sri Lanka** (VTN) project is a bilateral cooperation between the Democratic Socialist Republic of Sri Lanka and the Federal Republic of Germany. The project is implemented by Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) GmbH and the Kreditanstalt für Wiederaufbau (German development bank - KfW) on behalf of the German Federal Ministry for Economic Cooperation and Development (BMZ). The project is co – funded by the State Secretary for Migration (SEM) of the Government of Switzerland. The Sri Lankan governmental partner is the Ministry of Skills Development and Vocational Training.

GIZ - VTN project supports the Vocational Training Authority (VTA) in order to provide demand driven vocational training in the region and improve training capacities at the NVQ levels 3 in Bakery sector and enable candidates from the region to obtain the required entrance qualification for further training, existing vocational training providers in the Northern Province is promoted.

The applications invited from trainers to train in the bakery sector in the Vocational Training Authority (VTA) -training centres in Kilinochchi and Mullaitivu districts.

**Trainer in Bakery**

**Educational qualification:**

➢ Should have passed G.C.E (O/L) examination in six (06) subjects with mathematics and four (04) credit passes including Tamil / Sinhala in not more than two sittings.

**Vocational Qualification:**

➢ Should have obtained a government recognized vocational qualification of NVQ level 4 or above or a vocational training certificate of not less than 3 year duration from a recognized institution.

**Experience:**

➢ Minimum one year (01) local or overseas experience in the relevant field will be considered an added qualification.

**Age Limit:** Not less than 18 years and not more than 45 years.

**General Competency:**

➢ Maintain discipline and work ethics personal grooming

➢ Ability to deal with challenges

➢ Positive attitude

➢ Commitment to the gender equity, equality and social inclusion

Interested candidates should send their CV along with copies of relevant certificates by post to Dr. Siddhika Senarathne, Director – Planning and Research Vocational Training Authority (VTA) 354/2, "Nipunatha Piyasa", Elvitigala Mawatha, Colombo 05 or Email: siddhika@vtasl.gov.lk on or before **10th October 2015.**

(C-2345)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சிறுவர்கள்,பெண்கள் மீதான வன்முறையை எதிர்த்து போர்

(கொழும்பு)

**சிறுவர்கள்,பெண்கள் மீதான வன்முறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பாடசாலை மாணவர்கள் போராட்டம் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர். இப் பேராட்டம் நேற்று முற்பகல் 10 மணியளவில் யாழ்.பிரதான வீதியில் நடைபெற்றிருந்ததோடு இதனை சென்.சாள்ஸ் பாடசாலை மாணவர்கள் முன்னெடுத்திருந்தனர்.**

இப்போராட்டத்தின் போது சிறுவர்கள் பெண்களிற்கெதிரான வன்முறைகள் தொடர்பிலான விழிப்புணர்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.


சிறுவர் பெண்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்து, சிறுவர் உரிமையை பாதுகாப்போம், பிள்ளைகளை உயிர்போல் காப்போம், சிறுவா துஷ்பிரயோகத்தை உடன் நிறுத்து என எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

நேற்று நாடளாவிய ரீதியிலும் வடக்கு மாகாணத்திலும் தற்போது அண்மைக்காலங்களாக சிறுவர்கள், பெணகளுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்து காணப்படுகின்றது. தென்பகுதியில் இரு சிறுவர்களும் வடபகுதியில் ஒரு சிறுமியும் என மிகவும் குறுகிய காலத்தில் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இவற்றை விட இந்த வருட முற்பகுதியில் புங்குடுதீவில் ஒரு மாணவி கூட்டு வன்புணர்வின் பின்னர் மிகக்கொடூரமாக படுகொலை செய்யப்பட்டிருந்ததோடு, இப்படுகொலையின் விசாரணைகள் முடிவுற்று குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்படுவதற்கிடையில் அண்மையில் வேலணையின் குடும்ப பெண்ணொருவர் கடத்தப்பட்டு கொலைசெய்யப்படுவதற்கு முயற்சிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நாடளாவிய ரதியிலும் வடக்கிலும் சிறுவர் பெண்களுக்கு பாதுகாப்பற்ற சூழ்நிலையே உள்ளதென சுட்டிக்காட்டியுள்ள மாணவர்கள் மேற்படி போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். இப்போராட்டத்தில் இளைஞர் சேவைகள் மன்றமும் பாடசாலை மாணவர்களும் இணைந்து முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-4)




# அரசியல் காரணங்களுக்காக குற்றவாளிகளாக தமிழர்கள்

(03ஆம்பக்கத்தொடர்ச்சி...

மேலும் தற்போது ஜெனிவாவில் நடைபெற்றுவரும் ஐ.நா.மனிதவுரிமைகள் கூட்டத் தொடரின் பின்னர் அரசாங்கம் தனது நல்லிணக்கத்தை வெளிக்காட்ட அரசியல் கைதிகளை விடுதலை செய்யலாம் எனவும் முதலமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சிறைக்கைதிகள் நீண்ட காலமாக எவ்வித விசாரணைகளுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது பெற்றோரை விடுவிக்கக்கோரி அவர்களது பிள்ளைகள் யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக நேற்றையதினம் ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்திருந்தனர். ஆர்ப்பாட்டத்தின் முடிவில் வடக்கு மாகாண முதலமைச்சரிடம் ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டிருந்தது.

இதன்போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

எமது அரசியல் தொடர்பில் கடந்த இரண்டு வருட காலமாக அதாவது வடமாகாண சபையை நாம் பொறுப்பேற்ற காலத்திலிருந்தே பேசிக்கொண்டுதான் இருக்கின்றோம்.

ஆனால் அதற்கு ஏற்றாற்போல் எந்தவிதமான நல்ல தீர்மானங்களும் இதுவரை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

விரைவிலே வழக்குகளை முடிப்பதாகக் கூறினாலும் வழக்குகள் முடிவதற்கு காலம் சென்று கொண்டிருக்கின்றன.

அத்துடன் கைதிகள் சார்பிலே வழக்கை எடுத்து நடத்தக்கூடியவர்கள் மிகச் சொற்பமாக இருக்கின்றார்கள்.

இவ்வழக்குகளை எடுத்து நடத்த முன்வரும் சட்டத்தரணிகளுக்கு பணத்தைக் கொடுக்கும் நிலையில் அரசியல் கைதிகள் இல்லை.

நாங்கள் ஏதோவொரு வழியில் அரசியல் கைதிகளுக்காக ஒரு அமைப்பை அமைத்து அதற்கூடாக பணத்தை எடுத்து இந்தச் சட்டத்தரணிகளூடாக ஏதாவது செய்யமுடியுமா என்று பல விதங்களிலும் நடவடிக்கையெடுத்து வந்திருக்கின்றோம்.

ஒருவிடயத்தை நடைமுறைப்படுத்தக்கூடியதாகவிருந்தது. ஆனால் அவற்றை ஒழுங்கமைப்புக்குள் கொண்டு வருவதற்கு எங்களால் முடியவில்லை.

குழந்தைகளைப் பொறுத்தவரையில் தங்களுடைய தகப்பன், அண்ணன்மார் திரும்பி வருவார்களா? எப்பொழுது திரும்பி வருவார்கள்? என்ன குற்றம் செய்தார்கள் என்று பல கேள்விகளையும் அவர்கள் கேட்கின்றார்கள்.

அரசியல் கைதிகள் என்று சொல்லும்போது சில அரசியல் காரணங்களுக்காக அவர்களை கைது செய்தார்களேயொழிய வழக்கமான நாட்டின் சட்டதிட்டங்களுக்கும் அமைய அவர்கள் குற்றங்கள் புரிந்தவர்கள் அல்லர்.

அரசியல் காரணங்களுக்காக இவ்வாறான குற்றங்களுக்குள் மாட்டியிருக்கின்றார்கள் என்ற எண்ணம் பரவலாக எல்லோரிடமும் எழுகின்றது.

ஆகவேதான் அரசியல் கைதிகளை அரசியல் ரீதியாக அவர்களுக்கு மன்னிப்பை வழங்கி விடுதலை செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை நாங்கள் முன்வைக்கின்றோம்.

இப்படியிருந்தும்கூட பல விதத்திலும் இவர்களுடைய விடுதலை காலதாமதமாகிக் கொண்டிருக்கின்றது. ஆனால் ஒன்றைமட்டும் கூறலாம் இன்று இலங்கையில் அரசியல் கைதிகளின் நிலைமை அரசியலாக்கப்படுகின்றது.

அதனால்தான் அவர்களுடைய பிரச்சினைகளை உடனுக்குடனேயே தீர்க்கப்பட முடியாததாகவுள்ளது.

ஆனால் தற்போது ஜெனிவாவில் நடைபெறும் இலங்கை மீதான நடவடிக்கைகள் பூர்த்தியானதும் அரசாங்கம் தன்னுடைய நல்லெண்ணத்தை வெளிக்காட்டுவதற்காக விரைவிலே சில நடவடிக்கைகளை எடுக்கக்கூடும் என நம்புகின்றோம். இந்த நல்லெண்ணத்தின் பயனாக அரசியல் கைதிகளை விடுவிப்பார்கள் என நம்ப வேண்டியிருக்கின்றது.

ஆகவே சற்றுப்பொறுத்துப்பாருங்கள் . இன்னும் இரண்டு மாதங்கள் இருந்து அரசு எவ்வாறான நடவடிக்கைகளை எடுக்கின்றது என்பதனை பொறுத்து மற்றைய நடவடிக்கையை எடுங்கள் என முதலமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-4)




# எங்கட அப்பா வந்தால் தான் நல்ல சாப்பாடு சாப்பிட முடியும்

## ஜனாதிபதிக்கு தமிழ் அரசியல் கைதிகளின் பிள்ளைகள் கடிதம்

(யாழ்ப்பாணம்)

பள்ளிக்கூடத்திற்கு எங்கட நண்பர்கள் நல்ல சாப்பாடு கொண்டு வந்து சாப்பிடுகீனம் எங்களால்சாப்பிட முடியல.

எங்கட அப்பா வந்தால் தான் நாங்கள் நல்ல சாப்பாடு சாப்பிடமுடியும்.மகிழ்ச்சியாக இருக்க முடியும்.

எங்கட அப்பாவ விடுதலை செய்யுங்கள் என உருக்கமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு அரசியல் கைதிகளின் பிள்ளைகள் கடிதம் ஒன்றினைஅனுப்பிவைத்துள்ளனர்.

யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக நேற்று முற்பகல் 10 மணியளவில் வாழ்வின் ஒளியைத் தேடும் சிறுவர்களிற்கான ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற போராட்டத்தின் முடிவில் முதலமைச்சரூடாக ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட்ட கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மாமா, இண்டைக்கு சர்வதேச சிறுவர் தினம் எண்டு எல்லோரும் சொல்லினம். சர்வதேச சிறுவர் தினம் எண்டா என்ன? இண்டைக்கு மட்டும் நாங்கள் சந்தோஷமா இருக்கிறதா? நாங்கள் பிறந்ததிலிருந்து இண்டைக்கு மட்டும் அப்பாண்ட பா(வா)சமே எங்களுக்கு தெரியாது.எங்கட அம்மாசொல்லுறாபுலிக்குஉதவி செஞ்சதால அப்பாவை பிடிச்சு வைச்சிருக்கிறார்களாம் எண்டு.

மாமா நீங்க எப்ப எங்கட அப்பாவை விடுவீங்க? தேர்தலுக்கு முன் ரணில் மாமா சொன்னவர் தேர்தல் முடிய எங்கட அப்பாவை விடுவன் எண்டு ஆனால் அப்பா இன்னும்வரேல்ல.அம்மாட்ட கேட்டா அவா சொல்லுறா அடுத்த தேர்தலுக்குத்தான் அப்பா வருவாராம் எண்டு.அடுத்த தேர்தல் எப்ப வரும்?

மாமா நாங்கள் இப்ப பள்ளிக்கூடம் போறம்.எங்கட கொப்பிகள் எல்லாம் கிழிஞ்சு போச்சு. பென்சிலும் கையால பிடிக்க ஏலாமல் இருக்கு குட்டியாப் போச்சு.எங்கட பிறன்ஸ் எல்லாம் நல்ல நல்ல சாப்பாடு கொண்டு வந்து சாப்பிடீனம் பள்ளிக்கூடம்விட்ட பிறகு அவேண்ட அப்பாக்கள் தான் அவையள வந்து கூட்டிற்றுப் போகினம். நாங்கள் அம்மாட்ட கேட்டா அப்பா வரட்டும் என்று சொல்லிப் போட்டு அவ அழுகிறா. எங்கட அம்மாவைப் பார்க்கப் பாவமாக இருக்கு அவதான் எல்லா வேலையும் செய்யிறவ சில நேரத்தில் அவக்கு வருத்தம் வந்தாலும் அழுது கொண்டே எல்லாத்தையும் செய்யிறா.

மாமா! பக்கத்து வீட்டில நல்ல நல்ல விளையாட்டுச்சாமான் எல்லாம் வைச்சிருந்து அவேண்ட அப்பாவோட விளையாடினம்.எங்கட அப்பா வந்தா எங்களுக்கு எல்லாம் கிடைக்கும் தானே? எங்களுக்கும் அப்பாவோட சேர்ந்து விளையாடவும் பள்ளிக்கூடம் போகவும் ஆசையாக இருக்கு.

மாமா! எங்கட அப்பா பிழை செஞ்சிருந்தா மன்னிச்சு விடுங்களன். எங்கட பள்ளிக்கூடத்தில் நாங்கள் கனக்கத்தரம் பிழை விட்டும் ரீச்சர் எங்களை மன்னிச்சு விட்டவா அப்படி நீங்களும் எங்கட அப்பாவை மன்னிச்சு விடுங்களன். நாங்கள் அப்பாவை பார்த்துக் கொண்டு இருக்கிறம் மாமா? அப்பா வருவார் தானே! என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4-9)

# மாணவர்களைத்தேடி இருபாலையில் வலைவிரிப்பு

(நல்லூர்)

வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவின் இருபாலை தெற்கு கிராமசேவையாளர் பிரிவில் இருந்து பாடசாலை செல்லாத மாணவர்களைத் தேடிக்கண்டுபிடிக்கும் தேடுதல் நடவடிக்கை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இருபாலை தெற்கு கிராமசேவையாளர் எஸ். உதயகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது பாடசாலை செல்லாத மாணவர் ஒருவர் பிடிக்கப்பட்டதுடன் 5 மாணவர்கள் ஓடி தலைமறைவாகினர்.

இந்நடவடிக்கையில் கோப்பாய் பிரதேச செயலகத்தின் சிறுவர் பாதுகாப்பு பிரிவினர் வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர் உட்பட 20 இற்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்கள் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5-134)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண நிகழ்வில் விமான குண்டுவீச்சு

## ஏமனில் 131 பேர் கோரப் பலி





(சனா)

**உள்நாட்டுப் போர் உச்சக்கட்டத்தில் உள்ள ஏமன் நாட்டில் திருமண நிகழ்வின் போது நடத்தப்பட்ட தாக்குதலில் 131 பேர் பலியாகியிருப்பதாக ஐ.நா தெரிவித்துள்ளது.**

ஏமனின் மோசாவிற்கருகில் உள்ள ரெட் சீ துறைமுகத்திற்கு அருகேயுள்ள கிராமத்தில் இரண்டு வீடுகள் ஏவுகணைகள் மூலம் தாக்கப்பட்டன. ஹவுதி கிளர்ச்சிப் படையைச் சேர்ந்த ஒருவருக்கு அங்கு திருமண நிகழ்வுகள் நடந்து கொண்டிருந்தபோது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

சவுதி தலைமையிலான கூட்டுப்படையினரின் யுத்த விமானங்களே இந்தத் தாக்குதலில் ஈடுபட்டதாக ஏமன் நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இது தவறுதலாக நடத்தப்பட்ட தாக்குதல் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஆனால், இந்தத் தாக்குதலுக்கு நாங்கள் பொறுப்பல்ல என சவுதி தலைமையிலான கூட்டுப் படையினர் தெரிவித்துள்ளனர். உள்ளூர் கலகப் படையினர் இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கலாமென்றும் அவர்கள் கூறியுள்ளனர். (3-7)




## ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக பிரான்ஸ் நீதிமன்றில் வழக்கு

சிரியாவில் ஐ.எஸ்.தீவிரவாதிகளால் கொலை செய்யப்பட்ட இராணுவ வீரரின் பெற்றோர் பிரான்ஸ் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முடிவு செய்துள்ளனர்.

சிரியாவின் வடக்கு பகுதியான றக்கா நகரில் பணியாற்றி வந்த இராணுவ வீரரான கிசேம் என்பவரை கடந்த 2014-ம் ஆண்டு ஐ.எஸ். தீவிரவாதிகள் கடத்திச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் அமெரிக்கரான பீற்றர் காசிங் உள்ளிட்ட 17 சிரியா நாட்டவரை ஐ.எஸ்.தீவிரவாதிகள் தலை துண்டித்து கொலை செய்த வீடியோ பதிவு அதே ஆண்டின் இறுதியில் வெளியானது.

படுகொலை செய்யப்பட்ட 17 சிரிய நாட்டவரில் இராணுவ வீரரான கிசேம் என்பவரும் இருந்ததாக தெரிய வந்தது.

இதனிடையே கிசேமின் பெற்றோர்கள் தங்களது மகனின் சாவிற்கு நீதி வேண்டும் எனக் கூறி அங்குள்ள நீதிமன்றத்தை அணுகியுள்ளனர்.



படுகொலை செய்த ஜிகாதிகளில் ஒருவர் பிரான்ஸ் நாட்டவரான மக்சிம் கோச்சாட் என்பதால் இந்த வழக்கை பிரான்ஸ் நீதிமன்றம் விசாரிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்து அவர்களின் வேண்டுகோளை பரிசீலித்த நீதிமன்றம் மக்சிம் கோச்சாட்டிற்கு எதிராக வழக்கு பதிந்து விசாரணை மேற்கொள்ள முடிவு செய்துள்ளது.


பிரான்ஸ் நாட்டவருக்கு எதிராக வேறு ஒரு நாட்டவர் வழக்கு தாக்கல் செய்து நீதிமன்றத்தால் விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப்படுவது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது. (3-7)

## மிருகவதைக்கு எதிராக நூதனமான போராட்டம்

இறைச்சி உண்பதற்கு எதிராக நூதன முறையில் போராட்டத்தில் இறங்கிய நபர்கள் தங்களது உடல் முழுவதும் இரத்தத்தை பூசிக்கொண்டு வீதியில் படுத்து போராடியது அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

பிரான்ஸ் தலைநகரான பரீஸ் நகரில் தான் இந்த நூதன போராட்டம் நடைபெற்றுள்ளது.

சர்வதேச அளவில் இறைச்சி உண்பதற்கு எதிரான நாட்களாக ஒவ்வொரு வருடமும் ஜனவரி, மே மற்றும் செப்டெம்பர் மாதங்களின் இறுதி நாட்கள் அனுசரிக்கப்பட்டு வருகிறது.




இந்நிலையில், பிரான்ஸில் உள்ள 269 Life என்ற விலங்குகள் நல அமைப்பு மற்றும் இறைச்சிக்கு எதிரான சமூக ஆர்வலர்கள் சிலர் நூதன போராட்டத்தில் கடந்த 27ஆம் திகதி ஈடுபட்டிருந்தனர்.

பரீஸில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆண்கள் மற்றும் பெண்கள் தங்களுடைய உள்ளாடைகளுடன் உடல் முழுவதும் போலியான இரத்தத்தை பூசிக்கொண்டு இறந்ததை போல் தரையில் படுத்துக்கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆடுகளை கட்டி தொங்கவிட்டு பிறகு அவற்றின் தலையை துண்டித்து கொல்வது போல, சில ஆண்கள் தங்களது உடலில் இரத்தத்தை பூசிக்கொண்டு ஆடுகளை போல தொங்கியவாறு காட்சியளித்தது காண்பவர்களை மிரள வைத்தது.

இது குறித்து பேசிய சமூக ஆர்வலர்கள், விலங்குகளை கொல்வதால் அவைகள் அடையும் சித்ரவதையை அனைவரும் கண்கூடாக பார்க்க வேண்டும் என்பதற்காகவே இந்த நூதன போராட்டத்தில் ஈடுபட்டதாக கூறினர்.

மேலும், எந்த காலத்திற்கும் உடலிற்கும் மனதிற்கும் நல்ல ஆரோக்கியத்தை தருவது காய் கறி உணவுகள் தான் என்பதை மக்கள் உணர்ந்து இறைச்சி உண்பதை தவிர்க்க வேண்டும் என அவர்கள் பொது மக்களை வலியுறுத்தியுள்ளனர். (3-7)

## உலகில் அதிக கொலைகள் இடம்பெறும் நாடு தென்னாபிரிக்கா

தென்னாபிரிக்காவில் கடந்த ஆண்டில் கொலை, கொள்ளை, கார் திருட்டு உள்ளிட்ட குற்றச் செயல்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்திருப்பதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆண்டில் மட்டும் 18 ஆயிரம் பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர். இது முந்தைய ஆண்டை விட ஐந்து சதவீதம் அதிகம்.

உலகிலேயே தென்னாபிரிக்காவில்தான் கொலைவிகிதம் அதிகமாகும். இந்த விவகாரத்தில் பலத்தீன் அமெரிக்க நாடுகளைவிட தென்னாபிரிக்கா பின் தங்கியிருக்கிறது.

கார், டிரக் போன்றவை கடத்தப்படுவதும் கடந்த ஆண்டில் பெரும் அளவில் உயர்ந்திருக்கிறது.


குற்றங்களைக் கட்டுப்படுத்துவதை முக்கிய வாக்குறுதியாகக் கொண்டு ஆட்சிக்குவந்த ஆபிரிக்க தேசிய காங்கிரசிற்கு இந்தப் புள்ளிவிப ரங்கள் ஏமாற்றமளிக்கக்கூடும் என கூறப்படுகிறது. (3-7)

## லிபிய கடலில் தத்தளித்த 346 அகதிகள் மீட்பு

லிபியாவின் டிரிபோலி நகரின் கிழக்கு கடற்கரையிலிருந்து சுமார் 10 கடல் மைல் தொலைவில் 3 படகுகளில் பயணித்த 346 குடியேற்றவாசிகளை தாம் மீட்டுள்ளதாக லிபிய கரையோர காவல்படையினர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தெரிவித்துள்ளனர்.

மீட்கப்பட்ட இந்த குடியேற்றவாசிகளில் சுமார் 100 பெண்களும் சிறுவர்களும் உள்ளடங்குகின்றனர். மேற்படி குடியேற்றவாசிகள் மத்திய தரைக்கடலைக் கடந்து ஐரோப்பாவிற்கு பயணத்தை மேற்கொள்ள முயற்சித்த வேளையிலேயே மீட்கப்பட்டுள்ளனர்.

அளவுக்கதிகமான குடியேற்றவாசிகளை ஏற்றிச் சென்ற இரு படகுகளிலிருந்து 34 பெண்கள், 4 சிறுவர்கள் உட்பட 230 குடியேற்றவாசிகள் முதலில் மீட்கப்பட்டுள்ளனர்.



தொடர்ந்து மூன்றாவது படகொன்றிலிருந்து 54 பெண்கள் மற்றும் இரு சிறுவர்கள் உட்பட 116 குடியேற்றவாசிகள் மீட்கப்பட்டுள்ளனர். (3-7)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உள்நாட்டு விசாரணை மகிந்தவுக்கு ஆபத்து

## ஜீ.எல்.பீரிஸ் கூறுகிறார்

(கொழும்பு)

**போர்க்குற்றங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படவுள்ள உள்நாட்டு விசாரணை இராணுவத்தினருக்கும், முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்கும் ஆபத்தை ஏற்படுத்தும் என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.**



போர்க்குற்றங்கள் தொடர்பிலான உள்நாட்டு விசாரணை குறித்து திவயின பத்திரிகைக்கு வழங்கிய விசேட நேர்காணலில் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இராணுவத் தினர் போர்க்குற்றங்களை புரிந்துள்ளதாக அடித்துச் சொல்லப்பட்டுள்ளது.

அதனை விசாரிப்பதற்கு இலங்கை அரசாங்கத்தை ஊக்கப்படுத்துவதாக அறிக்கை தெரிவிக்கின்றது. அவ்வாறெனில் இந்த அறிக்கை மூலம் இராணுவத்தினருக்கு ஆபத்தில்லை என்று கூறப்படுவது பொய்யானது.

அத்துடன் இந்த விவகாரங்களை விசாரிக்க அமைக்கப்படும் பொறிமுறையில் பொதுநலவாய நாடுகளின் நீதிபதிகள் உள்ளடக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.


அத்துடன் பாதிக்கப்பட்ட மக்கள் தரப்பும் உள்வாங்கப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

அவ்வாறான நிலையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீதான காழ்ப்புணர்வில் யாரேனும் பொய்ச்சாட்சியம் அளித்தாலும் அதனையும் ஏற்றுக்கொள்வார்கள்.

இவ்வாறான விடயங்கள் காரணமாக இந்த அறிக்கை மற்றும் அதனுடன் இணைந்த விசாரணை என்பன இராணுவத்தினருக்கும் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்கும் ஆபத்தானது என்றும் ஜீ.எல். பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# வெளிநாட்டு பிரதிநிதிகளின் பங்களிப்பு பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தும்

## சம்பந்தன் விளக்கம்



ஐக்கிய நாடுகள் ஜெனீவா பேரவையில் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் முன்வைத்துள்ள இலங்கை தொடர்பான யோசனையில் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிண[illegible]பன உள்ளடங்கியுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் பொதுநலவாய நாடுகள், வெளிநாட்டு நீதிபதிகள், வழக்கு தொடுநர்கள் போன்ற விடயங்கள், பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தும் என்று கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

முன்னைய ஆட்சியின் போது உள்நாட்டு விசாரணைகளில் முன்னேற்றங்கள் ஏற்படவில்லை.

இதன் காரணமாக பொதுமக்களை பொறுத்தவரை உள்நாட்டு விசாரணைகளில் நம்பிக்கையை அவர்கள் வெளிப்படுத்தவில்லை. இதனைக் குறை கூறமுடியாது என்றும் சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இன்று முன்வைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ள யோசனையின் மதிப்பீடுகள், 32ஆவது, 34ஆவது ஜெனிவா அமர்வுகளின் போது எடுத்துக் கொள்ளப்படவுள்ளன என்றும் சம்பந்தன் தெரிவித்தார். (இ-7)

# உலககுடியிருப்பு தினத்தையொட்டி ஐந்து இலட்சம் வீடமைப்பு திட்டம்!

## சஜித் பிரேமதாஸ அறிவிப்பு



எதிர்வரும் ஒக்டோபர் 5ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு நகர்ப்புறங்களில் வசிக்கும் மக்களுக்காக ஐந்து இலட்சம் வீடமைப்புத் திட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ மேற்கொண்டுள்ளார்.

இதன் முதற்கட்டமாக வீடொன்றுக்கு தலா ஒரு இலட்சம் வீதம் ஐம்பதாயிரம் வீடுகள் நிர்மாணிப்பதற்கான நிதியுதவி வழங்கும் செயற்றிட்டம் தற்போது முன்னெடுக்கப்படுகின்றது.

அத்துடன் எதிர்வரும் நாட்களில் பிரதேச செயலகங்கள் தோறும் வீடமைப்பு தொடர்பான குறைபாடுகளை களையும் நோக்கில் நடமாடும் சேவைகளை நடத்தவும் வீடமைப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கு மேலதிகமாக நகர்ப்புறங்களில் வசிக்கும் குறைந்த வருமானமுடைய மக்களின் நலன் கருதி ஐந்து இலட்சம் வீடமைப்புத் திட்டமொன்றை முன்னெடுக்கவும் அமைச்சர் சஜித் பிரேமதாஸ தீர்மானித்துள்ளார். (இ-7)

# கடலரிப்பினால் பலகோடி அரச சொத்துக்கள் அழிவு

காத்தான்குடி பிரதேசத்தில் பாரியளவில் அதிகரித்துள்ள கடலரிப்பினால் கடற்கரையோரங்களில் பல கோடி ரூபாய் பெறுமதியான அரச சொத்துக்கள் இடிந்து விழுந்து வருகின்றன.

காத்தான்குடி ஏத்துக்கால் கடற்கரையோரம் கடலரிப்பு பாரியளவில் உள்ளதால் கடற்கரையோரம் கடற்றொழில் அமைச்சினால் 2 கோடி ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் முற்றாக அழிவடையும் நிலையை எதிர்கொண்டுள்ளது. இதன் ஒரு பகுதி கடலரிப்பினால் இடிந்து விழுந்துள்ளன.

கடலிலிருந்து 40 அடிகள் அலைகள் வெளியே வந்து கட்டடங்களை அழித்து வருகின்றன.

இதனால் பல்லாயிரம் மக்களின் ஜீவனோபாயமும் இக்கடலரிப்பினால் பாதிக்கப்பட்டுள்ளன.

எனவே குறித்த கடலரிப்பை தடுக்க கடற்றொழில் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென பிரதேச வாசிகள் கருத்து தெரிவித்துள்ளனர். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## எழுந்து நில், போராடு!

நம்முடைய ஒவ்வொரு செயலுக்கும் விளைவு உண்டு என்பதைப் பெரியவர்கள் சொல்லிக் கேட்டிருக்கிறோம். விளைவுகள் முற்றிப் பயனாக–அதாவது நற்செயல்கள் புண்ணியமாகவும் தீய செயல்கள் பாவமாகவும்– நமக்கு வந்து சேரும். செயலின் தன்மையைப் பொறுத்து முற்றிப் பயன் அளிக்கும் காலம் மட்டும் வேறுபடும். கற்பனைகூட செய்ய முடியாத காலம் தொடங்கி விதவிதமான பிறவிகள் எடுத்து நாம் மமதையுடன் செயல் புரிந்து வந்திருக்கின்றோம். அச்செயல்களின் விளைவாகக் கோடானு கோடி தடங்கள் நம் உள்ளத்தில் பதிந்துள்ளன. ஒன்று... இவற்றை வாழ்ந்து தீர்க்க வேண்டும்: அல்லது துடைத்து அழித்து எறிய வேண்டும். ஞானம் தீயாகக் கொழுந்து விட்டு எரிவதால் அதில் கர்மங்கள் சாம்பலாகி விடுகின்றன. செயலின் எதிர் விளைவாகிய பாவ புண்ணியங்கள் என்ற பந்தத்தில் இருந்து விடுதலை கிடைக்கின்றது. யாக சாலையில் எரியும் நெருப்பில் பொருட்களைப் பெய்து செய்யப்படும் திரவிய யக்ஞத்தை விட வாழ்வையே ஒரு யாகமாக நிகழ்த்தும் ஞானி யின் ஞான யக்ஞம் மேலானது என்பது கீதையின் தீர்மானம்.

வினைக் குப்பைகளை ஞானாக்னியில் எரிக்கும் வேலையே ஞானியின் வேலை. ஆனால் ஒன்று. வினைக் குப்பை சேரும் என்பதற்காகச் செயல் புரியாமல் இருந்து விட முடியுமா? சமையல் செய்தால் பாத்திரங்கள் கறை படியும் என்று எந்த தாயாவது சமையலை தவிர்க்க முடியுமா?

நல்ல உடை உடுத்திக் கொண்டு வெளியில் போய் வந்தால் உடை அழுக்காகி விடும் என்றாலும் உடையை உடுத்திக் கொண்டு அழுக்கும் ஆகாமல் நாம் பார்த்து கொள்ள முயற்சி செய்வதில்லையா? அதுபோலத்தான் வாழ்ந்தும் தீரவேண்டும். ஆன்மாவில் அழுக்குப்படியாத படி பார்த்துக்கொள்ளவும் வேண்டும்.

நம்மில் பலருக்குத் தான் என்னும் அகங்காரம் நிறையவே உண்டு. ஆனால் தான் என்னும் அறிவு எத்தனை பேருக்கு உண்டு? உண்மையாகத் தான் என்பது எது? பலர் தங்கள் பதவிகளையே தான் என எண்ணி விடுகிறார்கள். தொலைபேசியை எடுத்து நான் கமிஷனர் பேசுகிறேன். கிளார்க் எங்கே போய்விட்டார் என்று பதவிகளாகவே தங்களை இனம் காணுகிறார்கள். இன்னும் உடம்பையே தான் என்றுஎண்ணுவர். நான் யாருன்னு இப்ப புரிஞ்சுக்க என்று வசனம் பேசியபடி எதிரில் இருப்பவரை ஓர் அறையில் வீழ்த்துவர் உடம்பின் பலமே அவரது பலம். அதாவது உடம்புதான் அவருடைய தான்.

ஆனால் இவையெல்லாம் உண்மையான தான் அன்று. தேங்காயின் மீது கடினமான ஓடும் நார்க்குப்பையும் உண்டு. அவற்றைத் தோலுரித்த பிறகே உண்மையான தேங்காய் அகப்படும். அதுபோல எவை எவற்றைத்தான் என்று எண்ணுகிறோமோ அவை அவற்றைத் தோலுரித்துப்பார்க்க வேண்டும்.

என்னுடைய நான் எது என்பதை நான்தான் தேடியாக வேண்டும். காரணம் இந்தச் சிக்கலை உண்டாக்கிக் கொண்டதும் நான். எனவே நான்தான் விடுவிக்கமுடியும். என்னுடைய உண்மையான நான் எனக்குள்ளேயே தொலைந்து போய் விட்டது. எங்கு தொலைந்ததோ அங்குதானே தேடவேண்டும்.

நான் என்ற அகந்தையில் நான் என்ற ஆன்மாவை நானே தொலைத்த காரணத்தால் நான் மட்டுமே தேடிக்கண்டுபிடித்தாக வேண்டும்.

பகவான் ரமணரிடம் பக்தர் ஒருவர் கேட்டார். நான் யார் என்ற கேள்வியை எழுப்பி விடை காணுவதே ஞானம் என்கிறார்களே... உண்மையா? ஆம் என்றார் ரமணர். அப்படியானால் நான் யார் என்பதை அறிந்து கொள்ள விழைகிறேன். எனக்குச் சொல்லுங்களேன் என்றார் பக்தர். நீ யார் என்று என்னைக் கேட்காதே. உன்னைக்கேள். நீ... யார் என்பது என்னைவிட உனக்கல்லவா நன்கு தெரியும். உன்னைக்கேட்க வேண்டிய கேள்வியை என்னைக் கேட்கிறாயோ? என்றார் ரமணர்.

பதவியோ சரீரமோ மனமோ– நான் அல்ல. அவை அழியக் கூடியவை. அழிவற்ற ஆன்மாவே நான். பல ஜன்மமாக விளைந்த பதிவுகளில் எண்ணக் குழப்பங்களில் அது புதையுண்டு கிடக்கிறது. ஆன்மாவைச் சூழ்ந்து புதைத்துள்ள வினைக் குப்பைகளை ஞானக்கனலில் எரித்து முடிப்பதே யோகியின் பணி.

அகங்காரமாக நான் நான் என்று முந்திக்கொள்பவர்களை ஏன் இப்படி முந்திரிக்கொட்டை மாதிரி முன்னால் நிற்கிறாய்? என்று பேசுவோம். எல்லா விதைகளும் பழத்துள் இருக்கும். முந்திரிக்கொட்டை பழத்துக்கு வெளியே நீட்டிக்கொண்டிருக்கும். அது மட்டுமல்ல முந்திரிக்கொட்டையைச் சுற்றிச் சூழ்ந்துள்ள கனத்த தோலைச்சுட்டு சாம்பல் ஆக்கிய பிறகு அமுதமயமான முந்திரி கிடைப்பது போல ஆன்மாவைச் சூழ்ந்துள்ள வினைக் குப்பைகளைச் சுட்டுச் சாம்பலாக்கினால் கறை குறையற்ற ஒளிவீசும் ஆன்மாவை உணரமுடியும். இதையே சுடர் விட்டெரியும் தீயானது விறகுகளைச் சுட்டுச் சாம்பலாக்குவது போல் அர்ஜுனா ஞானக்கனல், கர்மங்களை எல்லாம் சாம்பலாக்குகிறது என்கிறது கீதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சினிமா வரலாறு

16

## பாகவதர் சாதனை! தொடர்ச்சியாக 9 வெற்றிப்படங்கள்!



...இரண்டு படங்களுமே ஒரு வருடத்துக்கு மேல் ஓடின.

சிந்தாமணி,மதுரை ராயல் டாக்கீஸ் தயாரிப்பு.

படத்தில், பாகவதருக்கு ஜோடி அஸ்வத்தம்மா.

கன்னடத்தில் பிரபல பாடகியான இவர், தமிழில் பிரமாதமாகப் பாடி நடித்தார். படத்தில் ஒய்.வி.ராவ் (நடிகை லட்சுமியின் தந்தை) டைரக்ட் செய்தார்.

சிந்தாமணி மூலம் கிடைத்த லாபத்தைக்கொண்டு மதுரையில் சிந்தாமணி என்ற பெயரில் ஒரு தியேட்டரையே கட்டினார்கள் ராயல் டாக்கீசார்! அந்த அளவுக்கு வசூல் மழை!

இந்தப்படத்தில், மாயப் பிரபஞ்சத்தில் ஆனந்தம் வேறில்லை, ராதே உனக்குக் கோபம் ஆகாதடி, ஞானக் கண் ஒன்று இருந்திடும் போதினிலே முதலான பாடல்கள் பிரமாதமாக அமைந்தன.

சிந்தாமணி படத்தின் மாபெரும் வெற்றியைக் கண்ட இசைத் தட்டு தயாரிப்பாளர்கள், உடனடியாக அந்த இசைத்தட்டுக்களை வெளியிட்டு பணம் பார்த்துவிட எண்ணினார்கள்.

ஆனால் இசைத் தட்டு வெளிவந்தால் சினிமாபட வசூல் பாதிக்கப்படுமோ என்று எண்ணிய பாகவதர் இசைத் தட்டுக்காக பாட மறுத்து விட்டார்.

(இப்போதெல்லாம், திரைப் படத்துக்காக பதிவு செய்யப்பட்ட பாடலை அப்படியே கேட்டாகவோ சிடியாகவோ மாற்றி வெளியிட முடிகிறது. அக்காலத்து இசைத்தட்டு, 3 நிமிட நேரம் பாடக் கூடியது.



எனவே அதற்கு ஏற்றபடி மீண்டும் பாடகர் களை பாட வைத்து இசைத் தட்டுக்கென்று புதிதாகப் பதிவு செய்வார்கள். வாத்தியங்களின் இசை சேர்ப்பால் படங்களில் உள்ளதைவிட இசைத் தட்டுப் பாடல்கள் சிறப்பாக கூடுதல் மெருகுடன் அமைவது உண்டு)

போலி இசைத்தட்டு

இசைத்தட்டு தயாரிப்பாளர்கள் அஸ்வத்தம்மா தனியாகப் பாடிய கிருஷ்ணா கிருஷ்ணா, ஈனஜென்மம் எடுத்தேன் முதலான பாடல்களை இசைத் தட்டுக்களாக வெளியிட்டார்கள். பாகவதருடன் அஸ்வத்தம்மா சேர்ந்து பாடிய மாயப்பிரபஞ்சத்தில் ஆனந்தம் வேறில்லை என்ற டூயட் பாட்டு மிகப்பிரபலம்.

அதையும் இசைத் தட்டில் வெளியிட விரும்பிய இசைத் தட்டு கம்பெனியார் ஒரு தந்திரம் செய்தனர்.

கிட்டத்தட்ட பாகவதர் போன்ற குரலைக் கொண்ட துறையூர் ராஜகோபால் சர்மா என்ற சங்கீத வித்வானைப் பாட வைத்து அந்தப் பாடலை வெளியிட்டார்கள். சிந்தாமணி படப்பாடல் என்று மட்டுமே இசைத்தட்டில் குறிப்பிடப்பட்டது. பாடியது யார் என்று குறிப்பிடப்படவில்லை.

இசைத் தட்டைக் கேட்ட பலருக்கு, இது பாகவதர் குரல் அல்ல; டூப்ளிகேட் என்பது புரிந்துவிட்டது. இசைத் தட்டுகம்பெனிக்கு கண்டன கடிதங்கள் பறந்தன.

இதன் காரணமாக இசைத் தட்டுக் காரர்கள் பாகவதரிடம் சென்று சமரசம் பேசினார்கள். இசைத் தட்டுக்கள் வெளிவந்த பிறகும் சிந்தாமணி வசூல் குறையவில்லை.

நீங்கள் பாடிய பாடல்களை இசைத் தட்டுக்களாக வெளியிட சம்மதியுங்கள் என்று கேட்டுக்கொண்டார்கள்.


இசைத் தட்டினால் படத்தின் வசூல் பாதிக்கப்படவில்லை என்பதை பாகவதரும் உணர்ந்திருந்தார். எனவே அவர் பாடிய பாடல்களை வெளியிட சம்மதித்தார். பாகவதரின் பாடல்கள் இசைத் தட்டுக்களாக வெளி வந்து விற்பனையில் வரலாறு படைத்தன.

(தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 286

## அஹங்காரத்தை விடுதல்



....ஆனால் நாம் அதைப் புரிந்து கொள்ளாமல் அவர்களையும் தந்திரமாக இருக்கவும் வார்த்தைகளில் மோசடி செய்யவும் கற்றுக்கொடுத்து விடுகிறோம். இதைத்தான் நாம் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறோம்.

ஒரு குழந்தை அவளது தாத்தாவிடம் சென்று கேட்டது, தாத்தா உங்களால் உண்மையிலேயே ஒரு தவளையைப் போலச் செய்ய முடியுமா? ஆச்சரிமடைந்த தாத்தா கேட்டார்.

ஏனம்மா கேட்கிறாய்? என் அப்பாவும் அம்மாவும் பேசிக் கொண்டார்கள்; நீங்கள் தவளை போலக் கத்தினால் எங்களுக்குக் கொஞ்சம் அதிர்ஷ்டம் அடிக்குமாம்!

(சிரிப்பு)

நாம் எப்பொழுதும் உள்ளொன்று வைத்துப்புறமொன்று பேசுகிறோம்.

ஒருபோதும் நமது கருத்துக்களைச் சுதந்திரமாக வெளியிடுவதில்லை.

எதையோ நினைத்து வேறு எதையோ பேசுகிறோம். அதனால் மிகவும் அசிங்கமாகிவிட்டோம்.

வெறுமனே நமது கள்ளம் கபடமற்ற தன்மையை இழந்துவிட்டோம்.

குழந்தைகள் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவதில்லை.

அவர்கள் மிகவும் இயல்பாக இருக்கிறார்கள்.

அவர்கள் சுதந்திரமாக தங்களை வெளிப்படுத்திக்கொள்வதால் அழகாக இருக்கிறார்கள்.

ஒரு தாயார் தனது குழந்தையை அவளது சிநேகிதியிடம் ஒருநாள் விட்டுட்டுச் சென்றாள்.

அவள் தனது குழந்தையிடம் மாலையில் திரும்பி வருவதற்கு முன் ஞாபகமாக சிநேகிதிக்கு நன்றி தெரிவித்துவிட்டு வருமாறு சொல்லியிருந்தாள்.

குழந்தை மாலையில் வீட்டிற்குத் திரும்பி வந்தது.

தாயார் குழந்தையிடம் தனது சிநேகிதிக்கு நன்றி தெரிவித்தாயா என்று கேட்டாள்.

குழந்தை சொன்னது, இல்லை; ஏனென்றால் இன்னொரு குழந்தை நன்றி தெரிவித்த பொழுது பரவாயில்லை, சொல்ல வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். இதுதான் குழந்தைகள் என்பது! அடிப்படையான விடயங்களான நன்றியுணர்வு முதலியவற்றை, நாம் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டியது தான்.

ஆனால் நான் உங்களுக்குப் புரிய வைக்க முயற்சிப்பது என்னவென்றால் நாம் அவர்களை கபட வேடதாரிகளாக்கி விடக்கூடாது.

அவர்களே இந்த விளையாட்டைப்புரிந்த கொண்டு அஹங்காரமின்றி விழிப்புணர்வுடன் விழிப்புணர்வுடன் மட்டுமே விளையாடட்டும். அவர்களே பகுத்து அறிந்துகொள்ள அடிப்படை விதிமுறைகளையும் அறிவுக் கூர்மையையும் மட்டுமே கொடுங்கள்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உள்ளக விசாரணை நம்பகரமாக நடைபெறும் சாத்தியமே இல்லை

(கொழும்பு)

மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிப்பதற்கான உள்ளக பொறிமுறை நம்பகரமாக அமையும் சாத்தியம் இல்லை. சாட்சிகள் பாதுகாப்பு பிரச்சினை மற்றும் வெளிநாடுகளில் உள்ளவர்களுக்கு சாட்சியமளிக்க முடியாத நிலைமை உள்ளிட்ட பல்வேறு சிக்கல்கள் உள்ளன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவரும் முன்னாள் எம்.பியுமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் வடக்கு, கிழக்கிலிருந்து இராணுவத்தை முழுமையாக அகற்றிவிட்டு சாட்சிகளை பாதுகாக்கும் வகையில் உள்ளக விசாரணையை நடத்த தயாரா? என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

ஜெனிவா மனித உரிமைப் பேரவையின் 30 ஆவது கூட்டத் தொடர் நடைபெற்றுவருகின்ற நிலையில் ஜெனிவா சென்றுள்ள கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மனித உரிமை பேரவை வளாகத்தில் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்து வெளியிடுகையில்,

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் அமெரிக்கா முன்வைத்துள்ள பிரேரணை தமிழ் மக்கள் மத்தியில் பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமை அலுவலகம் இலங்கை தொடர்பில் வெளியிட்ட அறிக்கையில் உள்ளகப் பொறிமுறை ஏற்புடையதாக அமையாது என்றும் கலப்பு நீதிமன்றம் அவசியம் என்றும் உள்ளக நீதித்துறை நம்பகரமாக இல்லையென்றும் தெரிவித்திருந்தது.

ஆனால் அமெரிக்கப் பிரேரணையானது இலங்கையின் உள்ளக நீதித்துறையின் கட்டமைப்பிற்கு அமைய உள்ளக விசாரணையை நடத்த முடியும் என்றும் தேவையெனில் சர்வதேச மற்றும் பொதுநலவாய உதவிகளை பெற முடியும் என்றும் தெரிவித்துள்ளது.

இவ்வாறு உள்ளகப் பொறிமுறை முன்னெடுக்கப்படுமானால் அதனூடாக பல சிக்கல்கள் ஏற்படும். குறிப்பாக உள்ளகப் பொறிமுறையில் சாட்சியமளிக்கும் மக்களுக்கு எவ்வாறு பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் என்ற கேள்வி எழுகின்றது. ஏற்கனவே காணாமற்போனோர் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவிற்கு சாட்சியமளித்த வடக்கு, கிழக்கு மக்களின் சாட்சியங்கள் இராணுவத்தினாலும், பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினராலும் அழிக்கப்பட்டிருந்தன.

அவ்வாறான ஆபத்து தொடர்ந்தும் காணப்படுகின்றது. உள்ளகப் பொறிமுறையை முன்னெடுக்கும் பட்சத்தில் இந்த பிரச்சினை மீண்டும் உருவாகும். அதாவது வடக்கு, கிழக்கிலிருந்து இராணுவத்தை முற்றாக வெளியேற்றிவிட்டும் சாட்சிகளுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்திவிட்டும் உள்ளக விசாரணை நடத்த அரசாங்கம் தயாரா என்ற கேள்வியை எழுப்பவேண்டி உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கையர்களுக்கு ஜப்பானில் வேலைவாய்ப்பு

இலங்கையர்களுக்கு ஜப்பானில் வேலைவாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பான கலந்துரையாடல்கள் பிரதமர் ரணிலின் ஜப்பான் பயணத்தின்போது முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன்மூலம் கொரியாவில் இலங்கையர் பெற்றுக் கொள்ளும் வேலை வாய்ப்புகள் போன்று ஜப்பானிலும் இலங்கையருக்கான வேலை வாய்ப்புகளை தேடிக்கொள்ள முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. கணனி, தொலைத்தொடர்பு, கையடகத் தொலைபேசி போன்ற துறைகளில் இந்த தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொளவதற்கு எதிர் பார்க்கப்படும் அதேநேரம், குறித்த துறைகளில் இலங்கையர் பயிற்சிகளைப் பெற் றுக்கொள்வதற்கு ஜப்பானில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்வது தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது.

இந்த நடவடிக்கைகளை தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் கட்டமைப்பு அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவின் அமைச்சின் ஊடாக முன்னெடுக்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதுகுறித்து தொடர்புடைய முக்கியஸ்தர்களுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது ஜப்பானிய விஜயத்தின போது கலந்துரையாடலகளை மேற்கொள்ளவுள்ளார். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 70 | 60 | 60 | 70 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 150 | 160 | 160 | 160 | 140 |
| தக்காளி | 120 | 120 | 100 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 50 | 50 |
| கோவா | 70 | 70 | 60 | 70 | 70 |
| கரட் | 80 | 80 | 100 | 80-120 | 70 |
| பூசணி | 30 | 30 | 40 | 40 | 30 |
| புடோல் | 60 | 40 | 60 | 40 | 40 |
| வாழைக்காய் | 80 | 60 | 60 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 100-110 | 100 | 50-100 | 90 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 140 | 120 | 80 | 160 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 80 | 60 | 70 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 100 | 80 | 80 |
| பயற்றங்காய் | 70 | 60 | 80 | 60 | 60 |
| லீக்ஸ் | 60 | 80 | 80 | 100 | 80 |
| பீற்றூட் | 40 | 30 | 50 | 20 | 50 |
| கறிமிளகாய் | 140 | 90 | 120 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 100 | 60 | 100 | 120 | 120 |
| போஞ்சி | 150 | 170 | 160 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 60 | 30 | 50 | — | 60 |
| கீரை - 1 பிடி | 30 | 20 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 200 | 160 | 240 | 160 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30 | 40-45 | 50 | 50 |
| இராசவள்ளி | 160 | 200 | — | — | — |
| வெங்காயப்பூ | 200 | — | 200 | 140 | 140 |
| முள்ளங்கி | 40 | 40 | 60 | 40 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 30 | 30 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 10 | 20 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 505


அலெக்ஸ் கோட்வின்




அபிநாத்




அன் தேவகுமார்




அரவிந் ராஜேஸ்




கௌசிகன் கௌசி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மகிந்தவைக் காட்டிக்கொடுக்க விரும்பாத மைத்திரி!

இலங்கையில் நல்லாட்சி அரசாங்கம் என்னும் மைத்திரி, ரணில், அரசாங்கம் தோற்றம் பெறுவதற்கு உதவி செய்தவர்களில் பலருக்கு இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உதவி செய்திருக்கின்றார்.



அதாவது அவர் நன்றிமறப்பது நன்றன்று என்பதை உணர்ந்து செயற்பட்டிருக்கின்றார்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து சாதனை படைத்த இன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால்கூட அசைக்க முடியாத ஒரு நபரை, ஏன் அமெரிக்கா, இந்தியாவினால்கூட வீழ்த்துவதற்கு முடியாத ஒருவரை வீழ்த்தி இலங்கையின் அரியாசனைத்தை அலங்கரிக்கும் பேற்றைப் பெற்றவர் மைத்திரி. அப்பேற்பட்ட பேற்றைப் பெறுவதற்கு உதவியவர்களை எப்படி மறக்க முடியும்.

அதனால்தான் ஆட்சிபீடம் ஏறும் போதே மகிந்தவிற்கு உதவிய முன்னாள் பிரதம நீதியரசரை பதவியில் இருந்து நீக்கினார். முதற்படியாக தன்னை பொது வேட்பாளராக நிறுத்துவதற்கும், தனது பதவியை கைவிட்டு தனக்காக உதவிய முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கை பிரதமராக்கினார்.

தொடர்ந்து நூறு நாள் வேலைத்திட்டத்தின் கீழ், தனக்கே உரித்தான பாணியில் அமைச்சர்களை தேர்வு செய்தார்.

இடையில், ரவி கருணாநாயக்க மதும், பிரதமர் ரணில் விக்ரமசிங்கமீதும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்போகின்றார்கள் என்பதை உணர்ந்து மீண்டும் தனது நம்பிக்கை விசுவாசத்தை காண்பிக்க, உடனடியாக நாடாளுமன்றத்தைக் கலைத்து, தேர்தலை அறிவித்தார்.

ரணிலினதும், ரவியினதும் தலை தப்பியது. இதற்கு முன்னர் முன்னாள் பாதுகாப்புப் படைத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகாவிற்கு, பீல்ட் மார்சல் என்னும் பட்டத்தினையும், அவரிடமிருந்து மகிந்தவினால் புடுங்கப்பட்ட பதவிகளும், மீள் கையளிப்புச் செய்யப்பட்டது.

தனது வாழ்நாள் முழுவதும் ஒரு அமைச்சருக்கு இணையான அந்தஸ்த்தோடு சரத்பொன்சேகாவினால் நடந்து கொள்ள முடியும்.

இவர் ஒருபுறமிருக்க, நல்லாட்சி அரசாங்கம் அமைய இன்னொரு வழியில் உதவியவர்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

அவரையும் மைத்திரிபால சிறிசேன மறக்கவில்லை. தேர்தல் முடிந்த கையோடு சில நாட்களுக்குப் பின்னர் அவருக்கு எதிர்க்கட்சி அந்தஸ்த்தை கொடுத்தார்.

இன்னொரு புறத்தில் நல்லாட்சியின் கதாநாயகி என்று அறிமுகப் படுத்தினால் மிகப்பொருந்தும். அவர்தான் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, அவரை கேட்காமல் மைத்திரி காய் நகர்த்தவே மாட்டார். இதனால் அவருக்கும் நன்றிக்கடனாக என்றைக்குமே மைத்திரி இருக்க, இந்த தரப்பையும், ஒன்றிணைத்து மகிந்தவையும், சீனாவினையும், ஓரம்கட்ட திட்டம் வகுத்துக்கொடுத்த, அமெரிக்காவினையும், இந்தியாவினையும் இவர்கள் மறக்கவில்லை. மகிந்தவின் வீழ்ச்சிக்குப் பின்னர், சீனாவின் ஆதிக்கத்தை மெல்ல அகற்றி, அமெரிக்காவினையும், இந்தியாவினையும் அரவணைத்துக் கொண்டார்கள் இவர்கள்.

இவ்விதம் தன்னைச் சூழ்ந்துள்ள நல்லாட்சி நாயகர்களுக்கு உதவிக் கரம் நீட்டி, அவர்களை ஏற்றி வைத்த மைத்திரிபால, தன்னுயிரையும், தனக்காக பாடுபட்டவர்களின் சுதந்திரத்தினையும், பாதுகாத்த தமிழ் மக்களை மறந்தது வேதனையிலும் வேதனையே.

உண்மையில், இவர்கள் ஒவ்வொருவரும் ஆட்சி மாற்றத்திற்கு எதிராக பாடுபட்டவர்களாயினும், ஆட்சி மாற்றத்திற்கு தமிழ் முஸ்லிம் மக்களின் வாக்குக்கள் அதிகம் தேவையாக இருந்தது. தமிழ் மக்களும், முஸ்லிம்களும், வாக்களிக்காமல் ஒதுங்கியிருந்தால் இப்பொழுது ஜனாதிபதியாக மகிந்தவே இருந்திருப்பார்.

தன்னை எதிர்த்தவர்களை துவம்சம் செய்திருப்பார். இதை பதவியேற்ற ஒரு சில நாட்களில் மைத்திரியும் கூறியிருக்கின்றார்.

ஆக, நல்லாட்சி அரசாங்கத்தின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும், ஜனாதிபதியின் உயிரையும் காப்பாற்றியவர்கள் தமிழர்கள். அப்படியாயின் அவர், முதற்கண் தமிழ் மக்களுக்குத்தானே உதவியிருக்க வேண்டும்.

ஆட்சி மாறியவுடன், தமிழ் மக்களுக்கு சாதகமாக மைத்திரி செயற்பட்டால் சிங்கள மக்களின் எதிர்ப்பை சம்பாதிக்க வேண்டும் என வாசகர்கள் யாரேனும் கேட்டால்? பதில் மைத்திரிபால சிறிசேனவின், ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை ஆணையாளர் வெளியிட்டுள்ள அறிக்கைக்கு பதில் அளித்து உரையாற்றியமையை எடுத்துக்காட்டலாம்.

அதில் அவர், நாங்கள் நாட்டையும், இராணுவத்தினரையும், காப்பாற்றியிருக்கின்றோம். இலங்கையை சர்வதேச விசாரணையிலிருந்து காப்பாற்றியிருக்கிறோம். பலரின் பெயர்கள் வெளிவராமல் தடுத்திருக்கின்றோம்.



அதாவது, நாங்கள் தமிழர்களைக் கொன்று குவித்த இராணுவத்தினரைக் காப்பாற்றி இருக்கின்றோம், இராணுவத்தினருக்கு ஆணை பிறப்பித்த மகிந்த, கோத்தபாய, சரத்பொன்சேகாவின் பெயர்களை வரவிடாமல் தடுத்திருக்கின்றோம்.

ஏன் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க விடாமல் முற்றிலுமாக தடுத்து நிறுத்தியிருக்கின்றோம் என்று கூறியிருக்கின்றார்.

தான் தோற்றிருந்திருந்தால் மரணத்தைப் பரிசாக வழங்கும் மகிந்தவைக் காப்பாற்றியிருப்பதாக பேசியிருக்கின்றார் நல்ல மனிதர் என்று இன்று ஒரு சிலரால் சொல்லப்படுகின்ற ஜனாதிபதி மைத்திரி.

இதுதான் நல்லாட்சி அரசாங்கத்தின் தலைவர் நடந்துகொள்ளும் விதம்.

இதற்கு மேல் இன்னொன்றும் உள்ளது. நல்லாட்சியை அமைத்த நாளிலிருந்து இன்றுவரைக்கும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அப்பாவி இளைஞர்கள் இன்றும் சிறைவாசம் மீளவில்லை.

நிறைவேற்று முறை ஜனாதிபதிக்கு எதிராக நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தி வெற்றி பெற்றவருக்கு, பயங்கரவாதச் சடைத்திற்கு எதிராக வாக்கெடுப்பு நடத்தி அதனை இல்லாது செய்து தமிழ் இளைஞர்களை மீட்டுக் கொடுக்க முடியவில்லை.

உண்மையில், நாட்டில் நல்லாட்சி நடைபெறுகின்றதெனில், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும் எனக் கோரப்பட்ட அதே நேரம், தமிழ் மக்களை சந்தேகக் கண்கொண்டு பார்க்கப்படும் பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு எதிராகவும் ஜனாதிபதியும் பிரதமரும் குரல் கொடுத்திருக்க வேண்டும்.

ஆனால் அது தொடர்பாக அவர்கள் இம்மியும் வாய்திறக்கவில்லை. ஆனால் தன்னை ஆதரித்தவர்களுக்கு மட்டும் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

இதுதான் இலங்கையின் நிதர்சனம். ஆட்சிப்பீடம் யார் ஏறினாலும் சிங்கள விசுவாசம் அவர்களை ஆட்கொள்ளும். அவர்கள் பௌத்தத்தை காப்பாற்றுவார்கள்.

சிங்கள தேசத்திற்கும், பௌத்த பீடத்திற்கும் அயராது உழைத்தவர்கள் கொலை செய்தாலும், கொள்ளையடித்தாலும் அவர்களை காப்பாற்றுவார்கள். தவிர வேறு எதுவுமே செய்ய மாட்டார்கள்.

தமிழ் மக்கள் மீண்டுமொருமுறை இலங்கை அரசாங்கத்திடம் நல்லதொரு பாடத்தினைக் கற்றுக் கொண்டுள்ளனர். ஆனால் தமிழ் மக்களின் போராட்டம் மீளவும் பின்னோக்கி நகர்ந்துவிட்டது.


மறுபடியும் முதலில் இருந்தே ஆரம்பிக்க வேண்டும் போல் உள்ளது. ஏனெனில் சிங்களம் வெற்றி வாகை சூடி உலக நாடுகளை தன்பக்கம் ஈர்த்துக் கொண்டுவிட்டது.

இன்னும் சில நாட்களில் ஒட்டுமொத்த உலக நாடுகளும், இலங்கை அரசாங்கம் சொல்வதை கேளுங்கள். அடம்பிடிக்காதீர்கள் என்று தமிழ்த் தலைமைகளுக்கு சொன்னாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எஸ்.பி.தாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமது உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதில் சிறுவர்கள் பலம் குறைந்தவர்களாகவேயுள்ளனர்



இ,ரவீந்திரன்,
செயலாளர்,
கல்வி அமைச்சு
வடமாகாணம்.

இன்று சர்வதேச சிறுவர் தினம். இத்தினத்தில் எம் தேசச் சிறார்களுக்கு வாழ்த்துக்களைக் கூறும் விருப்போடு இப்பந்தியை வரைய விரும்பி நான் தயாராகும் போது எனது மனதில் சேயா செதவ்மியின் அந்த கள்ளம் கபடமற்ற தெய்வீக கலை நிறைந்த பிஞ்சு முகம், உச்சிக்குடும்பி, எதையோ கூற விரும்பும் கண்கள் வலியோடு வந்து நிற்கின்றது.

பலவீனமானவர்களாக இருப்பதன் காரணமாக நாளாந்தம் பலியாகும் சேயாக்கள், வித்தியாக்கள், கிரிஷாந்திகள் ஆகியோரது நினைவுகள் தரும் வலிகளை ஒரு பெரு மூச்சோடு ஒதுக்கி வைத்து விட்டு, இன்று எம் தேசத்தில் உலாவரும் அனைத்து சிறுவர்களுக்கும், இந்த நாளில் எனது மனம் நிறைந்த வாழ்த்தினை தந்து நிற்கின்றேன்.

"இயற்கையைப் பாதுகாப்பு மற்றும் அரவணைப்போடு உங்கள் இலக்கை அடைந்து பெரியோர்களாகி இப்புவியை வளப்படுத்த, வாழ்க வளமுடன்."

இன்று உலகெங்கும் சிறுவர்களை மதிக்கும் வகையில் சிறுவர் உரிமைகளைக் கௌரவிக்கும் வகையில் சிறுவர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த சிறுவர் தின கொண்டாட்டங்கள், இன்று சிறுவர்களுக்கு வழங்கப்படும் கௌரவிப்புக்கள் எந்த அளவுக்கு நியாயமானது என்பது பற்றிய ஒரு சந்தேகம் என்னுள் எழுகிறது.

சிறுவர்களையும் மனிதர்களாக மதித்து, மனிதர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் உரிமைகளிலும் சற்று விஷேடத்துவமான முறையில் அவர்களுக்கான உரிமைகளை அடையாளப்படுத்தி, அவர்களது நல்வாழ்வு, பாதுகாப்பு என்பன உறுதிப்படுத்தப்பட்டிருப்பினும், அது வெறுமனே வார்த்தைகளிலும் சட்டப்புத்தகங்களின் கறுப்பு எழுத்துக்களிலுமே அடங்கிப் போய்விட்ட ஒன்றாகவே இன்றும் உணர வேண்டியுள்ளது.

சிறுவர்கள் தொடர்பான உரிமைச் சாசனங்களது வரிகள் வளர்ந்தவர்களைப் போலவே சிறுவர்களும் சகல உரிமைகளையும் கொண்டவர்கள் என்று வலியுறுத்துகின்ற போதும், உண்மையில் சிறுவர்கள் தமது நலன்களை அனுபவிப்பதில் தமது உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதில் பலம் குறைந்தவர்களாகவே இருக்கின்றனர். இது காரணமாக, சிறுவர்கள் தமது உரிமைகளை அனுபவிக்கும் வாய்ப்புக்களை உரிய வகையில் வழங்க வேண்டியவர்களாக வளர்ந்தவர்களே இருக்கின்றனர். எனவே இன்றைய இந்த கௌரவம் மிக்க நாளில் சிறுவர்கள் தொடர்பில், அவர்களுக்கான உரிமைகளைப் பேணுவது தொடர்பில், வளர்ந்தவர்களோடு நான் எனது கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள விரும்புகின்றேன்.

இன்று உலகிலே மிக அதிகமான பிரகடனங்களைக் கொண்டதாக ஏற்றுக் கொள்ளப்பட்டும் சேர்க்கப்பட்டும் உள்ள ஒரு பிரகடனம் என்றால் அது ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தின் (UNCRC) பிரகடனங்களே. இப்பிரகடனங்கள், உலகச் சிறுவர்கள் சகல விதமான உரிமைகளையும் பெற்று அவற்றை அவர்கள் அனுபவிப்பதற்கான வாய்ப்புக்களை அளிப்பதற்காக உருவாக்கப்பட்டவை. வேறு பல சர்வதேச பிரகடனங்களை ஏற்றுக் கொள்ள மறுத்த பல உலக நாடுகள் கூட இந்த சிறுவர் உரிமை சமவாய பிரகடனத்தை அங்கீகரித்து ஏற்றுள்ளமை சிறப்பானதாகும்.

எமது நாடும் கூட, இந்த சிறுவர் உரிமை சமவாய பிரகடனங்களை ஏற்று 1990 ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் திகதி ஒப்ப மிட்டதோடு 1991 ஜூலை 12ஆம் திகதி சட்ட வலுவாக்கத்தினையும் வழங்கியது. இருந்தும் உலகின் பல நாடுகளிலும் எளிதாக நிறைவேறிக் கொண்டிருக்கும் சிறுவர்கள் மீதான உரிமை மீறல்களைப் போலவே எமது நாட்டிலும் தினமும் வேதனையும் வெட்கமும் அடையக் கூடிய வகையில் சிறுவர்களது உரிமைகளைப் பறித்தெடுக்கும் சம்பவங்கள் நடந்தேறி வருகின்றன.

இவற்றைத்தடுத்து, சிறுவர்களைப் பாதுகாப்பதில், அவர்களது மேம்பாட்டை உறுதிப்படுத்துவதில், திருப்தி அடையக்கூடிய ஒரு நிலையினை இருபத்துநான்கு ஆண்டுகளைக் கடந்தும் எங்களால் அடைய முடியாதிருப்பதே யதார்த்தமாயுள்ளது.

இதற்கு பல்வேறு காரணிகளை நாம் அடையாளப்படுத்த முடியும். இவை நிவர்த்தி செய்யப்படும் போது, எம் தேசச் சிறார்களது வாழ்வு வளம் காண வகை ஏற்படும் என்பது எனது எண்ணம்.

எமது நாட்டில், சிறுவர்களது உரிமைகளைப் பேணி, சிறுவர் உரிமை சமவாய பிரகடனங்களை நிறைவேற்றும், கூட்டிணைக்கும் பொறுப்பு, சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இருந்தும் ஆர்வமுள்ள பிற நிறுவனங்களும் இவற்றை நிறைவேற்ற முயல்கின்றன. அதுதான் நல்லது. ஆயினும் எமது சிறுவர்களை அவர்களது பராயம் முழுவதும் தன்னுள் இணைத்து, தன்னுடன் வைத்திருக்கும் கல்வித் திணைக்களங்களுக்கு பாடசாலைக்கு சிறுவர்களுக்கு நன்மை பயக்கும் இச் சமவாய பிரகடனங்களை அமுல்படுத்துவதற்கு ஏற்ற பொருத்தமான வளங்களை போதியளவு வழங்கப்படாதிருப்பதும், அது காரணமாக எழுத்திலுள்ள உரிமைகளை சிறுவர்கள் எமது பிள்ளைகள் தமது பராயத்தில் முழுமையாக அனுபவிக்க முடியாதிருப்பதும் ஒரு பெரும் குறைபாடாகவே உள்ளது. இந்த வெற்றிடப் பரப்பில், பிள்ளைகளது உரிமைகள் பற்றிச் சிந்தித்து, பொருத்தமான நடவடிக்கைகளைத் தட்டமிட்டு செயற்படுத்த வேண்டிய பொறுப்பினை மாகாண சபைகள் எடுப்பது அவசரமானதும் சிறந்ததும் என்பது எனது கருத்து.

இதற்கும் மேலாக சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சின் கீழ் பிரதேச செயலகங்களில் நியமக்கப்பட்டிருக்கும் சிறுவர்களது அபிவிருத்தியுடன் தொடர்புபட்ட அலுவலகர்களுக்கான வளப்பங்கீடு மற்றும் சிறுவர்களுடனான தொடர்புகளை வினைத்திறனாகக் கையாளக் கூடியதான தொடர்பயிற்சிகள் என்பன அதிகப்படுத்தப்படுவதும் நன்று. இன்று இத்துறை சார் அமைச்சுப் பொறுப்புக்களில் எமது பிரதேசத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் உள்வாங்கப்பட்டிருப்பது எமது தேச சிறுவர்களுக்கு எதிர்காலத்தில் பல்வேறு விதமான நன்மைகள் கிடைக்க வழியேற்படுத்தக் கூடும்.

### விஷேட தேவைக் குரிய மாணவர்கள்

மீத்திறனுள்ள மாணவர்கள் மற்றும் கற்றல் இடர்பாடு, மாற்றுத்திறனுடைய சிறுவர்கள் தொடர்பிலும் அவர்களை மையப்படுத்திய விஷேட கவனிப்பு மற்றும் அவர்களது மேம்பாட்டிற்கான வளங்களும் வாய்ப்புக்களும் எமது பாடசாலைகளில் மிகக்குறைந்த அளவுகளிலேயே உள்ளன. பொதுவாக மாகாண ரீதியில் மட்டுமன்றி தேசிய ரீதியிலும் கூட இந்த வகைக்குள் அடக்கப்படக்கூடிய மாணவர்களில் தொடர்பான சரியான எண்ணிக்கையை கண்டறிவதும், அவர்களுக்குப் பொருத்தமான செயற்றிட்டங்களைத் தீட்டுவதும் தொடர்பில் ஒரு தெளிவான வரையறுக்கப்பட்ட பொறுப்பளிப்பை இனம் காண முடியாதுள்ளது. இது தொடர்பில் கல்வித்துறையும், சுகாதார சேவைகள் துறையும் இணைந்து செயற்பட வேண்டிய ஒரு அவசிய நிலை காணப்படுகின்றது. கற்றல் இயலாமை, மொழிக் குறைபாடு, மெதுவான உளவளர்ச்சி, உக்கிர மனவெழுச்சி, பல்லின இயலாமை, உளவியல் குறைபாடு மற்றும் வேறு சுகாதாரக் குறைபாடு போன்ற பிரச்சினைகள் முகம் கொடுத்தபடி கற்றலில் இடர்பாட்டை எதிர்கொள்ளும் பிள்ளைகள் தொடர்பில் அவர்களை கையாள பொருத்தமான மருத்துவ நிபுணர்களின் பங்களிப்பும் வழிகாட்டலும் கல்வித்துறைக்கு மிக அவசியமான ஒன்றாக அமைந்துள்ளது.

### முன்பள்ளிச்சிறார்கள்

ஆரம்பபிள்ளைப் பருவத்தினரது பாதுகாப்பு மற்றும் அவர்களுக்கான கற்றல் கற்பித்தல் வாய்ப்புக்கள் தொடர்பிலும் இன்று நாம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. ஆரம்பப்பிள்ளைப் பருவத்தினரது கல்வி மற்றும் அவர்களது பாதுகாப்பு தொடர்பில் தேசிய ரீதியில் அல்லது மாகாண ரீதியில் சிறப்பான கொள்கை மற்றும் செயற்றிட்டங்கள் வரையப்பட்டு செயற்படுத்தவேண்டியுள்ளது.

### இலவசக்கல்வியும், இலங்கைச்சிறார்களும்

இலங்கைத் தீவெங்கும் இலவசக்கல்வி தொடர்பிலான சட்டவாக்க சான்றாதாரங்கள் இருந்த போதிலும் கிராமப்புறச் சிறுவர்களுக்கும், வறிய குடும்பங்களது பிள்ளைகளுக்கும் கல்வியில் தொடர்ந்தும் மறைமுகமான பாரபட்சம் நிலவும் ஒரு நிலைமையே யதார்த்தமாக உள்ளது.

இது கூட ஒரு வகை யில் அதிகளவான சிறுவர்களது உரிமை மீறல்களாகவே அமைகின்றது. இவை நிவர்த்தி செய்யப்படல் வேண் டும். அதற்காக கிராமியப் பாடசாலைகள் வளமூட்டப்பட்டு, தரமுயர்த்தப்படல் அவசியமானதாகும். இதற்கேற்ற நடவடிக்கைகளை மாகாண சபைகள் முன்னெடுக்க வேண்டியுள்ளது.

### ஊடகங்களும் சிறுவர்களும்

சிறுவர் துஷ்பிரயோகம் அல்லது துன்புறுத்தல்கள் தொடர்பில் உணர்வு பூர்வமான தகவல்களை வெளியிடுதல் என்பது, சிறுவர் மீதான பாதுகாப்புக்கு உதவும் என சில ஊடகங்களும், அமைப்புக்களும், பொறுப்பான சில அதிகாரிகளும் கருதுவதுண்டு. ஒரு விதத்தில் இது நியாயமானதாகவும் தோன்றலாம். ஆனால், இத்தகைய உணர்வு பூர்வமான தகவல்களோ, அறிக்கைகளோ, சிறுவர் உரிமை மீறலுக்கு காரணமான அடிப்படை விடயங்களை, குறிப்பாக சமூக, பொருளாதார காரணிகளை பெரும்பாலும் ஆராய்வதில்லை. ஆரோக்கியமற்ற குடும்ப நிலை, அடிப்படைத் தேவைகளைக்கூட பூர்த்தி செய்ய முடியாத குடும்ப பொருளாதாரம், ஒற்றைப் பெற்றோரைக் கொண்ட குடும்பம், பெற்றோரே இல்லாது உறவினர் அரவணைப்பில் வாழும் சிறார்கள், பாதுகாப்பான வீடுகளற்ற வாழ்வு, சொந்த இடங்களில் இன்னும் குடியேற முடியாது முகாம்களில் வாழும் சிறார்கள், தன்னலம் பற்றிய புரிதல் இன்மையோடு வாழ்வதற்காகப் போராடும் சிறார்கள் பற்றிய குடும்ப, சமூக பொருளாதார காரணிகள் பற்றிய புரிதல் இன்றி, நுனிப்புல் மேய்ந்து, உணர்வுகளைத் தூண்டும் செய்திகளை விற்கும் சில ஊடகங்கள் கூட உண்மையில் சிறுவர் உரிமைகளை சிதைக்கவே காரணமாகின்றன.

இந்த நிலைமை மாற்றப்படவோ அல்லது குறைக்கப்படவோ வேண்டுமாயின், சிறுவர்களுடன் தொடர்புபட்டு இயங்கும் அமைப்புக்களது பணியாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு சிறுவர் உரிமைகள பற்றிய பயிற்சிகளை உணர்வுபூர்வமாக வழங்கி விழிப்புணர்வூட்டுவது மிகவும் அவசியமாகும்.

### சிறுவர்களுக்கான கல்வி உரிமையினை உறுதிப்படுத்தல்

இலங்கை போன்ற அநேக ஆசிய நாடுகளிலுள்ள பெரும்பாலான சிறுவர்கள் சுரண்டலுக்கும் துஷ்பிரயோகத்துக்கும் ஆளாகி வருவதாக சிறுவர் பாதுகாப்பு அமையம் அடிக்கடி அறிக்கையிடுகிறது. இதற்கு அடிப்படைக் காரணமாக, வறுமை மற்றும் கலாசார ரீதியிலான சில காரணிகளும் அமைகின்றன என அது சுட்டிக்காட்டுகிறது. குடும்ப வறுமை காரணமாக சிறுவர்கள் வேலைக்குச் செல்லல், குடும்ப வன்முறைக்கு ஆளாதல், உட்பட போதைப் பாவனைக்கு அடிமையாதல் போன்ற காரணங்களினால், குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான சிறுவர்கள் தமது பாடசாலைக் கல்வியை இழந்து வீதியோரத்துக்கு வந்து விடும் நிலைமைகள் அவதானிக்கப்படுகின்றன. வடக்கு மாகாணத்தில் இதனைக் குறைப்பதற்கு அல்லது இல்லாது செய்வதற்கு ஒவ்வொரு கல்வி வலயங்களிலும் ஆண், பெண் மாணவர்களுக்கென தனித்தனி விடுதிப் பாடசாலைகளை உருவாக்கித்தர வேண்டும் என்ற கோரிக்கை மெல்ல மெல்ல வலுப்பெற்று, இன்று கல்வித் துறை சார்ந்த பலரிடமும் சமூகம் முன் வைக்கும் பிரதான விடயங்களுள்ஒன்றாக காணப்படுகிறது. சிறுவர்களது உரிமை பற்றி கரிசனை கொள் ளும் ஒவ்வொருவருமே இக் கோரிக்கைகள் பற்றி முன்னிலைப்படுத்தி ஆராய வேண் டியுள்ளது.

### 1939ஆம் ஆண்டில் கல்விக் கட்டளைச்சட்டம்

எமது நாட்டில் பிள்ளைகள்- மாணவர்கள் செய்யும் குற்றங்களுக்கு வளர்ந்தவர்கள் வழங்கும் சரீரத் தண்டனைகளைத்தடை செய்யும் வகையில் கல்வி அமைச்சு 2005ஆம் ஆண்டில் சுற்றறிக்கை ஒன்றினை வெளியிட்டிருந்தது. சிறுவர் உரிமை தொடர்பில் அக்கறை கொண்ட அனைவருக்கும் அது மகிழ்ச்சி தருவதாக இருந்தாலும் 1939ஆம் ஆண்டின் கல்விக் கட்டளைச் சட்டம் இன்னும் இரத்துச் செய்யப்படாதிருப்பது ஒருபுறம் கவலையளிப்பதாக உள்ளது.

மாணவர்கள் மீதான சரீரத்தண்டனைகள் காரண மாக அவர்களுக்கு ஏற்படும் உளப்பாதிப்புக்கள் மற்றும் நெருக்கீடுகள் பற்றி கல்வி அதிகாரிகள் வழிகாட்டலில் சிறுவர்கள், அவர்தம் குடும்ப உறுப்பினர்கள், சமூகத் தலை வர்கள் மற்றும் மதத்தலை வர்களது பங்குபற்றல்களு டன் கல்விச்சமூகம் உட்பட விழிப்புணர்வை ஏற்படு த்தும் நடவடிக்கைகளை பரவலாக முன்னெடுக்க வேண்டியுள்ளது. இதன்மூலம்சீரத்த ண்டனைகளுக்கு மாற்றீடானவழிவகைகளுக் கூடாக ஒழுக் கத்தை உறுதிப்படுத் தும் முறைகளைப் பயன் படுத்த ஊக்கமளிக்கப்படல் வேண்டும்.

2015ஆம் ஆண்டுக்கான இன்றைய சிறுவர் தினத்தில் இருந்து எமது தேசத்து செல்வங்களது சுபீட்சமான வாழ்வுக்காக, உயர்வான அவர்களது மேம்பாட்டிற்காக, எமது தேசத்தின் எதிர்கால மேன்மைக்காக இத் தேசத்து சகல பிள்ளைகளையும் எமது பிள்ளைகள்- எனது பிள்ளைகள் என நினைத்து நேசிப்போமா? இன்று இந்தப்பிள்ளைகளுக்காக ஏதேனுமொரு நல்ல விடயத்தை ஆரம்பிக்க முடியுமெனில், அது எங்களுடைய எதிர்காலத்தில், எங்கள் வாழ்வில் எப்பொழுதாவது ஒரு ஆசீர்வாதமாக நிச்சயமாக திரும்பவும் எங்களை வந்து சேரும். ஏனெனில் குழந்தைகள் இறைவனது தூதுவர்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

1254

## மீன் காய்க்கும் மரம்!

"உனக்கு அதிசயமா இருக்கும். எங்களைக் காப்பாற்றிக்கொள்ளத்தான் இப்படித் தொங்குகிறோம். உன்னுடைய பளளிக்குப் பின்னால் ஒரு ஆறு ஓடுதுல்ல. அந்த ஆத்து மீன்கள தான் நாங்க.

ஆத்தில வெள்ளம் கரை



புரண்டு ஓடுது. யாருக்கும் பாதுகாப்பில்ல. அந்தா பாரு தூரத்தில உன்னோட பள்ளிக்கூடம. அதுகூட இடியுற மாதிரி இருக்கு".

இடி முழங்குவதைப் போல ஒரு சத்தம் கேட்டது. பள்ளிக்கூடக்கட்டடம் இடிந்து விழுவதை இந்து பார்த்தாள்.

உடனே அவள் ஓடத்தொடங்கினாள். எப்படியாவது வீட்டுக்குப் போய்ச் சேர வேண்டும்.

கொஞ்ச தூரம் போயிருப்பாள். அப்போது அவள் வந்த பாதையில் மணல் மூடியிருப்பதைப் பார்த்தாள். என்ன செய்வதென்று தெரியாமல் முழித்தாள்.

வானத்திலிருந்து ஒரு சத்தம். ஆயிரம ரயில்கள் ஒன்று போல ஓடி வருவதைப் போல பெரிய சப்தம். கண்களை அகல விரித்துப் பார்த்தாள். கண்ணுக்கெட்டாத உயரத்தில் கடலலைகள் பொங்கி வந்தன! (தொடரும்)

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

10.2015 01

- 1788 - நியூவென் ஹியூ வியட்நாமின் மன்னராகத் தன்னை அறிவித்தார்.
- 1795 - பிரான்ஸ் பெல்ஜியத்தைப் பிடித்தது.
- 1799 - புதுக்கோட்டை மன்னர் விஜயரகுநாத தொண்டமானால் வீரபாண்டிய கட்டபொம் மன் கைது செய்யப்பட்டான்.
- 1843 - நியூஸ் ஒஃப் த வேர்ல்ட் பத்திரிகை லண் டனில் வெளியிட ஆரம்பிக்கப் பட்டது.
- 1854 - இந்திய அஞ்சல் துறை ஏற்படுத்தப்பட்டது.
- 1869 - உலகின் முதல் தபால் அட்டை ஆஸ்திரியாவில் வெளியிடப்பட்டது.
- 1880 - இந்தியாவுடனான காசுக் கட்டளை இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1880 - முதலாவது மின் விளக்கு தொழிற்சாலையை தொமஸ் எடிசன் ஆரம்பித்தார்.
- 1887 - பிரித்தானியரினால் பலூசிஸ்தான் கைப்பற்றப்பட்டது.
- 1892 - இலங்கையில் இந்திய இரண்டு அணா நாணயம் செல்லுபடியற்ற தாக்கப்பட்டது.
- 1895 - பிரெஞ்சுப் படைகள் மடகஸ்காரின் அண்டனனாரிவோ நகரைக் கைப்பற்றினர்.
- 1898 - ரஷ்யாவின் முக்கிய நகரங்களிலிருந்து யூதர்கள் இரண்டாம் நிக்கலாஸ் மன்னனால் வெளியேற்றப்பட்டனர்.
- 1918 - முதலாம் உலகப் போர்: அரபுப் படைகள் சிரியாவின் டமாஸ்கஸ் நகரைக் கைப்பற்றினர்.
- 1931 - ஜோர்ஜ் வோஷிங்டன் பாலம் திறக்கப்பட்டது.
- 1949 - மா சே துங்கினால் மக்கள் சீனக் குடியரசு அறிவிக்கப்பட்டது.
- 1953 - ஆந்திரா மாநிலம் உருவாக்கப்பட்டது.
- 1969 - கொன்கோர்ட் விமானம் முதற்தடவையாக ஒலியின் வேகத்தை மீறியது.
- 1971 - வால்ட் டிஸ்னி உலகம் புளோரிடாவில் அமைக்கப்பட்டது.
- 1975 - சிஷெல்ஸ் சுயாட்சியைப் பெற்றது. எலீஸ் தீவுகள் கில்பேர்ட் தீவுகளிலிருந்து பிரிக்கப் பட்டு துவாலு என்ற பெயரைப் பெற்றது..
- 1982 - சொனி நிறுவனம் முதலாவது குறுந்தட்டு ஒலிபரப்பு சாதனத்தை (CDP-101) வெளியிட்டது.
- 1994 - பலாவு ஐ.நாவிடமிருந்து விடுதலை பெற்றது.
- 2006 - பாண்டிச்சேரி மாநிலத்தின் பெயர் புதுச்சேரி என மாற்றம் பெற்றது.

**பிறப்புக்கள்**

- 1847 - அன்னி பெசண்ட், பெண் விடுதலைக்குப் போராடியவர் (இ. 1933)
- 1924 - ஜிம்மி கார்ட்டர், அமெரிக்காவின் 39வது குடியரசுத் தலைவர்
- **1927 - சிவாஜி கணேசன், தமிழ்த் திரைப்பட நடிகர் (இ. 2001)**
- 1928 - ஜூ ரோங்ஜி, சீனத் தலைவர்
- 1932 - அரங்க முருகையன், தமிழறிஞர், எழுத்தா ளர் (இ. 2009)
- 1936 - கே. எஸ். சிவகுமாரன், ஈழத்து எழுத்தாளர், திறனாய்வாளர்
- 1947 - ஆரன் சீசேனோவர், நோபல் பரிசு பெற்ற ஷ்ரேலியர்

**இறப்புகள்**

- 1973 -பாபநாசம் சிவன், கருநாடக இசை, தமிழிசை அறிஞர் (பி. 1890)

# இலங்கைத் தமிழர் வரலாறு

## இலங்கையின் பூர்வீகக்குடிகள் தமிழர்கள்

01



இலங்கையில் கண்டியை ஆண்ட தமிழ் மன்னர் விக்கிரமராசசிங்கன். வெள்ளையருடன் 26 ஆண்டுகள் வீரப்போர் புரிந்தவர்.

இலங்கையின் வரலாற்றில் ஒரு முக்கியமான காலகட்டம் இது.

பல ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் ஈழம் கோரிக்கை, இலங்கைத் தமிழர்களால் எழுப்பப்பட்டது. இலங்கைத் தமிழர்களின் தந்தை என்றும் இலங்கையின் காந்தி என்றும் போற்றப்பட்ட செல்வநாயகம், தமிழர்களின் உரிமைக்காக அமைதியான முறையில் போராடிப்பார்த்தார். இலங்கை அரசுகளுடன் பல ஒப்பந்தங்கள் செய்துகொண்டார். பயன் இல்லை. கையெழுத்திட்டமை உலருவதற்கு முன் ஒப்பந்தங்களைக் கிழித்துப் போட்டனர், சிங்கள ஆட்சியாளர்கள்.

எனவே, இலங்கை தமிழர் கள் மானத்தோடும் வாழ சுதந்திர தமிழ் ஈழம் தான் ஒரே வழி என்று மாநாடு கூட்டி அறிவித்தார். அவர் இறப்பதற்கு சில மாதங்களுக்கு முன் போடப்பட்ட தீர்மானம் இது.

**இலங்கையின் வரலாறு**

தமிழர்கள் வயிற்றுப்பிழைப்புக்காக இலங்கைக்குப் போனவர்கள் தானே! அவர்கள் தனி நாடு கேட்பத்தில் என்ன நியாயம் இருக்கிறது? என்று இன்றும் பலர் கேட்கி றார்கள். அவர்கள் இலங்கையின் வரலாற்றை அறியாதவர்கள்.

வரலாறு கூறுவது என்ன? இலங்கையில் புத்தமதம் பரவுவதற்கு முன்ச்சியில் பலவகையான மண் பாண்டங்கள் கிடைத்தன. அவை சூளையில் நன்றாகவே வைக்கப்பட்டு நல்ல மெருகுடன் காணப்படுகின்றன. இறந்தவர்களின் உடல்களை வைத்து புதைப்பதற்கான தாழிகள் இவை.

இதேபோன்ற தாழிகள், இலங்கையின் வடபகுதியிலும் பூமிக்கடியில் இருந்து தோண்டி எடுக்கப் பட்டுள்ளன.

அதுமட்டுமல்ல, புரதான தமிழர்கள் உபயோகித்த பல நாணயங்கள், அரச இலட்சினைகள், முதலானவை இலங்கையின் பல்வேறு இடங்களில் தோண்டி எடுக்கப்பட்டன. இலங்கையின் பூர்வ குடிகள் தமிழர்கள் என்பதற்கு இதுவே ஆதாரம் என்று ஆராய்ச்சியாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

சுருக்கமாகச் சொன்னால் பழைய கற்காலத்திலும் புதிய கற்காலத்திலும் தமிழ்நாட்டில் தமிழர்கள் எத்தகைய நடை- உடை- பாவனையுடன் வாழ்ந்தார்களோ, அதே மாதிரி தான் இலங்கைத் தமிழர்களும் வாழ்ந்திருக்கிறார்கள். இருவருக்கும் தொப்புள்கொடி உறவு இருக்கிறது.

குத்தன் என்ற இரு தமிழ் மன்னர்கள் 22 வருடங்கள் அனுராதபுரத்தில் நல்லாட்சி நடத்தினார்கள் என்று அதே நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**மூன்று ராஜ்ஜியங்கள்**

ஆதி காலத்தில் இலங்கை ஒரே நாடாக இருந்தது இல்லை. பல



இலங்கையின் பூர்வ குடிகள் தமிழர்கள். இலங்கையின் மண் ணின் மைந்தர்கள். தமிழ் மன்னர் கள் பலர் இலங்கையை ஆண்டிருக்கிறார்கள். அது வரலாற்றில் நிரூபிக்கப்பட்ட உண்மை.

குமரி முனைக்கு தெற்கே உள்ள இந்துமகா சமுத்திரம் ஒருகாலத்தில் நிலப்பரப்பாக இருந்தது என்றும் அது லெமூரியா (குமரிக்கண்டம்) என்று அழைக்கப்பட்டது என்றும் மேல்நாட்டு ஆராய் ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

லெமூரியா கடலில் மூழ்கிவிட்டது. அப்போது தமிழ் நாட்டுடன் இலங்கையும் ஒட்டிக்கொண்டிருந்தது. நாளடைவில் தனி தீவாகப் பிரிந்துவிட்டது என்பதும் ஆராய்ச்சியாளர்களின் கண்டுபிடிப்பு. இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே உள்ள கடல் ஆழமின்றி இருப்பதற்கு இதுதான் காரணம்.

**ஆதாரங்கள்**

திருநெல்வேலிக்கு தென்கிழக்கே 15 மைல் தூரத்தில் உள்ள ஆதிச்ச நல்லூரில், 1876 இல் பூமியைத் தோண்டி நடத்தப்பட்ட அகழ்வாராய் சிவ வழிபாடுதான் நடந்து வந்திருக்கிறது. பூமியில் இருந்து தோண்டி எடுக்கப்பட்ட சிவன் சிலைகளும் நந்தி சிலைகளும் இதை உறுதிப் படுத்துகின்றன. சிவனை வழிபட்டவர்கள் தமிழர்கள்தான்; சிங்களவர்கள் அல்ல.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டுகளில் வட இந்தியாவில் ஆட்சி புரிந்த மவுரிய பேரரசன் அசோகன், கலிங்கப் போரின் முடிவில் பௌத்த மதத்தைத் தழுவினார். அவர் புத்த மதத்தைப் பரப்புவதற்காக மகிந்த தேரே என்ற புத்தமத குரு தலைமையில் ஒரு குழுவை இலங்கைக்கு அனுப்பினார்.

அக்குழு இலங்கைக்கு வந்த போது அனுராதபுரத்தைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்ட தமிழ் மன்னன் பெயர் திசையன் என்றும் அசோகன் விருப்பப்படி அவன் புத்தமதத்தைத் தழுவினான் என்றும் அவனுக்குத் தேவநம்பி என்ற பட்டத்தை அசோகர் வழங்கினார் என்றும் பாலி மொழியில் எழுதப்பட்ட வரலாற்று நூலில் குறிப்பிடப்பட்டுள் ளது. திசையன் இறந்த பிறகு சேனன், அரசர்களும் சிற்றரசர்களும் குறிப்பிட்ட பகுதிகளை ஆண்டு வந்தனர்.

ஐரோப்பியர்கள் இலங்கை க்கு வந்தபோது இலங்கையில் மூன்று ராஜ்ஜியங்கள் இருந்தன:

1. தென் கோடியில், கொழு ம்பு பகுதியை உள்ளடக்கிய கோட்டை ராஜ்ஜியம், இந்தக் கோட்டையை ஏற்படுத்தியவனே அழகுகக்கோன் என்ற தமிழன்.

2.கண்டி ராஜ்ஜியம்.

3.யாழ்ப்பாண ராஜ்ஜியம்.

இவற்றில் யாழ்ப்பாண ராஜ்ஜியத்தை எக்காலத்திலும் சிங்களவர்கள் ஆண்டது இல்லை. கோட்டையையும் கண்டியையும் தமிழர்களும் சிங்களவர்களும் மாறி மாறி ஆண்டு வந்திருக்கிறார்கள்.

பல ராஜ்ஜியங்களாக இருந்த இந்தியாவை ஒரு குடையின் கீழ் கொண்டு வந்த ஆங்கிலே யர்கள், இலங்கையையும் ஒரே நாடாக மாற்றினார்கள். சிலோன் (இலங்கை) என்ற பெயரையும் சூட்டினார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

செலவில்லாத அன்பை குழந்தைகளிடம் செலுத்தினால் பத்துக் கோயில் கட்டிய புண்ணியம் உங்களுக்கு உண்டு. ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சிறுவர் தினத்தில் எடுக்கும் உறுதி உரை

இன்று சர்வதேச சிறுவர் முதியோர் தினம். உலக நாடுகளின் வளர்ச்சிப் போக்கில் சிறுவர்களுக்கும் முதியவர்களுக்கும் காப்பகங்கள் அமைக்கின்ற அளவில் நிலைமை மாறியுள்ளது.

அதிலும் குறிப்பாக எங்கள் தமிழினத்தில் இந்தத் துன்பம் அதிகரித்திருப்பது வேதனையிலும் வேதனை.

யுத்தத்தின் கொடூரத்தனத்தால் எத்தனையோ சிறுவர்கள் பெற்றோர்களை இழந்து அநாதைகளாகி சிறுவர் காப்பகங்களில் தங்கியுள்ளனர். தாயின், தந்தையின் பாசத்துக்காக ஏங்குகின்ற இவர்களின் துன்பத்தை நீக்குவதற்கான ஒரேவழி அவர்கள் மீது நாம் அன்பு காட்டுவதாகும்.

எனினும் நடைமுறையில் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மீதான எங்களின் அன்பு என்பது பேச்சளவிலேயே இருப்பதாக உணரப்படுகிறது. சிறுவர்களைப் பராமரித்தல், அவர்களின் தேவைகளை நிறைவேற்றுதல், அவர்களின் குழப்பங்களைச் சமாளித்தல் என்பது சாதாரணமான விடயமன்று.

இந்நிலையில் சிறுவர் காப்பகங்களை பாராமரிக்கின்றவர்கள் சூழ்நிலைக்கோபிகளாக மாறி விடுகின்றனர். இந்த நிலைமை தவிர்க்க முடியாததாகின்றது.

இதுதவிர, தமிழர் தாயகத்தில் சிறுவர்களின் வளர்ச்சிப்படி நிலைகள் என்பதில் மிகவும் வேதனைப்படக் கூடியதான ஏற்றத்தாழ்வுகள் உயர்வு பெற்றிருப்பதைக் காணமுடியும். குறிப்பாக தமிழர் தாயகத்தில் இருக்கக்கூடிய சிறுவர்களின் கல்வி நிலை பற்றி ஆராயும் போது படித்தவர்கள், பணம் படைத்தவர்கள், செல்வாக்கு உடையவர்களின் பிள்ளைகள் பிரபல்யமான பாடசாலைகளில் குவிந்து போவதையும் சாதாரண மற்றும் ஏழைச் சிறுவர்கள் பின்தங்கிய பாடசாலைகளில் படிப்பதான நிலைமைகளும் காணப்படுகின்றன.

எனவே சிறுவர் உரிமையைப் பாதுகாத்தல், சிறுவர் துஷ்பிரயோகத்தை தவிர்த்தல் என்ற நடவடிக்கைகள் வெற்றி தரவேண்டுமாயின், எங்கள் சிறுவர்கள் படிக்கின்ற அனைத்துப் பாடசாலைகளும் தரமானதாக–மக்கள் சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்டதாக–எனது பிள்ளை எந்தப் பாடசாலையில் படித்தாலும் எமக்குத் திருப்தி என்று பெற்றோர்கள் கூறக்கூடியதான சமத்துவ நிலையை ஏற்படுத்துவது மிகவும் கட்டாயமானதாகும்.

பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டில் பாடசாலைகளின் வகிபங்கு எந்த விதமானஎதிர் வினைத் தாக்கத்தையும் ஏற்படுத்தி விடக்கூடாது.

எனது பிள்ளை அந்தப் பாடசாலையில் படித்திருந்தால் சித்தியடைந்திருப்பான்; இந்தப் பாடசாலையில் படித்ததால்தான் எனது பிள்ளை பரீட்சையில் தோல்வி அடையவேண்டியதாயிற்று என்ற கருத்தியல், சமூகத்தில் இருக்குமாயின் சிறுவர் உரிமை மற்றும் சிறுவர்களிடையேயான சமத்துவம் என்பது ஒரு போதும் சாத்தியமாகாது.

அதேநேரம் எங்கள் மண்ணில் இருக்கக்கூடிய சமூகக் கட்டமைப்புகள், குடும்ப வறுமைகள், பெற்றோர்களின் அறியாமை என அனைத்தும் சிறுவர்களின் கல்வியில்; ஆளுமையில் பாதகத்தை ஏற்படுத்தி விடுகின்றன.

எங்கள் குடும்பங்களில் இருக்கக்கூடிய வறுமையும் அறியாமையும் பிறழ்வுகளும் சீராக வேண்டுமாயின் அதற்கான ஒரேவழி கல்வி ஒன்றுதான். ஆகையால் மேற்குறித்த குடும்பங்கள் சார்ந்த சிறுவர்களுக்கு கல்வியைப் புகட்டுவது; மேற்படிப்புக்கு சந்தர்ப்பம் கொடுப்பது சமூக எழுச்சிக்கு வித்திடும் என்பதால், இன்றைய சர்வதேச சிறுவர் தினத்தில் அனைத்துச் சிறுவர்களுக்கும் சமத்துவமான கற்றல் வாய்ப்புக் கிடைக்க நாம் அனைவரும் திடசங்கற்பம் கொள்வோமாக.

### பாலியல் குற்றச்சாட்டு

# இராணுவத்துக்கு எதிரான வழக்கு விசாரணை முடிவுக்கு

(யாழ்ப்பாணம்)

விசுவமடு பகுதியில் ஒரு பெண்ணைக் கூட்டுப் பாலியல் வல்லுறவு புரிந்ததுடன், மற்றுமொரு பெண்ணைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக நான்கு இராணுவத்தினருக்கு எதிராகக் குற்றம் சுமத்தப்பட்ட வழக்கு விசாரணைகள் முடிவுக்கு வந்துள்ளன.

இதனையடுத்து இந்த வழக்குக்கான தீர்ப்பை யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் ஒக்டோபர் 07 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்த இராணுவத்தினருக்கு எதிராக சட்டமா அதிபரினால் நான்கு குற்றச்சாட்டுக்கள் சுமத்தி வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் நடைபெற்ற இந்த வழக்கில் பாதிப்புக்குள்ளாகிய பெண்கள், பொலிஸ் அதிகாரிகள், இராணுவ பொலிஸ் அதிகாரிகள், மருத்துவ பரிசோதனை நடத்திய வைத்திய அதிகாரி உள்ளிட்ட பலர் சாட்சியமளித்துள்ளார்கள்.

வழக்குத் தொடுநர் சாட்சியங்கள் மற்றும் எதிரி தரப்பு சாட்சியங்கள் என்பன முடிவுறுத்தப்பட்டு, திங்கட்கிழமை இருதரப்பு சட்டத்தரணிகளினதும் தொகுப்புரைகள் இடம் பெற்றிருந்தன.

எதிரிகளான இராணுவத்தினர் தரப்பில் சட்டத்தரணி அசேல டி சில்வா தொகுப்புரை வழங்கினார். அரச தரப்பிலான தொகுப்புரையை அரச தரப்பு சட்டத்தரணி சுகந்தி கந்தசாமி வழங்கினார்.

இதன்போது, நான்காவது சிப்பாய் நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கவில்லை. இதனையடுத்து, அவரைக் கைது செய்ய பொலிஸ் மா அதிபர் ஊடாக நீதிபதி. இளஞ்செழியன் பிடிவிறாந்து உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

அத்துடன் இந்த வழக்கிற்கான தீர்ப்பு ஒக்டோபர் மாதம 7 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் அறிவித்துள்ளார். (எ-4)

## கற்பிட்டிக் கடற்பரப்பில் 7 இந்.மீனவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

கற்பிட்டி, பத்தலங்குண்டு பிரதேசத்துக்கு வடக்கில் இலங்கைக்கு சொந்தமான கடற்பரப்பில் சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்ட 7 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினரின் உதவியுடன் இலங்கை கரையோர பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் இவர்களை கைது செய்துள்ளதாக கடற்படையின் பேச்சாளர் கமாண்டர் இந்திக டி சில்வா தெரிவித்துள்ளார்.

மீனவர்களின் படகு மற்றும் அவர்களால் பிடிக்கப்பட்டிருந்த 500 கிலோ கிராம் மீன், 3 திசை அறியும் கருவிகளையும் கரையோர பாதுகாப்பு திணைக்களம் கைப்பற்றியுள்ளது.

கல்பிட்டி கடற்படை முகாமுக்கு அழைத்து வரப்பட்ட இந்திய மீனவர்கள் பின்னர், புத்தளம் மீன்பிடி மற்றும் நீரியல் வள திணைக்கள அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (எ-11)

## கிணற்றிலிருந்து — பெண்ணின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டி பகுதியில் மக்கள் பயன்படுத்தும் கிணற்றிலிருந்து குடும்ப பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சிறுப்பிட்டி வைரவர் கோவிலடியை சேர்ந்த ஜெ.விஜயமாலா (வயது41) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தாயாரான இவர் நேற்று வேலைக்குச் சென்ற கணவருக்கு தேநீர் கொடுத்துவிட்டு திரும்பிய நிலையில் காணாமல் போனதாகவும்,

பின்னர் நேற்றுக் காலை கிணற்றில் தண்ணீர் எடுக்கச் சென்றவர் சடலத்தை கிணற்றில் கண்டெடுத்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை சம்பவம் தொடர்பான விசாரணை மேற்கொண்டுள்ள மல்லாகம் நீதிமன்ற நீதிபதி கே.ஜீவராணி சடலத்தை பிரேத பரிசோதனைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்க உத்தரவிட்டுள்ளார். (எ-11)



## சத்திய தரிசனம்

### உழைத்து சம்பாதியுங்கள்

- ❖ கமலர்ந்த தாமரையில் மணம் கமழ்வது போல, நல்லவர்களைச் சுற்றி நல்ல எண்ண அலைகள் பரவி இருக்கும்.
- ❖ அரை மனதுடன் முயற்சியில் ஈடுபடாதீர்கள். ஆர்வமில்லாத செயலால் நன்மை ஏற்படுவதில்லை.
- ❖ கடவுளுக்குப் படைத்த உணவைச் சாப்பிட்டால், உடல் ஆரோக்கியத்தோடு உள்ளமும் பலம் பெறும்.
- ❖ அரிதான இந்தப் பிறவியை, கடவுளை அறிவதற்காகப் பயன்படுத்துபவனே சிறந்த அறிவாளி.
- ❖ எதையும் இலவசமாகப் பெறக்கூடாது. உழைப்பினால் கிடைக்கும் சம்பாத்தியமே சிறந்தது.

## வெளிவிவகார அமைச்சுக்கு அமெரிக்கா நிதியுதவி

(கொழும்பு)


கடனுதவிகளை விட இலங்கைக்கு வெளிநாட்டு முதலீடுகளே அவசியம் என நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அத்துல் கேஷாப் நிதியமைச்சுக்கு வந்து, அமைச்சரை சந்தித்த போதே அவர் இதனை கூறியுள்ளார்.

நல்லாட்சியின் கீழ் இலங்கைக்குள் முதலீட்டு சந்தர்ப்பங்களை வலுப்படுத்த அமெரிக்க தயாராக இருப்பதாக தூதுவர் இதன்போது கூறியுள்ளார்.

எதிர்காலத்தில் முதலீடுகளை வலுப்படுத்துவது சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள தூதுவர் இதன்போது இணக்கம் தெரிவித்துள்ளார்.

அதேவேளை வெளிவிவகார அமைச்சுக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த அமெரிக்க தூதுவர், சட்டத்தின் ஆதிக்கம் தொடர்பான வளர்ச்சிக்கான உதவியை வழங்குவது சம்பந்தமான உடன்படிக்கையில் கையெழுத்திட்டதுடன் 2.6 மில்லியன் அமெரிக்க டொலர்களை உதவியாக வழங்கியுள்ளார். (எ-11)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### ஏன் அசைவம் சாப்பிடக்கூடாது?

ஆமாம். அது உயிர்ப்பலி அல்லவா. உயிரை வதைப்பது உகந்ததா? உயிர்போக்கி உடல் தின்பது உத்தமமாகாது. உயிர்கள் பால் அன்பு கொள்வதுதான் இந்து சமயம். அதிலிருந்து கொண்டு நாம் அப்படிச் செய்யலாமா? உயிர்ப்பலி, அசைவம் சாப்பிடுவது பற்றி உலகத்தோரால் புகழப்படும் நம் காலத்தில் வாழ்ந்த உத்தமர் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் ஒரு சொற்பொழிவு நிகழ்ச்சியில் சொல்லியதைக் கூறுகிறேன்.

ஷேவ் பண்ணும்போது முகத்தில் இலேசாக பிளேட்டால் கீறிவிட்டால் எவ்வளவு எரிச்சல் தோன்றுகிறது. எவ்வளவு வேதனைப்படுகின்றோம். ஆனால் நாம் ஆட்டை அமுக்கிப் பிடித்துக்கொண்டு அதன் குரல்வளையை அறுக்கின்றோம். அதற்கு எப்படி வலிக்கும் என்று யோசிக்கின்றோமா?

தொண்டையில் கறிவேப்பிலை சிக்கிக்கொண்டால் எப்படி இருமுகின்றோம். எவ்வாறெல்லாம் துடிக்கின்றோம். ஆனால் தூண்டில்போட்டு மீன் பிடிக்கின்றோமே? அதற்கு எப்படி வலிக்கும். யோசித்துப் பார்த்தோமா?

உயிரற்றதை புதைப்பது சுடுகாட்டில் மனித வயிறு என்ன சுடுகாடா?

சாலையில் நிழல் இருக்கின்றது என புழுக்கள் எறும்புகள் வந்திருக்கும் என்று குசேலர் வெயிலில் நடந்தார் என சொல்வார்கள். ஆனால் நாம் என்ன செய்கின்றோம். நெருப்பை அல்லவா எறும்புக்குழியில் கொட்டுகின்றோம்.

கொசு நம்மிடம் வந்தால் விரட்டினாலே போய்விடும். சிலர் கொசுவை இரண்டு கைகளால் அடித்து எண்ணியல்லவா பார்க்கிறார்கள்.

நாய், நரி, ஓநாய், புலி போன்ற மிருகங்கள் கொடுக்குப்பல் கொண்டவை. அவை மாமிசம் உண்கின்றன.

ஆடு, மாடு, யானை, குதிரை ஆகிய மிருகங்கள் சட்டிப்பல் கொண்டவை. இவை மாமிசம் உண்பதில்லை. மனிதர்களாகிய நமக்கும் சட்டிப்பல் தான் உள்ளது. நாம் மாமிசம் உண்ணலாமா? உண்ணவே கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோர்ஜ் வெப்ஸ்ரார் வெற்றிக்கிண்ணம் சென்றலைட்ஸ் அணி முன்னிலை

ஜோர்ஜ் வெற்றிக்கிண்ணத்திற்காக யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 6 வருடங்களாக நடத்தி வரும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வில் 01.01.2015 தொடக்கம் 30.09.2015 வரை நடைபெற்ற 122 போட்டிகளுக்கு வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் 16 போட்டிகளில் பங்குபற்றி 13 போட்டிகளில் வெற்றி பெற்று 85.91 புள்ளிகளுடன் முன்னிலையில் உள்ளது.

கே.சீ.சீ.சீ. அணி 17 போட்டிகளில் பங்குபற்றி 09 போட்டிகளில் வெற்றி பெற்று 72.06 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்திலும் சிறிகாமாட்சி அணி 16 போட்டிகளில் பங்குபற்றி 10 போட்டிகளில் வெற்றி பெற்று 68.68 புள்ளிகளுடன் 3 ஆவது இடத்திலும் உள்ளன.

**ஏனைய கழகங்களின் நிலை பின்வருமாறு,**



திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி 68.33 (15/09), ஹாட்லியைற்ஸ் அணி 66.95 (15/09), யாழ்.ஜொனியன்ஸ் 63.85 (13/08) ஜொலிஸ்ரார்ஸ் 57.23 (12/07/01), யாழ்.சென்றல் 52.95 (13/06), யூனியன்ஸ் 49.36 (11/06), ஸ்கந்தாஸ்ரார் 46.21 (12/06), மானிப்பாய் பரீஸ் (46.14 (07/05),கிறாஸ் கொப்பர்ஸ் 42.81 (11/05/01), பற்றீசியன்ஸ் 40.31 (12/04), ஓல்ட்கோல்ஸ் 35.57 (08/03), யாழ்.பல்கலைக்கழகம் 34.30 (08/04), டிறிபேக்ஸ்ரார் 31.52 (07/03), ஸ்ரான்லி 26.13 (08/02), விங்ஸ் 24.59 (07/04), நியூஸ்ரார் 19.75 (05/02), விக்டோறி 19.62 (07/01), சென்றலைட்ஸ் புளூஸ் 13.97 (03/02), திருநெல்வேலி YMHA 12.31 (05/01), றெயின்போ 12.30 (04/01), அரியாலை சென்றல் 9.74 (05/00) யங்ஸ்ரார் 4.77 (04/00), கே.சீ.சீ.சீ. B 1.74 (01/00) (க)

## உதைபந்தாட்ட சுற்றுத்தொடர் மேரிஸ், நியூஸ்ரார் வெற்றி

அராலி ஏ.எல். விளையாட்டுக்கழகமும், அராலி ஏ.எல். இளைஞர் கழகமும் இணைந்து யாழ்., வலிகாமம், வடமராட்சி, பருத்தித்துறை மற்றும் தீவகம் ஆகிய உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடத்தும் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் கடந்த ஞாயிறுக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணியை எதிர்த்து இளவாலை சென்.லூட்ஸ் அணி மோதிக் கொண்டது. இதில் நாவாந்துறை சென். மேரிஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து துணவி நியூஸ்ரார் அணி மோதிக் கொண்டது. இதில் துணவி நியூஸ்ரார் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (க)

## யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான இருபது -20 கிரிக்கெட் சுற்றுத்தொடர் ஸ்ரான்லி கல்லூரி வெற்றி

யாழ். மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்திவரும் 19வயதுக்கு உட்பட்ட அணிகளுக்கு இடையிலான இருபது 20 தொடரில் கடந்த சனிக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் மகாஜனக் கல்லூரியை 6 இலக்குகளால் வீழ்த்தியது ஸ்ரான்லிக் கல்லூரி.

முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி அணி 16 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 114 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக பிரணவன் 19 ஓட்டங்களையும், தயூஸ்ரன் 17 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஸ்ரான்லிக் கல்லூரி அணி சார்பில் வதுசன், சுஜிகரன் இருவரும் தலா 3 இலக்குகளையும் விஸ்ணுவாணன், பிரசாந் இருவரும் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

115 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி கல்லூரி அணி 18 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 118 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சபிஸ் 48 ஓட்டங்களையும், விஸ்ணுவாணன் 46 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீசசில் மகாஜனக் கல்லூரி அணி சார்பில் ஜெசிந்தன், துலக்சன் இருவருமதலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.(க)

## புத்தூர் தமிழ்மதி வி.கழகம் வெற்றி

கரப்பந்தாட்டப்போட்டியில் புத்தூர் தமிழ்மதி விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றுள்ளது. ஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற போட்டியில் புத்தூர் தமிழ்மதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் B மோதிக்கொண்டது.

இப்போட்டியில் புத்தூர் தமிழ்மதி விளையாட்டுக்கழகம் 3:2 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது. (க)

## மென்பந்து போட்டிக்கு விண்ணப்பிக்குக

அச்சுவேலி றொக்கெட் விளையாட்டுக் கழகம் வருடாவருடம் நடத்தும் மாபெரும் மென்பந்து சுற்றுப் போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. CHAM OF ROCK என்னும் பெயரில் மேற்படிச் சுற்றுப் போட்டி நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள எந்த விளையாட்டுக்கழகமும் மேற்படி போட்டிக்கு விண்ணப்பிக்கலாம். போட்டிக்கான கட்டணமாக ரூபா 1100 அறவிடப்படும். அனைத்துப் போட்டிகளும் றொக்கெட் விளையாட்டுக்கழக மைதானத்திலேயே நடைபெறவுள்ளது. இப்போட்டிக்கு விண்ணப்பிக்கும் விளையாட்டுக்கழகங்கள் 077 8934111 எனும் தொலைபேசி இலக்கத்துடன் எதிர்வரும் 3ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன் விண்ணப்பிக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (க)

## சமரபாகு நியூட்டன் வி. கழக உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

### கலைமதி, உடுப்பிட்டி யூத் வெற்றி

வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் சமரபாகு நியூட்டன் விளையாட்டு கழகம் நடத்தும் ஏழு நபர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இன்றைய போட்டியில்.

முதலாவது போட்டியில் நவிண்டில் கலைமதி விளையாட்டு கழகம் எதிர் உடுப்பிட்டி கருணாகரன் விளையாட்டு கழகம் மோதியது. ஆட்ட நேர முடிவில் 3 - 1 என்ற கோல் கணக்கில் நவிண்டில் கலை மதி விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

இரண்டாவது போட்டியில் உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டு கழகம் எதிர் உடுப்பிட்டி யூத் விளையாட்டு கழகம் மோதியது. ஆட்ட நேர முடிவில் 7 - 2 என்ற கோல் கணக்கில் உடுப்பிட்டி யூத் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

இன்றைய ஆட்டத்தில் பலம் பொருந்திய அணிகள் மோதவுள்ளன. கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டு கழகம் எதிர் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் முதலாவது போட்டியில் மோதவுள்ளது.

இளவாலை யங்கென்றீஸ் விளையாட்டு கழகம் எதிர் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் இரண்டாவது போட்டியில் மோதவுள்ளது. (க)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைக்கால பட்ஜெட்டில் நிவாரணங்கள் தேவை!

## ஜே.வி.பி வலியுறுத்தல்

நல்லாட்சி அரசாங்கத்தின் இடைக்கால வரவு- செலவுத்திட்டத்தில் அறிவித்துள்ள நிவாரணங்களை பொதுமக்களுக்கு வழங்குமாறு ஜே.வி.பி. வலியுறுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் மாத்தறை, பொல்ஹேன்கொட பிரதேசத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போது நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்னெத்தி இதனை வலியுறுத்தியுள்ளார்.

கடந்த 100 நாள் அரசாங்கத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால வரவு- செலவுத்திட்டத்தில் பொதுமக்களுக்கு ஏராளம் சலுகைகள் அறிவிக்கப்பட்டிருந்தன.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றிக்கு குறித்த நிவாரண அறிவிப்புகளும் பின்னணிக்காரணியாக இருந்தன.

இதற்கிடையே அடுத்த வருடத்துக்கான வரவு-செலவுத்திட்டம் இன்னும் ஓரிரு வாரங்களில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில், கடந்த இடைக்கால வரவு- செலவுத்திட்டத்தின நிவாரணங்கள் இதுவரை பொதுமக்களுக்கு வழங்கப்படவில்லை என்று ஜே.வி.பி. குற்றம் சாட்டியுள்ளது. (எ-11)

## சர்வதேச விசா...

ணியின் தலைவர் கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 30-வது கூட்டத்தொடரில் இலங்கை போர்க்குற்ற விசாரணை தொடர்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆற்றிய உரை வருமாறு,

ஐ.நாமனிதஉரிமைகள்ஆணையாளர் அலுவலகத்தினால் நடத்தப்பட்ட விசாரணையானது மட்டுப்படுத்தப்பட்ட காலப்பகுதியை மட்டும் விசாரித்து இருந்த போதிலும், இதுவரை காலத்தில் வந்துள்ள அறிக்கைகளுள் இலங்கையில் பாரியளவில் இழைக்கப்பட்ட மிகக் கொடூரமான குற்றங்கள் பற்றிய தகவல்களை பரந்தளவில்சேகரித்துள்ள ஒரு அறிக்கை என்கிற வகையில், ஐநா மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் இலங்கை மீதான விசாரணை அறிக்கையை எமது அமைப்பு வரவேற்கிறது.

அத்தோடு, இந்த ஆராய்வு நடவடிக்கையானது, கடந்த மற்றும் தற்போதைய இலங்கை அரசுகளின் ஒத்துழைப்பின்மையால், இலங்கைக்குள் சென்று சாட்சிகளையோ அல்லது தடயங்களையோ நேரடியாக கண்டுகொள்ள முடியாத மிகவும் இறுக்கமான சூழமைவில் இடம்பெற்றது என்பதையும் நாம் அக்கறையுடன் கருத்தில் கொள்கிறோம்.

அத்தோடு, இலங்கையில் இழைக்கப்பட்ட சர்வதேச சட்டங்களுக்கு எதிரான குற்றங்கள் மீது விரிவான குற்றவியல் விசாரணை ஒன்று மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் இந்த விசாரணையானது ஆகக்குறைந்தது போர் நடந்த முழுமையான காலப்பகுதியை யாவது விசாரிக்கவேண்டும் என்றும் இவ் விசாரணை அறிக்கை பரிந்துரை செய்திருப்பதையும் நாம் வரவேற்கின்றோம்.

பல தசாப்த கால யுத்தம், அவசர கால நிலை மற்றும் குற்றவாளிகள் தண்டனையிலிருந்து தப்பித்து கொள்ளும் சூழல் என்பவற்றால் இலங்கையின் நீதித்துறை மற்றும் பாதுகாப்புத் துறை சீரழிந்து போயுள்ளது என ஐ. நா அறிக்கை குறிப்பிடுகிறது.

இதன் காரணமாக இப்படியான ஒரு விசாரணைக்கு உள்ளகப்பொறிமுறை ஒரு போதும் போதுமானதாக இருக்காது என்பதை ஐ.நா அறிக்கை தெளிவாக வெளிப்படுத்துகிறது.

ஆனால், நீதிவிசாரணைப் பொறிமுறை ஒன்றுக்கான தகைமை இல்லை என்பதை விட, அரசாங்கங்கள் மாறியிருக்கின்ற போதிலும் இலங்கை அரசுக்கு அப்படியான நீதி விசாரணைப்பொறிமுறை ஒன்றிற்கான அரசியல் விருப்பு இல்லை என்பதே முக்கியமானதாகும்.

இந்த அடிப்படையின் பிரகாரம், மேற்குறிப்பிட்டவாறு சிதைந்து உருக்குலைந்து போயுள்ள இலங்கையின் சட்டத்துறையானது பூரணமான ஒரு மீளுருவாக்கத்துக்கு உள்ளாக்கப்படும் வரையிலும், எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய எந்தவொரு குற்றவியல் நீதி விசாரணைப் பொறிமுறையிலும் ஈடுபடுத்தப்படக்கூடாது.

அல்லது அப்படி அவர்களது பிரசன்னம் இருக்க வேண்டுமெனில் ஆகக்குறைந்த பட்சம், ஐ.நாசபையினால் நிர்வகிக்கப்பட்டு முன்னெடுத்துச் செல்லப்படும் ஒரு குற்றவியல் நீதிவழங்கும் பொறிமுறையின் கீழாக ஒரு சிறிய பங்களிப்பை வழங்கலாம்.

ஆனால், கவலைக்குரிய விடயமாக, ஐ.நா மனித உரிமை பேரவையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் உத்தேச பிரேரணை வரைபானது ஒரு குற்றவியல் விசாரணை ஒன்றை நடைமுறைப்படுத்தக்கோரி நிற்கின்ற போதிலும், மனித உரிமை ஆணையாளர் அலுவலக விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த (இலங்கையின் நீதித்துறை மீதான) குறைபாடுகளை கருத்தில் எடுக்கத்தவறியிருக்கிறது.

ஐ.நா மனித உரிமை ஆணையாளரால் முற்றாகவே நிராகரிக்கப்பட்ட உள்நாட்டு பொறி முறையொன்றாகவே நடைமுறையில் இருக்கப்போகின்ற இந்த செயற்திட்டமானது, நம்பகத்தன்மையானது என்கின்ற தோற்றப்பட்டை வெளிப்படுத்துவதற்காக மட்டுமே, வெறுமனே சில வெளிநாட்டு ஈடுபாட்டினை இவ்வரைபு கோரி நிற்கின்றது.

நிறைவாக, இலங்கையில் நியாயமான பொறுப்புக்கூறலும் நீதியும், முழுமையான சர்வதேச குற்றவியல் விசாரணை ஒன்றின் மூலமாக மட்டுமே பெற்றுக்கொள்ளப்படும் என்பதே, யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களில் பெருந்தொகையாகவுள்ள தமிழர்களின் திடமான நம்பிக்கை என்பதை இங்கு வெளிப்படுத்துகிறேன் என்றுள்ளது. (எ-11)

## விசாரணைகளை...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பிலான தீர்மானம குறித்த விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கலப்பு நீதிமன்றக் கட்டமைப்பு ஒன்றின் ஊடாக குற்றச் செயல்களுக்குப் பொறுப்புகூறுதல் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவையினால் இலங்கை தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணை அறிக்கையில் பட்டியலிடப்பட்டுள்ள குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்த சர்வதேசத்தின் பங்களிப்பு அவசியமானது.

சர்வதேசத்தின் பங்களிப்புடனான பொறிமுறைமை உருவாக்கப்பட வேண்டியது அவசியமானது.

2015-ம் ஆண்டு ஜனவரி மாதத்தின் பின்னர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான கைதுகள் மற்றும் சித்திரவதைச் சம்பவங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## பேருந்துகள்...

ளானது.

இக்கோர விபத்தில் சாரதிகள் உட்பட 35க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். படுகாயமடைந்த அனைவரும் மல்லாவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

இவ்விபத்துச்சம்பவம் தொடர்பாக மல்லாவி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-12.15)

# அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படும்!

## இலங்கைப் பிரதிநிதி தெரிவிப்பு

இலங்கையில் வாழும் அனைத்து மக்களினதும் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படும் என்று ஐ.நா.வுக்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க உறுதியளித்துள்ளார்.

இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கை குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், ஒரு நாடு என்ற வகையில் இலங்கை இன்று ஐக்கிய நாடுகள் சபையைப் பிரதிநிதித்துவப் படுத்தி , இலங்கையை வளமிக்க நாடாக கட்டியெழுப்புவதையே எதிர்பார்க்கின்றோம்.

ஐ.நா.வின் உறுப்பு நாடு என்ற வகையில் அனைத்து இனத்தவரினதும் அடிப்படை உரிமைகள், சமஉரிமை சட்டங்கள், நீதித்துறை என்பவற்றை பாதுகாப்பது எங்கள் கடமையாகும்.

கடந்த தேர்தலின் பின்னர் ஜனாதிபதி மற்றும் பிரதமர் இணைந்து அனைத்து இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவது தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்கள்.

இந்த நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். அத்துடன் இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களினதும் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படும் என்றும் ரவிநாத் ஆரியசிங்க உறுதியளித்துள்ளார்.(எ-11)

# ஐ.ம.சு கூட்டணி கணக்கில் 10 ஆயிரமே மீதியாக இருந்ததாம்

## முன்னாள் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த ஜனாதிபதி தேர்தல் ஆரம்பித்த சந்தர்ப்பம் வரையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கணக்கில் 10ஆயிரம் ரூபாய் பணம் மாத்திரமே காணப்பட்டதாக முன்னணியின் முன்னாள் பொது செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

சுயாதீன தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட மகிந்த ராஜபக்ஷவின் ஜனாதிபதித் தேர்தல் விளம்பரங்களுக்கு 104 மில்லியன் ரூபாய் அளவில் செலுத்தப்படவிருந்தமை தொடர்பில் பாரிய முறைகேடுகள் மற்றும் அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு வாக்குமூலம் வழங்க சுசில் வருகை தந்த சந்தர்ப்பத்தில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

காலை 10 மணிக்கு ஆணைக்குழுவில் ஆஜராகிய சுசில் பிரேமஜயந்தவிடம் 12 மணி வரை வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

சுயாதீன தொலைக்காட்சிக்கு வழங்கப்பட்ட விளம்பரங்கள் தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாதென சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. (எ-11)

## மனித உரிமையை...

உரையினை நிகழ்த்தியிருந்தார்.

மனித உரிமைகளை ஏற்றுக் கொள்வதுடன் அதனை பாதுகாப்பது மற்றும் விரிவுபடுத்துவதற்கான புதியசெயற்பாட்டு வேலைத்திட்டம் ஒன்றை செயற்படுத்துவதற்கு எதிர்பார்த்திருப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

அமைதி காக்கும் நடவடிக்கைகளுக்கான இலங்கையின் பங்களிப்பை மேலும் மேம்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும்,

அத்துடன் கடந்த காலத்தை நேர்மையாக கையாள்வது மற்றும் நவீன இலங்கையை கட்டியெழுப்புவது எங்கள் முன்னுள்ள பிரதான தேவையாக உள்ளது.

இலங்கை தெற்காசிய வலயத்தில் பழமையான ஜனநாயக உரிமைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடுகளில் முன்னிலையில் இருக்கின்றது.

சுதந்திரம் அடைந்ததில் இருந்தே, இலங்கைக்கு நெருக்கடிகள் இருந்தபோதிலும் கூட மனித வள மேம்பாட்டு குறியீடுகள் உயர்ந்த அளவில் காணப்படுகின்றது என்றார்.

நிலையான வளர்ச்சிக்கு உந்துசக்தியாக இருப்பது இளைஞர்களே. 21 ஆம் நூற்றாண்டில் இளைஞர்கள், அறிவை அடிப்படையாகக் கொண்ட உலகை வெல்வதற்கு முடியுமான திறமைகளுடன் கூடிய தொழில் படையினராக மாற்றுவது எங்களின் முதற் குறிக்கோளாக உள்ளது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். (எ-11)

# மீண்டும் மரண பீதி

## - மகிந்த ராஜபக்ஷ

நாட்டில் மீளவும் மரண பீதி தலைதூக்கியுள்ளதாக,முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டு பிள்ளைகளின் இதயங்களிலிருந்து நாம் வெளியேற்றிய மரண பீதி இன்று வேறு வழியில் தலைதூக்கியுள்ளதாக அவர குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலைமை பெரும் அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சேயா, வித்தியா உள்ளிட்ட அண்மையில் கொலையுண்ட அனைத்து சிறுவர் சிறுமியரின் மரணங்களும் தம்மை உலுக்கியதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டில் வாழும் அனைத்து சிறுவர் சிறுமியரதும் பாதுகாப்பினை உறுதி செய்ய வேண்டியது ஆட்சியாளர்களினதும் கடமையாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## இலங்கை மீதான...

உரிமை ஆணையாளரின் அறிக்கைக்கு பதிலளித்து உரையாற்றினார். அவருக்கு உரையாற்ற 5 நிமிடங்கள் வாய்ப்பளிக்கப்பட்டது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானத்துக்கு இலங்கை இணை அனுசரணை வழங்குவதாகவும், தீர்மானத்தின் பரிந்துரைகளை நிறைவேற்ற ஒத்துழைப்பதாகவும் இலங்கைப் பிரதிநிதி தெரிவித்தார்.

இதையடுத்து, ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதி உரையாற்றினார். இதனையடுத்து அயர்லாந்துப் பிரதிநிதியின் உரை இடம்பெற்றது. (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தந்தையரை விடுவிக்க கோரி...

மைச்சரின் அலுவலகத்திற்குச் சென்று தமது தந்தையரை விடுதலை செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுத்து உதவுமாறு கோரி ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

நீண்ட காலமாக விசாரணைகளின்றியும், வழக்குத் தாக்கல் செய்யப்படாமலும் தமிழ் அரசியல் கைதிகள் பலர் சிறைச்சாலைகளில அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் விடுதலைக்காக பல்வேறு போராட்டங்கள் பலதரப்பினராலும் நடத்தப்பட்டிருந்தன. அரசியல் கைதிகளை பொது மன்னிப்பளித்து விடுதலை செய்ய வேண்டும் என அரசியல் கட்சிகளும் அரசியல்வாதிகள் பலரும் அரசாங்கத்திடம் கோரி வந்துள்ளனர். இது விடயத்தில் அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளிலும் இந்த விடயம் முன்னுரிமைப்படுத்தப்பட்டு அரசியல் கைதிகளின் விடுதலை துரிதப்படுத்தப்படும். அவர்களுக்கு எதிரான வழக்கு விசாரணைகள் விரைவுபடுத்தப்படும் என்றெல்லாம் அரச தரப்பில் உறுதியளிக்கப்பட்டிருந்தது.

இத்தகைய பின்னணியில், ஐ.நா. மனித உரிமைப் பேரவையினால் இலங்கை அரசாங்கம் பொறுப்பு கூறும் விடயத்தில் நடத்திய விசாரணை அறிக்கை தொடர்பாக ஆராயப்பட்டு வரும் வேளையில் தமிழ் அரசியல் கைதிகளை பொதுமன்னிப்பளித்து விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக் கையை முன்வைத்து அந்தக் கைதிகளின் பிள்ளைகள் கவனயீர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறு பிள்ளைகளின் இப்போராட்டம் பொதுமக்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியிருந்ததோடு போராட்டத்தில் கலந்து கொண்டிருந்த சிறுவர் மற்றும் சிறுமியர் எமது அப்பா எமக்கு வேணும். நாங்கள் கஷ்டப்படுகின்றோம் என அழுகையுடன் ஊடகவியலாளர்களுக்கு கூறியிருந்தனர். (எ-4)

## சந்திரிகா...

சந்திரிகா குமாரதுங்க அம்மையார் கடந்த 1999ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் தொடர்பான பிரசார நடவடிக்கையின்போது அவரை இலக்கு வைத்து குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் 26 பேர் கொல்லப்பட்டது. இன அழிப்பு குற்றமாகும் என அரச தரப்பு வாதிட்டது.

எனினும் இந்தத் தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு செய்யப்படும் என்று தண்டனை விதிக்கப்பட்டுள்ளவர்களின் வழக்கறிஞர் தெரிவித்துள்ளார்.

இதே வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டிருந்த மேலும் ஒருவருக்கு கடந்த 2010ஆம் ஆண்டு 270 வருடங்கள் சிறை தண்டனை விதிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது. (எ-11)

## பேருந்துகள்...

மையில் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சியிலிருந்து மல்லாவி நோக்கி ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் பெண்களை ஏற்றிச் சென்ற பேருந்தும் மல்லாவியிலிருந்து நட்டான்கண்டல் நோக்கிச் சென்ற பேருந்தும் நேருக்கு நேர்விபத்துக்குள். 23ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கை...

ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கும் இச்சந்திப்பில் அவர் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கையின் புதிய அரசாங்கத்தின் கீழ் ஏற்பட்டு வரும் மாற்றங்களைத்தாம் மதிப்பதாகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கூறியுள்ளார்.

இதன்போது, நாட்டில் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதில் தான் உறுதியாக இருப்பதாக குறிப்பிட்ட இலங்கை ஜனாதிபதி, நாட்டின்வறுமை ஒழிப்புக்கு அமெரிக்கா உதவ வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

இதற்கு, இலங்கைக்குத் தேவையான முழுமையான உதவிகளை தனது அரசாங்கம் வழங்கும் என்று மைத்திரிபால சிறிசேனவிடம் பராக் ஒபாமா உறுதியளித்துள்ளார். (எ-11)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


## மகாஜனன்களின் ஒன்றுகூடல்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர்களுக்கிடையிலான உறவினையும் பழைய மாணவர்களுக்கும் கல்லூரிக்குமிடையிலான தொடர்பினையும் வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு கல்லூரியின் பழைய மாணவர் சங்கமானது மகாஜனன்களுக்கான இராப்போசனத்துடன் கூடிய ஒன்றுகூடல் ஒன்றினை 25-10-2015 (ஞாயிறு) மாலை 5.00 மணிமுதல் நடத்துவதற்கு உத்தேசித்துள்ளது.

இதில் கலந்து கொள்ளுமாறு மகாஜனன்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்வதுடன் வரையறுக்கப்பட்டளவு நுழைவுச் சீட்டுக்களே அச்சிடப்பட்டுள்ளதால் உங்களுக்கான நுழைவுச் சீட்டுக்களை கல்லூரியிலோ அல்லது பழைய மாணவர் சங்க நிர்வாக சபை உறுப்பினர்களிடமோ பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

**மகாஜனன்கள் ஒன்றிணைவோம்**
**மகாஜனாவை வளப்படுத்துவோம்!**

(1933)

**பழைய மாணவர் சங்கம்**
**மகாஜனக் கல்லூரி,**
**தெல்லிப்பழை.**



## தென்னிந்திய யாத்திரை

தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, பாண்டிச்சேரி ஊடான யாத்திரை
நாள்கள் : 16, யாத்திரீகர்கள் : 10, ஆரம்பம் : 15.10.2015

மலைக்கோட்டை விநாயகர், திருப்பதி, குருவாயூர் மைசூர், சாமுண்டீஸ்வரி, மணக்குழ விநாயகர், பஞ்சவடி, நவக்கிரக ஆலயங்கள், ஆறுபடை வீடுகள், சரஸ்வதி கோயில் உட்பட 60 இற்கு மேற்பட்ட ஆலயங்களை தரிசிக்கலாம்.

எமது சேவை : இருவழி விமான ரிக்கட், மூன்று வேளை உயர்தர சைவ உணவு, 2 பேருக்கு குளியல் அறை இணைந்த சுகாதாரமான அறைகள், எயார் போட் போக, வர வாகன வசதி, ஒரு லீற்றர் மினரல் வோட்டர் யாத்திரை முடியும் வரை, A.C வாகன வசதி, 4 மணி காப்பி, ரீ, ஆலய தரிசனக்கட்டணங்கள், ஆலயங்களில் குறூப்பாக எடுக்கும் 50 படங்கள் நாடு திரும்பிய பின் அன்பளிப்பாக அனுப்பிவைக்கப்படும். விவரங்களை கேட்டறிந்து பதிவு செய்யவும்.

## காசி யாத்திரை

நாள்கள் : 10, யாத்திரீகர்கள் : 15, ஆரம்பம் : 10.11.2015

டெல்லி, காசி, காயா, புத்தகாயா, அலகாபாத் (கங்கா, ஜமுனை, சரஸ்வதி, திருவேணி சங்கமம்), சீத்தாமடி, அயோத்தி, நைமிசரண்யம், இராமேஸ்வரம் ஆகிய ஆலயங்களை தரிசிக்கலாம்.

குறிப்பு : மடப்பள்ளி ஐயர்கள் சமையல் ஆள் சமைப்பதால், குருக்கள் சமூகத்தினர் தயக்கமின்றி கலந்து கொள்ளலாம். இருவழி விமான ரிக்கட், மடப்பள்ளி ஐயர் சமையல் ஆட்கள் சமைத்த, மூன்று வேளை சுத்தமான சைவ உணவு, இரண்டு பேருக்கு குளியல் அறை இணைந்த அறைகள், ஒரு லீற்றர் மினரல் வோட்டர், A.C வாகன வசதி, எயார் போட் போக, வர வாகன வசதி, விவரங்களை கேட்டறிந்து பதிவு செய்யவும். வயதானவர்களுக்கு சிறப்புரிமை உண்டு.

(C-2332)

**தொடர்பு : கலாநிதி ஸ்ரீ ரெங்கநாதன், மகன் - ராஜன்**
**T.P - 0777680102, 0777362154**
**FB : Sridevi Sriranganathan thuraiappa**



## இலங்கை அதிபர் சேவையின் 3 ஆம் வகுப்பிற்கு தெரிவு செய்வதற்கான போட்டிப்பரீட்சைக்கு வழிகாட்டல்

**செயலமர்வு - 2015 : தொடர் -07**

காலம் : 03, 04/10/2015 (சனி, ஞாயிறு)
காலை 8.30 - மாலை 3.30
இடம் : புதிய உயர் கலைக்கல்லூரி,
ஆரியகுளம் சந்தி - யாழ்நகர்

யாழ்ப்பாணம், மன்னார்,
வன்னிப்பிராந்தியம், ஏனைய
பிரதேசங்களுக்கும் ஒரே இடத்தில்

துறைசார் நிபுணத்துவம் வாய்ந்த அறிஞர்களால்
விடய ஆய்வு அணுகுமுறை, கிரகித்தல் பிரயோகம்
பொது அறிவு மீள்பார்வை!

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி நடைபெறும் பரீட்சைக்கான விசேட வழிகாட்டல் செயலமர்வு.

பங்குபற்றுநர்கள் முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.

(1931)

தொலைபேசி இல:
0770681958

பா. தனபாலன் (பணிப்பாளர்)
ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகம்
528, பலாலி வீதி, திருநெல்வேலி.



## A/L பொருளியல்

**MCQ BOOK - 1** ரூபா 90/-

புதிய வினாத்தாள் அமைப்பில் மேலதிக மீட்டல் வினாக்களுடன்

**2015 A/L பரீட்சையில் 99 புள்ளிகள்**

பெறுவதற்கு வழிவகுத்த மற்றும் பொருளியல் நூல்கள்

**ஆசிரியர் வே. கருணாகரன்**

(1936)

பூபாலசிங்கம் புத்தகசாலை
அன்னை புத்தகசாலை





## Step in to a Rewarding career in Sales in the Banking sector after A/L's
## Walk-in with your CV

Nations Trust Bank PLC, Progressive, fast-growing and technologically-driven, where dynamism and vision combine the best practices in order to provide customers with convenient services that place the Bank alongside the front-runners in the industry. Our long-term plans need dynamic individuals with vitality, dedicated and determination.

**BUSINESS DEVELOPMENT ASSISTANTS**

This is the ideal stepping stone to launch a rewarding career in sales in the banking sector.

**The Challenge**

- Promoting the bank's products & services: Credit Cards, Personal Loans, Housing Loans & Deposit products.
- Selected candidates will be offered employment on a fixed term contract basis, with an attractive remuneration package which includes Bonus on Sales above the industry standards.

**Requirements**

- Passion for sales
- An outgoing personality & Excellent inter personal skills
- Completion of GCE O/L examination

**Walk-in with your CV**

- 06th October, 2015
- Gnanam Hotel, Clock Tower Road, Jaffna
- 10.00 a.m. – 03.00 p.m.

Nations Trust Bank PLC is a licensed commercial Bank Supervised by the Central Bank of Sri Lanka

(1935)

Nations TrustBank


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.